133

மதுரை

சுதந்திரத் தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR ...
11 JAN ...



133
1-50

TB
031(5)
N49
87996

...ாலகிருஷ்ணக் கோன்,
...ா சென்னை.

மதுரை

சுதந்திரத் தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பு

பண்டித. G. விசுவாசம்

தமிழாசிரியர்

ஸெயின்ட் மேரீஸ் உயர்தரக் கலாசாலை

மதுரை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1950
MADRAS

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை சென்னை

பதிப்புரிமை] 1949 [விலை அணா 10½.

முதற் பதிப்பு—1949

87996

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:—49.

முகவுரை

அரசாங்கத்தார் வகுத்துள்ள பாடத்திட்டங்களுக்கு இணங்க 'சுதந்திரத் தமிழ் வாசகம்' என்ற பெயருடன் வெளி வரும் வாசக வரிசையில் இது ஐந்தாம் புத்தகமாகும். இதன்கண் மாணவர்கள் உற்சாகத்துடன் படிக்குமாறு எளிய இனிய நடையில் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. மாணவர்க்கு, நாட்டுப்பற்று, உழைப்பின் உயர்வு, பெரியோர்களிடத்து மரியாதை முதலிய நல்லியல்புகளை வளர்க்கும் வண்ணம் புதிய புதிய கருத்துக்களை விளக்குவனவாய்ப் பாடங்கள் அமைந்துள்ளன. பாடங்களின் முதலில் கொடுக்கப்பட்டுள்ள புதிய சொற்களும், முடிவிலுள்ள வினாக்களும், பயிற்சிகளும் மாணவர்களுக்கு மொழியறிவில் நல்ல பயிற்சியளிக்குமென்றே நம்புகின்றேன். 3, 4, 7, 8, 10, 12, 14, 18, 19, 22, 26, 27-வது பாடங்கள் மௌன வாசிப்புக்கு உரியனவாகக் கொள்ளத்தகும்.

ஆக்கியோன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 1950
MADRAS

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1	நமது தாயகம் ...	1
2	அன்பே கடவுள் ...	4
3	திருவள்ளுவர் ...	7
4	முயற்சி திருவினை யாக்கும் ...	11
5	மஞ்சள் ...	14
6	பிறந்த நாடு ...	17
7	அறம் வளர்த்த அம்மையார் ...	18
8	இராஜ ராஜ சோழன் ...	22
9	தீக்குச்சி செய்தல் ...	25
10	தந்திரமுள்ள குரங்கு ...	29
11	நூல் நிலையங்கள் ...	34
12	அசோகர் ...	38
13	உடற் பயிற்சி ...	42
14	வீரமாமுனிவர் ...	46
15	சித்திர விளக்கம் ...	50
16	பாரத தேசம் ...	52
17	விஞ்ஞானக்கலைஞர் ...	53
18	அராபியப் பெண்கள் ...	59
19	விவேகானந்தர் ...	63
20	இசைக்கலை ...	67
21	எனது பிரயாணம் ...	70
22	சரியான தீர்ப்பு ...	74
23	சிறு சேமிப்புத் திட்டம் ...	77
24	நமது கம்பன் ...	81
25	சித்திர விளக்கம் ...	82
26	செங்குட்டுவன் வீரம் ...	84
27	சாந்தி நிகேதனம் ...	87
28	நாட் குறிப்புப் புத்தகம் ...	90
29	விஞ்ஞானமும் சரித்திரமும் ...	93
30	பத்திரிகைச் செய்தி ...	97
31	கரிகாலன் (நாடகம்) ...	100
32	மகாத்மாவின் உபதேச மொழிகள் ...	106
33	மகாத்மா காந்தி பஞ்சகம் ...	107
34	சில கடிதங்கள் ...	109
35	கட்டுரைப் பயிற்சி ...	112
	செய்யுள்	
1	வாக்குண்டாம் ...	114
2	நல்வழி ...	115
3	நன்னெறி ...	117
4	கதைப் பாட்டு ...	118
5	பல்சுவை ...	120

மதுரை

சுதந்திரத் தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பு

---

1. நமது தாயகம்

கற்பு	பழமை	கூறுகள்	அந்நியர்
மதம்	சமயம்	கலைஞன்	வேட்கை
அரண்	முனிவர்	கவிஞன்	இயக்கம்
ஆட்சி	தாயகம்	அண்மை	வழிமொழி
சூழ்ச்சி	வள்ளல்	நாகரிகம்	செங்கோல்

நமது நாடு, இந்தியா, பாரத தேசம் என்னும் பெயர்களையுடையது. இது மிக மிகப் பழமையான நாகரிகச் சிறப்பையுடையது; உலகம் புகழும் மதத் தலைவர்களையும், முனிவர்களையும், வீரர்களையும், செங்கோல் மன்னர்களையும், வள்ளல்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், கற்பிற் சிறந்த பெண்மணிகளையும், வீரத் தாய்மார்களையும் பெற்றுத் தன்னிகரற்று விளங்குவது.

இது, வடக்கே இமயத்தையும், தெற்கே குமரிமுனையையும், கிழக்கும் மேற்கும் கடல்களையும் எல்லைகளாக உடையது. உலகத்திலேயே உயர்ந்த இமயமலை இதற்கு வட வெல்லையாகவும், இயற்கை யரணாகவும் நிமிர்ந்து நிற்கின்றது. இந்நாட்டின் வட பகுதி இந்துஸ்தானம் என்றும், தென்பகுதி தென்னிந்தியா என்றும் வழங்கப்படும். இதன் நடுவிலுள்ள விந்தியமலையால் நாடு இயற்கையாகவே இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. வட இந்தியாவில்

கங்கை, சிந்து முதலிய நதிகளும், தென்னிந்தியாவில் கோதாவிரி, காவிரி, தென்பெண்ணை, வையை, தாமிரபரணி முதலிய நதிகளும் வளம் செய்து ஓடுகின்றன.

வட இந்தியாவில் வடமொழியின் வழிமொழிகளாகிய ஹிந்துஸ்தானி, வங்காளி, குஜராத்தி முதலிய மொழிகளும், தென்னிந்தியாவில் திராவிட இனமாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளும் பேசப்படுகின்றன.

வட நாட்டில் ராஜபுத்திரர்களும், குப்த வமிசத்தினரும், முகம்மதிய-மொகலாய பரம்பரையினரும் ஆட்சி புரிந்திருக்கின்றனர். தென்னிந்தியாவில் மிகப் பழங்கால முதலாக, சேர சோழ பாண்டியர் என்ற முத்தமிழ் வேந்தர் ஆட்சிபுரிந்து வந்திருக்கின்றனர். அவர்களுக்குப் பின் தென்னாடு சிறு சிறு நாடுகளாகப் பிரிந்து, பல சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்படலாயிற்று.

வாணிபத்தின் பொருட்டு இங்குவந்த பல அந்நிய நாட்டாருடன் ஆங்கிலேயரும் வந்தனர். அவர்கள் மக்கள் நிலையாலும், அரசியல் சூழ்ச்சியாலும், புதிய போர் முறைகளாலும் நாட்டை அடிமைப்படுத்தி, நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாக ஆண்டுவந்தனர். அதன் பின் நமது நாட்டில் சுதந்திர வேட்கை யுண்டாயிற்று. பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி போன்ற பெரிய தலைவர்களால் சுதந்திர இயக்கம் வலுத்தது. முடிவில் 1947-ஆம் ஆண்டு நமது நாடு சுதந்திரம் பெற்றது. நமது மாபெரும் தலைவர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அது உலகின் முன் தலைநிமிர்ந்து நின்று, தன் பழம் பெருமையை நிலைநாட்டி வருகின்றது.

நமது தாயகமானது பரந்த ஒரு நாடாகும். இதன்கண் சுமார் முப்பத்தைந்து கோடி மக்கள் வாழ்கின்றார்கள். இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்வோர் பல்வேறு

மொழிகளைப் பேசுவோராவர்; வேறு வேறு நடை, உடை, எண்ணம் உடையவர்கள்; பல்வேறு சமயக்கொள்கைகளையும் உடையவர்கள். என்றாலும், "நாம் யாவரும் ஒரே நாட்டு மக்கள்'' என்ற உணர்ச்சி நம்மிடம் குடிகொண்டிருக்கிறது. இதுவரையில் நடந்த சுதந்திர இயக்கத்தில் இவ்வுணர்ச்சி மேலும் வளர்ச்சியுற்று வருகிறது. ஆதலால் எல்லா மதத்தினரும், எல்லா மொழியினரும் ஒற்றுமை யுணர்ச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் நம் தாயகத்திற்கு உழைப்பார்களாக.

வினாக்கள்

1. நமது தாயகத்தின் பெருமை யாது?

2. நம் நாட்டின் அமைப்பு பற்றிக் கூறுக.

3. நம் நாட்டு அரசர்களையும், வழங்கி வந்த மொழிகளையும் பற்றி விளக்குக.

4. நமது நாடு எவ்வாறு அடிமைப்பட்டது?

5. பின் எவ்வாறு அடிமைத்தளையினின்று நீங்கிச் சிறப்புற்றுளது?

பயிற்சி

1. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க:

வேட்கை, யாவரும், உணர்ச்சி, தாயகம்.

2. எதிர்ப்பதம் கூறுக:

பழமை, பரந்த, புகழும், வீரர், நாகரிகம்.

3. 'வீரர் தோன்றினர்' வீரர் என்பது பெயர்ச்சொல். தோன்றினர் என்பது வினைச்சொல். இவ்வாறு பொருளுக்குப் பெயராக வருவது பெயர்ச்சொல். அப்பொருள் செய்யும் செயலைக் கூறுவது வினைச்சொல்.

2. அன்பே கடவுள்

சீர்	இனம்	இன்பம்	வழுத்தல்
குடி	அன்பு	உயரிய	ஆன்ருேர்
பக்தி	வாக்கு	கண்டம்	நேசித்தார்
சுகம்	அறிஞர்	வாய்ந்த	சுயேச்சை
அணி	பருவம்	சுனைகள்	போதித்தல்
ஞானி	அமுதம்	வாலிபம்	போற்றுதல்
துறவி	கர்த்தர்	தத்துவம்	அனுபவித்தல்

"அன்புடையார் எல்லாம் உடையார்; அன்பிலார் ஏதும் இலாதவர்" என்பது ஆன்ருேர் அமுதவாக்கு. நாம் நமது பெற்ருேரைக் கண்டால் மகிழ்கிருேம்; நண்பரைக் காணின் இன்பம் அடைகிருேம்; உதவி செய்தவரைக் கண்டால் அவர்களைப் போற்றுகிருேம். இதற்குக் காரணம் என்ன? அவர்கள் ஒவ்வொருவரும் நம்மிடம் வைத்துள்ள அன்பேயாகும். கடவுள் நமக்குச் செய்யும் உதவிகளை அன்பர்கள் மூலமாகவே செய்கின்ருர். ஆதலால், "அன்பே கடவுள்" என்று அறிஞர் கூறுகின்றனர்.

அத்தகைய அன்பே உருவாய்த் தோன்றி உலக உயிர்களுக்கு உதவி புரிந்த ஒரு பெரியாருடைய கதையைப் படிப்போம்.

முன்ஒெரு காலத்தில், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இத்தாலி தேசத்தில் மிகவும் பக்தி வாய்ந்த ஒரு பெரியார் இருந்தார். அவர் செல்வக் குடியில் பிறந்து வளர்ந்தவர்; நல்ல சுகத்தை அனுபவித்தவர். அவர் வாலிபப் பருவத்தை யடைந்ததும், தாம் உடுத்திருந்த உயரிய ஆடைகளையும், அணிகளையும் வெறுத்தார்; துறவிகளைப் போல ஆடையுடுத்திக்கொண்டு, தம் மாளிகையை விட்டு நீங்கிப் பல இடங்களுக்குச் சென்ருர். அவரே பிரான்ஸிஸ் ஞானியார்.

மிகச் சீரும் சிறப்பும் வாய்ந்த அவர், நடந்தே பல இடங்களுக்குச் சென்ருர்; மக்கள் யாவருக்கும் கடவுளின் உண்மைத் தத்துவத்தை விளக்கிப் போதித்தார். அவர் மக்களின் இனத்தை மட்டுமன்றி, பறவைகளையும் விலங்குகளையும் நேசித்தார்.

ஒரு நாள் அவர் பறவைகளைப் பார்த்து ஓர் உபதேசம் செய்தார். அப்பொழுது பறவைகள் ஓசை யிடாதிருந்தன. அவர் சொல்லியதாவது:— "எனது அன்பார்ந்த இளஞ்

சகோதரிகளே, பறவைகளாகிய நீங்களும் கர்த்தருக்கு மிகுதியும் கடமைப் பட்டிருக்கிறீர்கள். அவர் உங்களுக்கு ஆகாயத்தையும், சுயேச்சையையும் அளித்திருக்கிருர்; உங்களுக்கு உணவையும் அமைத்திருக்கின்ருர்; உங்கள் தாகத்தைத் தணிப்பதற்குச் சுனைகளையும், ஆறுகளையும் உண்டாக்கி யிருக்கின்ருர்; நீங்கள் கூடுகள் கட்டிக்கொண்டு வாழ்வதற்கு அழகிய மரங்களை உண்டுபண்ணி யிருக்கிருர். அவர் உங்களை மிகுதியும் நேசிக்கிருர். ஆகையால், நீங்கள்

எப்பொழுதும் அவரை வழுத்துங்கள்'' என்பதே. அதைக் கேட்ட பறவைகள் மிகவும் இனிதாகப் பாடிப் பறந்து சென்றன.

மற்றொரு நாள் ஞானியார் வெளியே செல்லும் பொழுது, ஒருவன் சில புறாக்களைக் கூட்டில் அடைத்து வைத்துக்கொண்டு விற்பதைக் கண்டார். உடனே அவர், அவைகளை விலை கொடுத்து வாங்கி, தமது மடத்திற்குக் கொண்டு போய், அங்கே அவைகளுக்குக் கூடுகள் அமைத்து, அவற்றில் அவைகளை வசிக்கும்படி செய்தார். மக்கள் ஞானியாரது ஒழுக்கத்தையும், அருளுடைமையையும் நினைந்து நினைந்து அவரைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

வினாக்கள்

1. 'அன்பே கடவுள்' என்பதை விளக்குக.
2. பிரான்ஸிஸ் ஞானியார் உயர்ந்த வாழ்வை வெறுத்தது ஏன்?
3. அவர் பறவைகளை நோக்கிக் கூறியதென்ன ?
4. அவர் பிற பிராணிகளிடத்து மிகுதியும் அருளுடையவர் என்பதை விளக்கும் ஓர் நிகழ்ச்சியைக் கூறுக.

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்களையும், வினைச் சொற்களையும் கூறுக:

   (1) நாம் உதவி செய்தவரைப் போற்றுகிறோம்.
   (2) நான் சென்றேன்.
   (3) அவர் நீதிகளைப் போதித்தார்.

2. அவர் உங்களை நேசிக்கிறார். இவ்வாக்கியத்தை, நீங்கள் அவரால் நேசிக்கப்படுகிறீர்கள் என்று மாற்றி எழுதலாம்.

   பின்வரும் வாக்கியங்களை இம்மாதிரி மாற்றி எழுதுக:

   (1) நான் கதை படித்தேன்.
   (2) பலரும் அவரைப் பாராட்டினர்.

3. திருவள்ளுவர்

சாதி	சமயம்	இயற்றி	அற்புதம்
அறம்	கோவில்	இல்லறம்	காலமானர்
குணம்	மணந்து	வான்புகழ்	குறிப்பறிந்து
புலமை	குறட்பா	பெயர்த்து	ஏறக்குறைய
அன்பர்	நாயகன்	நீதி நூல்களை	நெசவுத்தொழில்

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நந்தமிழ் நாட்டில் பல புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் பல சாதியினர்; பல சமயத்தினர். அவர்கள் பாடிய பாடல்கள் பல; இயற்றிய நூல்கள் பல. அப்புலவர்களில் சிறப்பாகப் பாராட்டப் படுபவர் சிலர். அவருள் திருவள்ளுவரும் ஒருவராவர். இவர் மற்றப் புலவர்களைவிடப் புலமையில் பெரியவராக விளங்கினர்; அதனல் இவரைப் பெரு நாவலர் என்று அழைப்பாராயினர். இவர் கல்வியிற் சிறந்து விளங்கியதனல் தெய்வப் புலவரெனவும் அழைக்கப்பட்டார். இவர் தாய் தந்தையரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

இவர் திருமயிலையில் இருந்ததாகக் கூறுவர்; குற்றமற்ற நெசவுத்தொழிலைச் செய்து வந்தார்; சிறந்த உயர் குணத்தையுடைய வாசுகியார் என்பவரை மணந்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். வாசுகியார் தம்முடைய நாயகன் குறிப்பறிந்து அவருக்கு ஏற்றபடி நடந்து வந்தார்.

இவர், மக்கள் நலம் கருதித் திருக்குறள் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றி இருக்கிறார். அந்த நூல் மிகச் சிறந்த ஒழுக்க நூலாக உலகத்தாரால் போற்றப்படுகிறது; எல்லாச் சாதியாருக்கும் எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவாக வுள்ளது. அதனல் திருக்குறள் உலகப் பொது நூலாக விளங்குகின்றது. இந்த நூலை, அக் காலத்திலிருந்த சங்கப்புலவர்கள் பலரும் மிகவும் புகழ்ந்து பாடி

யிருக்கிறார்கள். திருவள்ளுவருக்குப் பிற்காலத்தில் தோன்றிய கம்பர் முதலிய பெரும் புலவர்களும் இந்தத் திருக்குறளைப் புகழ்ந்திருக்கிறார்கள். சமீப காலத்தில் இருந்த சுப்பிரமணிய பாரதியாரும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாடியிருக்கிறார். இந்த நூல் எல்லா மக்களுக்கும் பொதுவான நூலாக விளங்குவதால், இது வடநாட்டு மொழிகளி

லும் பெயர்த்தெழுதப் பட்டிருக்கின்றது. இதன் சிறப்பை நன்கு உணர்ந்த போப் முதலிய மேனாட்டறிஞர்கள் பலராலும், தம் நாட்டார் பலரும் அறியும்படியாக ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பல மொழிகளிலும் பெயர்த்து எழுதப் பட்டிருக்கின்றது. இந்நூல் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது

பாட்டுக்கள் இருக்கின்றன. இந்தப் பாட்டுக்கள் இரண்டே அடிகளையுடையனவாதலால் குறட் பா எனப்படும். இதன் கண் இல்வாழ்க்கையின் சிறப்பு, துறவியின் இயல்பு, அரசர்,அமைச்சர் முதலியோரின் இயல்புகள், நீதி முறைகள், மக்கள் கைக்கொள்ளுதற்குரிய நற்குணங்கள், நல்லொழுக்கங்கள் முதலியவை எல்லாம் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மக்களுக்கு வேண்டியன வெல்லாம் இதன்கண்ணே அமைந்துள்ளன. இவற்றை நன்ருகக் கற்றவர்கள் வேறு நீதி நூல்களைக் கற்கத் தேவை யில்லை.

இவர் சிறப்பாகத் திருமயிலையில் வாழ்ந்து வருகையில், அவருடைய மனைவியார் இறந்தார். தம் மனைவியார் பிரிவுக்கு ஆற்ருது,

அடிசிற் (கு) இனியாளே அன்புடையாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என் தூங்கும் என்கண் இரா.

என்று வருந்திப் பாடினர்; பின் தமது அறிவால் தேறுதல் அடைந்தார். இவர் பல அற்புதங்களைச் செய்தார். பிறகு திருமயிலையிலேயே காலமாயினர். இவரது சிறப்பைப் பற்றிப் பலரும் பலவாறு புகழ்வார்கள். மயிலாப்பூரில் இவருக்கு ஒரு கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அன்பர்கள் பலர் இன்றும் இப்பெரியார் கோவிலுக்குச் சென்று வணங்கி வருகின்ருர்கள்.

விளுக்கள்

1. வள்ளுவனருக்கு வழங்கிவரும் பெயர்களும், அவை வழங்கும் காரணமும் கூறுக.

2. வள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கி வரைக.

3. திருக்குறள் எவ்வாறு தனிப் பெருமை யுடையது?

4. வள்ளுவனரையும், அவரது குறளையும் பிற பெரியோர் எவ்வாறு புகழ்ந்துள்ளனர்?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க:

(1) திருக்குறள் எல்லோருக்கும் ——— நூலாக விளங்குகின்றது.

(2) வாசுகியம்மையாரை மணந்து ——— இனிது ——— வந்தார்.

(3) இவற்றை நன்றாக ——— வேறு ——— கற்கவேண்டுவதில்லை.

2. பொருள் கூறுக:

பால், நூல், அடி.

3. பின்வரும் வாக்கியங்களைக் கருத்துடன் படி.

(1) புலவர் வாழ்ந்தனர்.

(2) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

முதல் வாக்கியத்தில் 'வாழ்ந்தனர் 'என்பது வினைச்சொல். இது புலவர் செய்த செயலாக வுள்ளதால் பொருள் முடிந்துள்ளது. வாக்கியத்தில் இம்மாதிரிச்செயலைக் குறித்துப் பொருள் முடிந்து வரும் சொல்லுக்குப் பயனிலை என்று பெயர். பயனிலையாக வரும் செயலைச் செய்தவனை அல்லது செய்த பொருளைக் குறிக்கும் சொல்லுக்கு எழுவாய் என்று பெயர். ஆகவே முதல் வாக்கியத்தில் 'புலவர்' எழுவாய்.

இரண்டாம் வாக்கியத்தில் 'திருவள்ளுவர்' எழுவாய். 'இயற்றினார்' பயனிலை. இங்கு வேறொரு சொல் இருக்கிறது. எதை இயற்றினார்? என்ற கேள்விக்கு அது விடையாக வருகிறது. இவ்வாறு பயனிலைக்குமுன் 'எதை' அல்லது 'யாரை' என்று வைத்துக் கேட்டால், வரும் விடை பயனிலையாக வரும் செயலின் பயனை அடைந்த பொருளாகும். இதற்குச் செயப்படு பொருள் என்று பெயர்.

4. முயற்சி திருவினையாக்கும்

மீட்க	முயற்சி	இகழ்ச்சி	இடையூறு
பகை	பயந்து	நேர்ந்தது	உதாரணம்
சிலந்தி	ஊக்கம்	உட்பட்டு	தக்கசமயம்
திறமை	ஊறுகள்	திரட்டுதல்	எதிர்பார்த்து
வலிமை	திருவினை	பின்னுதல்	பட்டமடைதல்

'முயற்சி திருவினையாக்கும்', 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்,' 'விடாமுயற்சி வெற்றி தரும்' என்னும் வாக்கியங்களைக் கவனியுங்கள். ஒருவர் ஒரு தொழிலைச் செய்யுங்கால், இடையில் பல ஊறுகள் வருவது இயற்கை. எத்தகைய இடையூறுகள் வரினும், நாம் அவற்றைக் கருதாது விடாமுயற்சியுடன் செய்து வருவோமாயின், முடிவில் வெற்றி பெறுவோம் என்பது உறுதி. அதற்கு உதாரணமாகக் கீழே வரும் கதையைப் படிப்போம்.

இங்கிலாந்து, ஸ்காத்லாந்து என்ற இரண்டு நாடுகளும் சேர்ந்த தீவுக்குக் கிரேட் பிரிட்டன் என்று பெயர். இக்காலத்தில் இவ்விரண்டு நாடுகளும் ஒரே ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றன. முற்காலத்தில் இவ்விரு நாடுகளும் பிரிந்து வெவ்வேறு அரசருக்கு உட்பட்டிருந்தன.

இங்கிலாந்தில் முதலாவது எட்வர்டு அரசராக இருந்தபோது, ஸ்காத்லாந்தை ராபர்ட் புரூஸ் என்னும் மன்னர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். இவ் விருவரும் பகை கொண்டு அடிக்கடி போர் செய்தனர். ஸ்காத்லாந்து அரசர் ஆறு தடவைகளில் தோல்வியுற்றார். அவரது படைகள் பெரும்பாலும் அழிந்தன. அதனால் புரூஸ் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போக நேர்ந்தது.

புரூஸ் பகைவர்களுக்குப் பயந்து, காடுகளிலும் மலைகளிலும் மறைந்து திரிந்தார். பகைவென்று நாட்டை

மீட்கவேண்டுமென்ற ஆவல் அவருக்கு மிகுதியும் இருந்தது; தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் ஒரு மரத் தடியில் உட்கார்ந்து கொண்டு பக்கத்திலுள்ள குடிசை ஒன்றை அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அக்குடிசை யின் முன்புறத்தில் ஒரு சிலந்தி, வலை கட்டிக்கொண்டிருந் தது. அது தன் வலையைப் பின்னும்போது, ஒரு மூலையி லிருந்த மற்றொரு மூலைக்குத் தாவிநூலை ஒட்டுதற்கு முயன்

றது. இதைப் புரூஸ் கவனித்தார். சிலந்தியின் முயற்சி தவறியது. எனினும், அது பலமுறை முயன்றது; கடைசி யாக ஏழாவது முறை முயன்று வெற்றி பெற்றது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ராபர்ட் புரூஸுக்கு உடனே புதிய ஊக்கமும், வலிமையும் தோன்றின; "சிலந் தியைப்போல் நாமும் முயன்றால் வெற்றிபெறலாம்" என்று எண்ணினர்.

அக்காலத்தில் இங்கிலாந்தின் மன்னரான முதலாவது எட்வர்டு இறந்து போயினர். அவருடைய குமாரன் இரண்டாவது எட்வர்டு பட்டத்துக்கு வந்தான். அவன் அவ்வளவு திறமையுடையவன் அல்லன். இச் செய்தி புரூஸுக்குத் தெரிந்தது. உடனே புரூஸ் ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு சென்று இரண்டாம் எட்வர்டு உடன் கடும் போர் புரிந்தார்; வெற்றி பெற்றார். தாம் முன்னர் இழந்த நாட்டை அடைந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்.

மாணவர்களே! ராபர்ட் புரூஸின் விடாமுயற்சியைக் கண்டீர்களா?

வினாக்கள்

1. விடாமுயற்சி பற்றி வழங்கும் பழமொழிகள் சில கூறுக.
2. ராபர்ட் புரூஸ் நாடிழந்து காடு சென்றதேன்?
3. ராபர்ட் புரூஸை ஊக்கிய நிகழ்ச்சியை விளக்கமுற வரைக.
4. இதனின்று நீ உணர்வது யாது?

பயிற்சி

1. பொருள் கூறுக:

   படை, கருதாது, ஊறு, திருவினை.

2. பின்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருளைக் கூறுக:

   (1) அவரது படைகள் அழிந்தன.

   (2) புரூஸ் தக்க சமயத்தை எதிர் பார்த்தார்.

3. பின்வரும் சொற்களைவைத்து வாக்கியம் அமைக்க:

   ஊக்கம், வெற்றி, மகிழ்ச்சியோடு.

5. மஞ்சள்

உரம்	மஞ்சள்	செந்நிறம்	இவ்வாறு
பகுதி	காரியம்	குங்குமம்	உரைத்தல்
சுபம்	விற்பனை	பொங்கல்	மட்டைகள்
திங்கள்	சகோதரி	பண்டிகை	வியாபாரம்
சடங்கு	பழுத்தல்	திருமணம்	பெரும்பாலும்
படிந்து	தெளிந்து	சுமங்கலி	பூலாங்கிழங்கு

'பொங்கலோ பொங்கல்' என்று நமது மகிழ்ச்சி பொங்குதற்குரிய நாள் எது? தைத்திங்கள் முதல் நாளன்றோ? அன்று நமது கடைத் தெருக்களிலும், நமது வீடுகளிலும், நமது வீட்டுப் பொங்கற் பானையிலும் காணப்படுவது எது? மஞ்சள். திருமணக் காலங்களிலும், பிற மங்கலவினை நிகழும் காலங்களிலும், பூ, தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு இவைகளுடன் வைக்கப்படுவது எது? மஞ்சள். இன்னும் நமது வீட்டிலுள்ள தாய்மார், சகோதரிகள் முதலிய பெண்கள் நீராடச்செல்லும் பொழுது கையில் கொண்டு போய், நீராடிவிட்டுக் கற்களில் உரைத்து முகத்தில் மகிழ்வுடன் பூசிக்கொள்வது யாது? மஞ்சளன்றோ! சிலர் இம்மஞ்சள்பொடியுடன் பூலாங்கிழங்கு, புழுக்கப் பட்டை, கோரைக் கிழங்கு, பச்சை, செண்பக மொட்டு முதலிய வாசனைப் பொருள்களைச் சேர்த்து இடித்துத் தூளாகச் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள்; நீராடும்பொழுது பயன்படுத்துகின்றனர்.

இத்தகைய மஞ்சள் எவ்வாறு பயிரிடப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வோம். மஞ்சள் பெரும்பாலும் மார்கழி, தை மாதங்களில் வெட்டி எடுக்கப்படும். அக்காலத்தில் இம்மஞ்சளில் விதை மஞ்சள் என்று ஒரு சிறு பகுதியை எடுத்து வீடுகளில் வைத்திருப்பார்கள். நாட் செல்லச் செல்ல அவைகளில் முளை தோன்றியிருக்கும். நன்செய் நிலங்களில் உரம் போட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள

மேடைகளில் முளைத்த மஞ்சளை நடுவார்கள். அவைகள் முளைகள் வெளிக்கிளம்பிச் செடிகளாக வளரும். அவை வாடாமலிருக்கும்படி தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு இருக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் இரண்டு மூன்று மாதங்களில் அச் செடிகள் சுமார் மூன்று அல்லது நான்கு அடி உயரம் வளரும். அவற்றின் இலைகள் சுமார் நான்கு விரல் அகலமுள்ளவையாயும், ஓர் அடி அல்லது ஒன்றரை யடி நீளமுள்ளவையாயும் இருக்கும். அவை வாழையின் மட்டைகளைப்போல, ஒன்றின்மேல் ஒன்ருய்ப் படிந்திருக்



கும். சில மாதங்களில் அச்செடிகள் பழுத்துப்போம். அப்பொழுது அதை வெட்டி எடுப்பார்கள், மஞ்சள் கொத்துக் கொத்தாய் இருக்கும்.

தை மாதத்தில் வரும் பொங்கற் பண்டிகைக்கு மஞ்சள் செடியை வேருடன் பிடுங்கி விற்பனை செய்வார்கள். மஞ்சள் வியாபாரம் செய்வோர், பச்சை மஞ்சளை எடுத்துப் பாத்திரத்தில் போட்டு, அடுப்பில் வைத்து நன்ருக வேக வைப்பார்கள். இவ்வாறு செய்யாவிட்டால் மஞ்சள் கெட்டுப் போகும். பிறகு அவற்றை எடுத்து, வெய்யிலில் உலர்த்தி

எடுத்துக் கூடைகளில் இட்டுத்தேய்த்து,சாக்குகளில்நிரப்பிக் கடைகளுக்கு அனுப்புவார்கள். கடைக்காரர்கள் அவை களின் மேல் மஞ்சள் நீரைத் தெளித்து நல்ல நிறம் உண் டாக்குவார்கள்; பிறகு வியாபாரிகளுக்கு விற்பார்கள்.

மஞ்சளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, எலுமிச் சம் பழச்சாற்றில் போட்டு வேகவைத்துப் பொடி செய்து, இன்னும் சில பொருள்களைச் சேர்ப்பார்கள். அப்போது அது தன் நிறமாறிச் சிவப்பு நிறம் அடையும். இதற்குக் குங்குமம் என்று பெயர். மஞ்சள், உணவுப் பொருளாகவும் பயன்படுகிறது.

நமது வீடுகளில் நடைபெறும் எல்லாக் காரியங்களுக் கும் மஞ்சள் உபயோகமானது. மஞ்சள் பொடியுடன் சுண்ணும்பைக் கலந்தால் செந்நிறமாக மாறும்.

வினுக்கள்

1. மஞ்சள் எவ்வாறு பயன்படுகிறது ?
2. மஞ்சளை எவ்வாறு பயிரிடுகின்றனர் ?
3. மஞ்சளை வியாபாரத்திற்கு எப்படித் தயார் செய்கின்றனர் ?
4. குங்குமம் செய்வது எவ்வாறு ?

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைக் கருத்துடன் படி:

1. மஞ்சள் மிகவும் உபயோகமானது.
2. மஞ்சள் எவ்வாறு பயன்படுகிறது ?

3. இது எவ்வளவு அழகாயிருக்கிறது! இவற்றுள் முதல் வாக்கியம் ஒரு செய்தியைச் சொல்வதாக இருப்பதால் முற்றுப் புள்ளி (.) கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது வாக்கியம் கேள் வியாக இருப்பதால் முடிவில் கேள்விக்குறி (?) இடப்பட்டிருக்கிறது. மூன்ருவது வாக்கியம் வியப்பைக் காட்டுவதால் அதன் முடிவில் வியப்புக் குறி (!) இடப்பட்டிருக்கிறது. இம்மூன்று நிறுத்தக் குறிகளையும் கவனத்தில் கொள்.

6. பிறந்த நாடு

சூழ	ஏக்கம்	வண்டர்	தகர்த்து
கருமம்	வாக்கு	தியாகம்	பிறத்தல்

1 பிறந்த நாடு சிறந்து வாழப்
பெருமை நாட்டுவோம்—உண்மை
அறிந்த தியாக வீரர் சூழ
அச்சம் ஓட்டுவோம்! (பிறந்)

2 ஏக்க மின்றித் தூக்க மின்றி
இளைய சிங்கங்காள் —நம்மைத்
தாக்கு கின்ற அடிமைப் பேயைத்
தகர்த்து வீசுவோம்! (பிறந்)

3 வம்பு பேசும் வண்டர் தம்மை
வாயடக்கு வோம் —இங்கே
கம்ப னுண்டு காந்தி யுண்டு
கந்தன் வேலுண்டு! (பிறந்)

4 தருமத் திற்கு வெற்றி யுண்டு
சத்தியம் உண்டு —நல்ல
கரும வீர சக்தி யுண்டு
கண்ணன் வாக்குண்டு. (பிறந்)

—யோகி சுத்தானந்த பாரதி.

வினாக்கள்

1. *பிறந்த நாடு சிறந்து வாழ எவ்வாறு பெருமை நாட்ட வேண்டும்?*

2. *நம் நாட்டின் வழி காட்டிகள் யாவர்?*

சொற்பொருள்: *தகர்த்து-அழித்து,* வண்டர்-தீயர்.

7. அறம் வளர்த்த அம்மையார்

வசதி	கற்றல்	கலைகள்	ஆற்ருேணு
ஈன்ற	புலமை	வல்லுநர்	தலைசிறந்த
பிறவி	பட்டம்	போதனை	கருந்தனம்
நிறுவி	வியப்பு	கைம்மை	களஞ்சியம்
நீதிபதி	நிலையம்	தொண்டு	அடைக்கலம்
மீட்டல்	இளமை	கனவான்	முன்னேற்றம்
அம்மை	வரலாறு	பரிதாபம்	கண்காணித்து

உலகில் தோன்றிய எண்ணிறந்த பிறவிகளில் மானிடப் பிறவியே மேலானது. இப்பிறவியில் மக்கள், தமது கடமையை உணர்ந்து, சிறப்பான செயல்கள் புரிந்து, தாம் பிறந்ததன் பயனை அடைகின்றனர். அக்கடமையே அறம் என்பது. "அறஞ்செய விரும்பு," "தருமம் தலை காக்கும்" என்ற பழமொழிகளைக் கவனியுங்கள்.

அறங்களில் தலை சிறந்த அறம் எழுத்தறிவித்தலே யாகும். மக்களுக்குக் கல்வியாகிய கருந்தனத்தை யீந்து, அவர்களை மேன்மையுறச் செய்ய வேண்டியது கற்றவர் கடமையாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த அறத்தைக் கடைப்பிடித்து, பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரும் பாடுபட்டுப் புகழ் பெற்ற ஒரு பெண்மணியின் வரலாற்றைத் தெரிந்துகொள்வோம்.

சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், பூனா நகரத்தில் இராமபாய் என்னும் அம்மையார் ஒருவர் இருந்தார். அவரது பெற்ருேர்கள் ஏழைகள்; அவர்கள் வட மொழியில் சிறந்த புலமை உடையவர்கள். அவருடைய தந்தையாரின் பெயர் ஆனந்த சாஸ்திரிகள். தாயாரின் பெயர் இலக்குமி பாய். இராமபாய் நாலாவது வயதில் தம் பெற்ருேரிடம் வடமொழி கற்கத் தொடங்கினர். அவர் சிறு வயதினராய் இருந்தபோதே பெற்ருேர் இருவரும் காலமாயினர்.

இளமையில் பெற்றோரை இழந்த அப் பெண்மணி, தம் வாழ்நாளைக் கழிப்பதற்கு வழியில்லாது, தமது சகோதரரோடு பல ஊர்களுக்குச் சென்றார். அம்மையார் தமது இருபதாம் வயதில் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார்.

அங்குள்ளோர் அம்மையாரின் கல்வித் திறமையைக் கண்டு வியந்து, அவருக்குப் பட்டங்களை அளித்தனர். அங்கேயிருந்த வங்காளத்தைச் சேர்ந்த செல்வர் ஒருவர், அம்மையாரின் அருங்குணங்களை யறிந்து அவரைத் திருமணம் செய்து கொண்டார். ஆயினும், அச் செல்வர் பதினெட்டு மாதங்களே அம்மையாருடன் வாழ்ந்திருந்தார்; பின்னர் காலமாய் விட்டார்.

கணவனை இழந்த அம்மையார் ஆற்றொணாத் துயருக்காளாயினர்; ஆயினும், தாம் ஈன்ற இளம் பெண்குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பார்த்து ஆறுதலடைந்து வந்தார். அக் குழந்தையின் பெயர் மனோரமா.

பின்னர் அம்மையார், தாம் பிறந்த இடமாகிய பூனாவுக்கு வந்து, தமது பேரும் புகழும் நெடுங்காலம் நிலைத்து நிற்பதற்குத் தக்க அரிய தொண்டாற்ற முயன்றார்; அங்கே, கல்விக் களஞ்சியமாகவும், நீதிபதியாகவும் இருந்த மகாதேவ கோவிந்த ரானடே அவர்களிடமும், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் வல்லுநரான

இராமகிருஷ்ண கோபால பந்தர்க்கார் அவர்களிடமும் ஆங்கிலம் நன்கு பயின்றார். அவர்களாலும், மற்றும் தரும சிந்தனையுடைய பல பெரியார்களின் உதவியாலும், பெண்கள் முன்னேற்றத்தின் பொருட்டு ஆரிய மகில சமாஜம் என்ற ஒரு நிலையத்தை நிறுவினர். குழந்தை மணக் கொடுமையினின்றும் பெண்களைப் பாதுகாத்து, அவர்களது அறியாமையைப் போக்க அம்மையார் அரும் பாடுபட்டார். இளங் கைம்பெண்களின் இரங்கத்தக்க நிலைமை இவரை மிகவும் வருந்தச் செய்தது; ஆதலால், கைம்மையகம் என்ற ஒரு நிலையத்தை நிறுவப் பெரிதும் விரும்பினர்.

அம்மையார் அவ்விதவை யகத்தை மேனாட்டு முறையில் நடத்துவதற்கு வேண்டிய பயிற்சியடையும் பொருட்டு, இங்கிலாந்து செல்ல விரும்பினர். அங்குப் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய பொருளை ஈட்டுதற்கு, 'பெண்கள் தரும நிதி' என்றொரு நூலை மராத்தி மொழியில் எழுதினர். இங்கிலாந்து சென்று, அங்கிருக்கும் பொழுது, அம்மையார் கிருஸ்துவப் பெண்களின் நட்பைப் பெரிதும் பெற்றனர். ஆதலால், அம்மையாரும் அம் மதத்தைத் தழுவினர். பெண்கள் கல்லூரி ஒன்றில் சேர்ந்து, அங்குள்ளவர்களுக்கு வடமொழியைக் கற்றுக் கொடுத்தார். அங்கே தாமும் ஆங்கிலம், கணக்கு, விஞ்ஞானம் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றார்.

பின்னர், இங்கிலாந்திலிருந்து அவர் அமெரிக்கா சென்று, அங்கு இரண்டாண்டுகள் இருந்தார்; பலவிடங்களுக்குச் சென்று, இந்தியாவைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; இந்தியக் கைம்பெண்களின் பரிதாப நிலைமையை அமெரிக்கருக்கு எடுத்துக் கூறினர். அவர்கள் ஏராளமான பணம் கொடுத்து உதவினர்.

அப்பால் அம்மையார் இந்தியாவுக்குத் திரும்பி வந்து, இந்திய விதவைகளை மீட்பதற்குக் கேடகன் என்னும்

இடத்தில் கைம்மையகத்தை நிலைநாட்டினார். அதன் மூலம் ஏழைப் பெண்கள் பாதுகாக்கப்பட்டனர். அதைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல.

அடைக்கலமாக வந்தடைந்த சிறிய பெண்களுக்கு அம்மையார் கல்வி புகட்டினார்; அவர்கள் இருப்பதற்குத் தக்க வசதிகள் செய்தார்; அவர்களைத் தீயவர்களோடு சேரா திருக்கும்படி கண்காணித்து வந்தார்; நோய்வாய்ப் பட்டவர் களைக் குணப்படுத்தினார்; அவர்களுக்கு நற்போதனைகளைச் செய்து பாதுகாத்தார்.

இத்தகைய சிறந்த தொண்டாற்றிவந்த அம்மையார், வயது முதிர்ந்து வலியிழந்து இருந்த காலத்திலும் விதவை களின் நன்மைக்காக உடல் வருந்தி யுழைத்து வந்தார். இவ்வாறு அருந்தொண்டு புரிந்து அறம் வளர்த்த பண்டித இராமாபாய் அம்மையார், தமது அறுபத்து நான்காவது வயதில் (1922-ம் ஆண்டு) காலமானார்.

வினாக்கள்

1. பிறவியிற் சிறந்தது எது? ஏன்?
2. அறத்திற் சிறந்தது எது?
3. இராமாபாய் அம்மையின் இளமை வாழ்வின் வரலாறு கூறுக.
4. இராமாபாய் அம்மையாரின் மணவாழ்வு பற்றி வரைக.
5. அவர் எவ்வாறு இங்கும் மேனாட்டிலும் கல்வி பயின்றார்?
6. அவர் நிறுவிய சங்கங்களும், ஆற்றிய அரும் பணிகளும் யாவை?

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற நிறுத்தக் குறிகளை இடுக:

(1) அம்மையாரின் கல்வித் திறமையை என்னென்பது
(2) அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல

(3) அறத்திற் சிறந்தது எது

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க:

(1) அடைக்கலமாக —— சிறிய பெண்களுக்கு அம்மையார் —— கல்வி புகட்டினார்.

(2) அவர் பெண்களின்——பொருட்டு ஆரிய மகில சமாஜம் என்ற —— அமைத்தார்.

---

8. இராஜ ராஜ சோழன்

சபை	நடித்து	மதங்கள்	தோள்வலி
ஆணை	நாடகம்	ஆதரித்து	குடிமக்கள்
சிற்பம்	அதிகாரி	பேரரசன்	பழங்காலம்
ஏனைய	சித்திரம்	உலோகம்	மருத்துவசாலை
தானம்	தலைநகர்	படைவலி	நினைவுச்சின்னம்
அறிகுறி	முக்கியம்	பெருமான்	அவ்வப்போது

காவிரிப்பூம்பட்டினம் பழங்காலத்தில் சோழர்களுடைய தலைநகரமாக விளங்கியது. பிற்காலத்தில் தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு பல சோழர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் மிகுதியும் வீரமும், பெருமையும் உடையவன் இராஜ ராஜ சோழன்.

இவனது தந்தை சுந்தர சோழன் எனப்படுவான். இராஜ ராஜன் கலை வளர்ச்சியில் பற்றும், குடிகளிடத்தில் அன்பும் உடையவன். போரில் வெற்றி வீரனுமாக விளங்கினான். இவனுக்கு அருண்மொழிச் சோழன் என்ற ஒரு பெயரும் உண்டு. இவன் சிவபெருமானிடத்தில் சிறந்த பக்தி யுடையவன்; ஆதலால் சிவபாத சேகரன் என்றும் அழைக்கப்பட்டான். இவன் தன் தோள்வலியாலும், படைவலியாலும் சேர பாண்டியரை வென்று தன்னடிப்படுத்

தினன். அதனல் இவன் மும்முடிச் சோழன் என்ற ஒரு சிறப்புப் பெயரையும் பெற்ருன்.

இவனது ஆட்சிக் காலத்தில் தெலுங்கு தேசத்தையும், இலங்கையையும் வென்று தனது நாட்டை விரிவடையச் செய்தான்; சிவபெருமானிடத்தில் பேரன்புடையவனுக இருந்தாலும் ஏனைய மதங்களையும் ஆதரித்து வந்தான்; தஞ்சையில் ஒரு பெரிய கோவிலைக் கட்டினன். அது இப்பொழுது 'பெருவுடையார் கோவில்' என்று சொல்லப்படுகிறது. அதற்கு இராஜராஜேசுவரம் எனப் பெயரும் உண்டு. இக்கோவில் இவனது நினைவுச் சின்னமாகச் சிறந்து விளங்கிக்கொண்டு இருக்கிறது.

இவன் ஏனைய மதத்தினருக்கும் மடம் முதலியன கட்டிக் கொடுத்திருக்கின்ருன்; பல இடங்களிலும் தண்ணீர்ப் பந்தலும், உணவுச் சாலையும் அமைத்தான்; பள்ளிக்கூடங்களை அமைத்துப் படிக்கும் மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான்; நோய்க்கு மருந்து தரும் மருத்துவச் சாலைகளை ஏற்படுத்தினன்; பல பெரிய போக்குவரவுச் சாலைகளையும் உண்டு பண்ணினன்.

சோழர்களது கொடி புலிக்கொடியாகும். இவர்களது மாலை ஆத்தி மாலையாகும். இராஜராஜ சோழன் தான் வென்ற இடங்களிலெல்லாம் வெற்றிக்கு அறிகுறியாகப் புலிக்கொடியை நாட்டினன். இவனது புகழ் எங்கும் பரவிற்று. இம்மன்னனது வரலாறு நாடகமாக எழுதப்பெற்றுத் திருவிழாக் காலங்களில் நடிக்கப்பட்டது.

இராஜராஜன் தன் நாட்டிலுள்ள கோயில்களுக்கெல்லாம் நிலங்களைத் தாராளமாகக் கொடுத்தான்; புலவர்களைப் போற்றினன்; தமிழ் மொழியை வளர்த்தான். மறைந்திருந்த மூவர் தேவாரங்களையும் தேடி வெளிப்படுத்தினவன் இவனே.

இவன் ஆட்சியில் பல அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் முக்கியமான நகரங்களில் இருந்து கொண்டு இவனது ஆணையை நிறைவேற்றி வைத்தனர். கிராமங்கள் தோறும் சபைகள் இருந்தன. அச்சபைகள் கிராமத்தார் வழக்குகளை யெல்லாம் அவ்வப்போது தீர்த்துவைத்தன. குடிகள் அரசனிடத்தில் பற்றுடையவர்களா யிருந்தார்கள். இவன் காலத்தில் பலவகையான கைத்தொழில்களும் வளர்ச்சியுற்றன. கல்லிலும், உலோகங்களிலும் சித்திர வேலை செய்பவர்களும், சிற்பங்கள் செய்பவர்களும் பலர் இருந்தார்கள். அரசன் அவர்களை ஆதரித்தான்; ஆகையால் தொழில்கள் பெருகின; கலைகள் வளர்ந்தன.

இவனுக்கு இராஜேந்திரன் என்ற குமாரன் இருந்தான். இராஜேந்திர சோழன் இளவரசனுக இருந்து அரசியல் காரியங்களைத் தெரிந்து கொண்டான். பின்னர் இவனது ஆட்சி முறையும் சிறப்பாக நடைபெற்றது.

விஞக்கள்

1. இராஜராஜன் அடைந்த வெற்றிகள் யாவை ?
2. அவன் செய்த நற்செயல்கள் யாவை ?
3. அவன் காலத்தில் எவ்வாறு அரசாட்சி நடைபெற்றது ?

பயிற்சி

சோழன், சிவன், அரசன், சூரியன், வீரன். இச்சொற்கள் மனிதர்களையும், தேவர்களையும் குறிக்கும் பெயர்கள். இப்பெயர்களெல்லாம் உயர்திணை.

புலி, மரம், மாலை, தலை இவை மனிதர்களும், தேவர்களுமல்லாத பிறபொருள்களைக் குறிக்கும் பெயர்களாம். இவை அஃறிணை.

பின்வரும் சொற்களுக்குத் திணை கூறுக :

நகரம், இவன், கோவில், மூவர், புலவர், குமாரன், சபை, தமிழ்.

9. தீக்குச்சி செய்தல்

நுனி	குழம்பு	பக்குவம்	தீப்பொறி
மத்தி	அறிஞர்	அபாயம்	இயந்திரம்
பயன்	ஆபத்து	புதுமுறை	விற்பன்னர்
நறுக்கி	உலர்ந்த	அவசியம்	பொருத்திய
விவரம்	அற்புதம்	இடையில்	உபயோகம்

தீக்குச்சியையும், தீப்பெட்டியையும் அறியாதார் இல்லை. தீக்குச்சி எல்லாருக்கும் மிகவும் அவசியமான பொருள். அதனால் இதன் வரலாற்றை அறிய வேண்டுவது அவசியம் அல்லவா? தீக்குச்சி எவ்வளவு காலமாக உபயோகப்பட்டு வருகிறது? தீக்குச்சி செய்யும் வகையைக் கண்டுபிடிக்கு முன், எவ்வாறு தீ உண்டாக்கப்பட்டது? தீக்குச்சி எவ் வாறு செய்யத் தொடங்கினார்கள்? இந்த விவரங்களை எல் லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

முற்காலத்தில் தீப்பெட்டியே இல்லை. ஒவ்வொரு கிரா மத்தின் மத்தியிலும் ஓர் இடத்தில் எப்பொழுதும் தீயை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அதன் அருகில் ஒருவன் இருந்து பார்த்துக் கொள்ளுவான். அவனுக்கு அவ்வூரார் உணவு கொடுப்பார்கள். ஊரார் அவ்விடத்தி லிருந்து தீ எடுத்துக் கொண்டு செல்வர். அத் தீ அணைந்து விட்டால், இரண்டு உலர்ந்த மரத் துண்டுகளைப் பக்குவமாக ஒன்றோடு ஒன்றைத் தேய்த்துத் தீயுண்டாக்கிக் கொள்வர்.

இரண்டு இருப்புத் துண்டுகளை ஒன்றின்மீது ஒன்றை யடித்தால் தீப் பொறிகள் பறப்பதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அவ்வாறே அடித்துத் தீப்பொறிகளின் துணை கொண்டு தீயை உண்டாக்கினர். இதுவே அக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய முறையாகும்.

சிறிது காலம் சென்றபின், சக்கிமுக்கி என்னும் ஒரு வகைக் கல்லைக் கண்டு பிடித்தார்கள். அக்கல்லை மற்றொரு கல்லோடு தேய்த்தால் தீப்பொறிகள் உண்டாகும். அவற்றைக் கொண்டு தீயை உண்டாக்கி வந்தனர்.

அதன் பிற்பாடு, ஒருவர் தீப்பெட்டியைப்புதிய முறையில் செய்யத் தொடங்கினர். அது பயன் தரவில்லை. பின்னர், 1805-ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் ஒருவர் தீக்குச்சி செய்யத் தொடங்கினர். அவர், 'குளோரேட் பொட்டாஷ்' என்ற பொருளுடன் சர்க்கரையையும் சிறிது கந்தகத்தையும் கலந்து, மெல்லிய மரத்துண்டு ஒன்றில் தேய்த்துக் காயவைத்தார்; அது காய்ந்தவுடன் அதை 'சல்பரிக் ஆசிட்' என்னும் ஒருவகைத் திராவகத்தில் போட்டு எடுக்க, உடனே அம்மரத் துண்டு தீப்பற்றி எரியத் தொடங்கியது. இம்முறை அபாயமானதாகக் காணப்பட்டது.

பல ஆண்டுகள் கழிந்தபின், ஜான் வாக்கர் என்னும் ஆங்கிலேயர் ஆண்டிமோனி பொட்டாஷ் என்ற ஒரு பொருளைக் கலந்து, சிறிய மெல்லிய குச்சியின் முனையை அதில் தோய்த்துக் குச்சியைக் காயவைத்தார். தீப்பெட்டியின் மேற்புறத்தில் கரடுமுரடான காகிதத்தை ஒட்டினர்; உலர்ந்த குச்சியை அந்த மேற்புறத்தில் தேய்த்தார்; குச்சி தீப்பற்றி எரிந்தது. ஆனல் இம்முறையும் சரியானதாகக் காணப்படவில்லை. பின் அவரே, பாஸ்பரஸ் என்னும் பொருளை மேற் சொன்ன இரண்டு பொருட்களோடு சேர்த்துத் தீக்குச்சிக்கு உபயோகப்படுத்தினர். ஆனல், இம்முறை மிகுதியும் ஆபத்தை உண்டாக்கியது.

முடிவாக 1852-ஆம் ஆண்டு ஒரு சிறந்த ஆங்கில விற்பன்னரே இப்பொழுது நாம் உபயோகிக்கும் தீக்குச்சியைச் செய்தார். அவர் பாஸ்பரஸ் என்ற பொருளைக் குச்சியின் முனையில் தோய்க்கவில்லை; தீப்பெட்டியின் பக்கத்தில் தடவினர். முன் கூறிய இரண்டு பொருள்களோடு

கூடிய குச்சியைப் பாஸ்பரஸ் பொருந்திய பக்கத்தில் தேய்த்தார். குச்சி தீப்பற்றிக் கொண்டது. இம்முறையே சிறந்ததாகக் கொள்ளப்பட்டது.

இனி, தீக்குச்சிக்குரிய குச்சி எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வோம். உலர்ந்த பெரிய மரங்களை இயந்திர மூலமாகக் கனமான காகிதம்போல அறுப்பார்கள். அம்மரப்பாகங்களை வேறொரு இயந்திரம் சிறு சிறு குச்சிகளாக நறுக்கிவிடும். இவ்வாறு நறுக்கப்பட்ட குச்சிகளை வேலையாட்கள் இயந்திரத்தின் உதவி



யைக்கொண்டு அடுக்குவார்கள். இதற்கு இடையில் காகிதம் போன்ற மரப் பாகங்கள் இயந்திர வுதவியால் பெட்டிகளாகச் செய்யப்படும். பிறகு குச்சிகளின் நுனியில் மருந்தை ஊற்றி உலர வைப்பார்கள். அவை, உலர்ந்ததும் பெட்டிகளில் அடுக்கப்படும். பெட்டிகளின் மேற்பாகத்தில் பாஸ்பரஸ் குழம்பு பூசப்பட்டிருக்கும். பின் இப்பெட்டிகளைப் பெரிய பெட்டிகளில் அடுக்குவார்கள்; வெளிநாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்புவார்கள். இத்தகைய தீக்

குச்சி செய்தல் அறிஞர்கள் கண்டறிந்த அற்புதங்களில் ஒன்றல்லவா ?

வினாக்கள்

1. முற்காலத்தில் எவ்வாறு தீ உண்டாக்கப்பட்டது ?
2. முதன் முதலில் எவ்வாறு தீக்குச்சி செய்யப்பட்டது ?
3. ஜான் வாக்கர் எவ்வாறு தீக்குச்சி செய்தார் ?
4. ஆங்கில விற்பன்னர் தீக்குச்சியை உண்டாக்கியதெப்படி ?
5. தீக்குச்சிக்குரிய குச்சியும் பெட்டியும் எவ்வாறு தயாரிக்கப்பட்டுத்தீக்குச்சி செய்யப்பட்டது ?

பயிற்சி

1. பொருள் கூறுக :

பக்குவம், அபாயம், விற்பன்னர்.

2. எதிர்ப்பதம் கூறுக :

பிற்காலம், அவசியம்.

3. அரசன், அரசி, அரசர் இம்மூன்றும் உயர்திணைப் பெயர்கள். இவற்றுள் அரசன் ஆண்பால், அரசி பெண்பால், அரசர் பலர்பால்.

மரம், மரங்கள் இவ்விரண்டும் அஃறிணைப் பெயர்கள். இவற்றில் மரம் என்பது ஒருமை யாதலின் ஒன்றன்பால். மரங்கள் பன்மை யாதலின் பலவின் பால். இவ்வாறு உயர்திணை, அஃறிணை யாகிய இரண்டு திணைகளும் ஐம்பால்களாகப் பிரிக்கப்படுவதைக் கவனிக்க.

———

10. தந்திரமுள்ள குரங்கு

ஈரல்	நாவல்	சாக்காடு	நம்பிக்கை
உரல்	தீங்கனி	வாட்டம்	மைத்துனி
மாறு	அமுதம்	உலக்கை	திடுக்கிட்டு
நன்றி	ஆருயிர்	சமைத்து	சினந்தாள்
மூப்பு	கனிகள்	பகைவன்	நாடோறும்
மகரம்	நாயகன்	துரோகம்	பிழைப்பது
முதலை	வானரம்	மறவாத	மூழ்கினேன்
களிக்க	நறுங்கனி	பிடிவாதம்	இருதலைக்கொள்ளி

கங்கைக் கரையிலுள்ள ஒரு நாவல் மரத்தில் சுமுகன் என்னும் ஒரு வானரம் வாழ்ந்துகொண்டிருந்தது. ஒரு நாள் அம்மரத்தின் கரையோரத்தில் முதலை ஒன்று வந்தது. சுமுகன் அம்முதலைக்குச் சில நாவற் பழங்களைத் தந்தது. முதலை அப்பழங்களைத் தின்று மகிழ்ச்சியுடன் தன்னிடம் சென்றது. அதுமுதல் முதலை நாள்தோறும் அங்கு வந்து பேசிக்கொண்டிருக்கும்.

ஒருநாள் முதலை சுமுகன் கொடுத்த கனிகளில் சில வற்றைத் தின்றுவிட்டு, மீதியைக் கொண்டு போய்த் தன் இல்லாட்குக் கொடுத்தது. அதனை உண்ட பெண் முதலை, அஃது அமுதம்போலிருக்கக் கண்டு, தன் நாயகனைப் பார்த்து, "தலைவரே, இவ்வினிய கனிகளை எங்கிருந்து கொண்டு வந்தீர்?" என்றது. அதைக்கேட்ட ஆண்முதலை, "சுமுகன் என்ற நண்பன் தினமும் இக்கனிகளைக் கொடுப் பான். நான் அங்கேயே தின்றுவிடுவேன். இன்றைக்கு நான் தின்று மிகுந்ததைக் கொண்டுவந்தேன்" என்றது.

பெண் முதலை தன் நாயகனைப் பார்த்து, "அன்பரே, இவ்வினிய கனியைத் தின்கின்றவனது ஈரல் அமுதத்துக்கு ஒப்பாக விருக்கும். ஆதலால் அதைக் கொண்டுவந்து

கொடுத்தால், நான் மூப்புச்சாக்காடு இன்றி நெடுங்காலம் வாழ்ந்திருப்பேன்'' என்றது. அதைக்கேட்ட ஆண் முதலை, ''அவன் என் உயிருக்கு உயிராயிருக்கின்றவன். அவனுக்குத் தீங்கு நினைக்கலாமா?'' என்று சொன்னது. பெண் முதலை,'' நீர் என்றைக்கும் என் பேச்சுக்கு மாறுசொன்னதில்லை. இன்றைக்கு மாறு சொல்கின்றீர். இதோ என் உயிரை விடுகின்றேன்'' என்றது. முதலை தன் மனைவியின் பிடிவாதத்தை உணர்ந்து, ''நான் இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆயினேன்'' என்று சொல்லிக்கொண்டே சுமுகனிடம் சென்றது.

அப்பொழுது சுமுகன், முதலையின் வாட்டத்தைப் பார்த்து, ''நண்பனே! நீ ஏன் வாட்டத்துடன் இருக்கிறாய்?'' என்றது. முதலை, ''அன்புமிக்க தோழா! மனவாட்டம் இல்லை; எனினும் உன் மைத்துனி என்னைப் பார்த்து, 'நன்றிகெட்டவனே, நீ யாரால் நாடோறும் வாழ்வு நடத்துகின்றாயோ, அவரை ஒரு நாளாயினும் நமது வீட்டுக்கு அழைத்து வந்து விருந்திட வேண்டாமா?' என்று வைது சினந்தாள். அவள் உன் பொருட்டுப் பல இனிய கறிகளைச் சமைத்து வைத்துக்கொண்டு எதிர்பார்த்திருக்கின்றாள்'' என்றது.

அதைக் கேட்ட வானரம், ''என் ஆருயிர் நண்பனே! நான் தண்ணீரில் வரமுடியாதே; நீ சென்று எனது பிரியமுள்ள மைத்துனியை இங்கே கூட்டிக்கொண்டு வா'' என்றது.

உடனே மகரம், ''சுமுகனே! நான் கங்கைக் கரையில் இருக்கிறேன்; நீ என் முதுகில் உட்கார்ந்துகொண்டு வா; உன்னைக் கொண்டுபோகின்றேன்'' என்றது. குரங்கு அச்சொற்களை நம்பி அதன் முதுகில் உட்கார்ந்து கொண்டது. முதலை சென்றது.

அப்பொழுது முதலை, 'சுமுகன் நம் வசத்தில் இருக்கிறான்; நமது கருத்தை இனி வெளியிடலாம்; உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?' என எண்ணி, "நண்பனே! நீ கொடுத்த நறுங் கனிகளை என் மனைவி தின்றாள்; 'இத் தீங்கனி தின்கிறவனது ஈரல் அமுதத்தை ஒத்திருக்கும்; அதைக் கொண்டு வந்து கொடாவிடில் உயிர் வைத்திரேன்' என்றாள். ஆகவே நான் உன்னை இப்போது கொண்டு போகிறேன்" என்றது.

அப்போது வானரம் திடுக்கிட்டு, முதலையின் நன்றி கெட்ட தன்மையை உணர்ந்து, தன்னைக் காத்துக்கொள்ளத் தந்திரமாக, "ஓகோ அப்படியா! அதை முன்னமே தெரிவிக்கலாகாதா? மரத்தில் மறைத்து வைத்திருக்கின்ற அந்த ஈரலை அங்கேயே கொடுத்திருப்பேனே!" என்று பாசாங்கு செய்தது.

அப்பொழுது மகரம் அதை மெய்யென்று நம்பி, அவ் வானரத்தை விரைந்து கொண்டு வந்து கரையில் விட்டது.

உடனே குரங்கு குதித்து மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. முதலை, "நண்பா! ஈரலைச் சீக்கிரம் கொடு; அதை உன் மைத்துனிக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்றது. அதைக் கேட்ட குரங்கு, நகைத்து, "மூடா! ஈரல் உடம்பை விட்டு வெளியில் இருக்குமா? நீ நன்றி மறந்தவன். இங்கிருக்க வேண்டாம். சீக்கிரம் இவ்விடத்தை விட்டுப் புறப் பட்டுப் போ" என்று கடிந்து பேசிற்று.

அதைக் கேட்ட முதலை பச்சாத்தாபப்பட்டு, 'நான் இவனுக்கு உண்மை சொல்லி இழந்தேன். இப்போது இவனுக்கு நம்பிக்கை யுண்டுபண்ணிக் கொண்டுபோக வேண்டும்' என்று எண்ணி, "நண்பா! நான் உன்னைச் சோதிக்கவே இவ்வாறு சொன்னேன்! ஈரல் உடம்பை விட்டிராது என்பது சிறு பிள்ளைக்கும் தெரியுமே! நான் விளையாட்டாகச் சொன்னேன்; நீ என் வீட்டுக்கு அச்சமின்றி வா. உனக்காக என் மனைவி வழி பார்த்துக்கொண்டிருப்பாள்" என்று கபடமாக மொழிந்தது.

சுமுகன், "பசித்தவனது நட்பில் நம்பிக்கை கொள்ளலாகாது; ஆகையால் நான் மீண்டும் வாரேன்" என்றது. முதலை, "அன்பனே, நீ வராவிடில் நன்றி மறந்த பாவம் எனக்கு உண்டாகும். நான் பட்டினியாயிருந்து உயிரை விடுவேன்" என்றது. அப்போது குரங்கு, "நீ எனக்கு நம்பிக்கை வருவித்துக் கொல்லப் பார்க்கின்றாய்; நம்பிக்கைத் துரோகம் செய்தல் உன் குலத்தியல்பு" என்றது.

அப்போது மற்றொரு முதலை வந்து, பெண் முதலை பட்டினியால் இறந்ததைத் தெரிவித்தது. அது கேட்ட ஆண் முதலை, நான் பாவியானதால் இவ்விடரில் மூழ்கினேன்; நண்பனுக்குப் பொல்லாதவனாயினேன்; மனைக் கிழத்தியும் இறந்தாள்; எனது வீடும் காடாயிற்று; நண்பா!

என் பிழையைப் பொறுத்துக்கொள். உனக்குத் தீங்கு நினைத்த யான் இதோ உயிர் விடுகிறேன்'' என்றது.

அதைக் கேட்ட வானரம், ''தீயவனே! நீ பெண்ணால் கொலைத் தொழிலுக்கு உடன்பட்டாய்; நீ அப்படிப்பட்டவள் சாவைக் குறித்துக் களிக்கவேண்டும். ஆதலால் வருந்தாது உனது இருப்பிடம் செல்'' என்றது. ஆண் முதலை தனது இருப்பிடஞ் சென்று, அங்கு வேறொரு முதலை இருக்கக் கண்டு, மீண்டும் சுமுகனை வந்தடைந்து, ''தோழனே! 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பது போல, என் வீட்டையும் மற்றொருவன் கவர்ந்துகொண்டான். நான் எவ்வாறு பிழைப்பது?'' என்று வினவியது.

குரங்கு முதலையைப் பார்த்து, ''நீ திரும்பிச் சென்று பகைவனோடு போர் செய்து உன் வீட்டைப்பெற முயற்சி செய்; வெற்றிகாண்; இல்லையேல் போரில் இற; போரில் இறப்பின் வீர சுவர்க்கம் அடைவாய்; வெற்றி பெறின் உன் வீட்டைப் பெற்று நலமுறுவாய்; ஊக்கம் இல்லாவிடில் பல தீங்குகள் உண்டாகும்'' என்றது. முதலையும் அப்படியே சென்று, பகைவனுடன் போர் செய்து வென்று, தன் வீட்டைப் பெற்று நலமாக இருந்தது.

வினக்கள்

1. பெண் முதலை ஆண் முதலையைக் கேட்டதென்ன?

2. 'இருதலைக் கொள்ளி எறும்பு' இப் பழமொழி யாரால், எப்பொழுது சொல்லப்படுகிறது?

3. முதலை வானரத்தை யழைத்துவர என்ன தந்திரம் செய்தது?

4. வானரம் எப்படித் தப்பித்துக்கொண்டது?

பயிற்சி

பின் வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க:

பிடிவாதம், நாடோறும், துரோகம், திடுக்கிட்டு.

எதிர்ப்பதம் எழுதுக:

நம்பிக்கை, கனிகள், பகைவன், களிக்க.

'பாடம் படித்தேன்'

மேலேயுள்ள வாக்கியத்தில் 'நான்' என்பது எழுவாய். இவ்வெழுவாய் வாக்கியத்தில் இம்மாதிரி தொக்கி வருவதற்குத் தோன்ரு எழுவாய் என்று பெயர்.

பின்வரும் வாக்கியங்களில் தோன்ரு எழுவாய்களைக் கூறுக:

1. பள்ளிக்கூடம் சென்ருேம்.
2. பாட்டுப் பாடினுன்.

---

11. நூல் நிலையங்கள்

ஐயம்	பொன்	திறவுகோல்	இலக்கியம்
பூட்டி	ஆழ்ந்த	குடித்தனம்	பெருகுதல்
சிற்சில	ஆதாரம்	பாதுகாத்து	கருத்துக்கள்
மேனுடு	அரசியல்	பொக்கிஷம்	செய்தித்தாள்
சிற்றூர்	பட்டணம்	நூல் நிலையம்	கற்பனைத்திறன்

பிள்ளைகளே! உங்கள் வீடுகளில் பெற்ருேர்கள் வருந்தித்தேடிய பொருள்களை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிப் பாதுகாத்து வருவதை நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா? அதை உமது பெற்ருேர்கள் பொக்கிஷம் என்பர். இப்பொழுது சொல்லப் போகும் பொக்கிஷம் அருமையானது. அதில் பொன், வெள்ளி, இரத்தினங்கள் முதலியன இல்லை. ஆனல் அவைகளில் சிறந்த பொருள்களாகிய ஆபரணங்கள் நிறைந்திருக்கின்றன.

அறிவிற் சிறந்தவர்களாகிய நமது முன்னோர்களின் ஆழ்ந்த பல கருத்துக்கள், கற்பனைத் திறன்கள், உலக அனுபவங்கள் நிறைந்த உபதேசங்கள் முதலியன வெல்லாம் அப்பொக்கிஷம் கொண்டிருக்கும் ஆபரணங்களாகும். உங்கள் வீட்டிலுள்ள பொக்கிஷத்தைத் திறக்கத் திறவு கோல் வேண்டும். ஆனால், இவ்வரிய பொக்கிஷத்தைத் திறப்பதற்குக் கல்வி யறிவு வேண்டும்.

உங்கள் பாடசாலைப் படிப்பு முடிந்தவுடன், நீங்கள் படித்துள்ள இலக்கண இலக்கியங்கள், கணிதம்,



பூகோளம், கைத்தொழில், வாணிபம் முதலிய பலவற்றையும் மேலும் மேலும் படித்து வளர்த்துக் கொள்ள இப்பொக்கிஷம் உதவி செய்கின்றது. இவ்வரிய பொக்கிஷமே நூல் நிலையமாகும். ஒரு பொருளைப் பற்றிய ஐயத்தைப் போக்கிக் கொள்ளக் கூடிய இடம் இந்த நூல் நிலையமே. செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்குரிய கைத்தொழில், வாணிபம் முதலியன பெருகுதற்கும், நாகரிகம் உயர்வதற்கும், அரசியலறிவு பெறுதற்கும், அயல் நாட்

டைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், சோம்பல் இன்றிக் காலங்கழிப்பதற்கும் இந்த நூல் நிலையம் மிகுதியும் பயன் படுகிறது. இந்த நூல் நிலையங்கள் நமது பெரிய பட்டணங் களில் ஒன்றிரண்டு காணப்படுகின்றன. இவ்வாறு இருப் பது போதாது. ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஒவ்வொரு நூல் நிலையம் இருக்க வேண்டும். மேனடுகளான ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் ஆயிரக்கணக்கான நூல் நிலை யங்கள் இருக்கின்றன. ருஷியதேசத்தில் ஐம்பதினயிர மும், ஐக்கிய நாடுகளில் பன்னீராயிரமும், ஜப்பானில் ஐயா யிரமும் இருக்கின்றனவாம். ஜப்பானில் 'கல்லாத குடித் தனமே இருத்தலாகாது' என்று அந் நாட்டுச் சக்கரவர்த்தி சொல்லியிருப்பதன்றி, அதற்கு ஏற்றதாக நூல் நிலையங் களையும் ஏற்படுத்தியுள்ளார். அமெரிக்காவில் ஏராளமான நூல் நிலையங்கள் இருப்பதன்றி, நிலையங்கள் இல்லாத சிறு கிராமங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை அரிய நூல்களை வண்டியிலேற்றி அனுப்புகிறார்கள்.

கிராமத்திலுள்ள பெரியவர்களும், சிறியவர்களும் நூல் நிலைய வண்டி வந்ததும், மனமகிழ்ச்சியுடன் வண்டியை நாடிச் சென்று புத்தகங்களை எடுத்துப் படிப்பார்கள். நமது நாட்டிலும் சிற்சில விடங்களில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இத்தகைய நூல் நிலையங்களுக்குப் பொருளுதவி செய் தும், புத்தகங்கள், செய்தித் தாள்கள் முதலியன உதவியும் அவற்றை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நிலையங்களை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். நமது நாட்டிலுள்ள ஆலய நிருவாக அதிகாரிகள், கல்விச் சாலைகளை நிறுவி வருகின்றனர். நூல் நிலையங்கள் அளிக் கும் பயன்களை அவர்கள் உணர்ந்து, கல்விச் சாலைகளுடன் நூல் நிலையங்களையும் ஒவ்வொரு கோவிலிலும் ஏற்படுத்தி மக்களின் அறிவை வளரச் செய்வது மேலானதாகும்.

பிள்ளைகளே! கல்வியின் அருமை தெரிந்த நீங்கள் பெரியவர்களாகும்போது உங்கள் ஊர்களில் நூல் நிலையங்களை அமைக்க முயலுவீர்களாக. அப்பொழுதுதான் நமது நாட்டு மக்களும் அறிவு வளர்ச்சி பெற்றுத் தங்கள் கடமைகளை உணர்ந்து நாகரிகமுள்ள நன் மக்களாக வாழ முடியும்.

வினாக்கள்

1. பொக்கிஷம் என்றால் என்ன?
2. நூல் நிலையம் பொக்கிஷத்தினும் சிறந்தது. எவ்வாறு?
3. நூல் நிலையம் என்றால் என்ன?
4. நூல் நிலையங்களின் பயனென்ன? அவற்றைப் பெருக்க நாம் செய்ய வேண்டுவது என்ன?

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க:

(1) ஒரு பொருளைப் பற்றிய ——— போக்கிக் கொள்ளக் கூடிய இடம் இந்த———.

(2) ஒவ்வொரு———நூல் நிலையங்கள் ——— முயற்சி செய்யவேண்டும்.

வாக்கியங்களில் பெயர்ச்சொல் சில மாறுபாடுகளை யடைந்து வரும். இதற்கு வேற்றுமை என்று பெயர். இவ்வாறு வேற்றுமைப் படுத்துவது உருபு என்று சொல்லப்படும். இவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

(உ-ம்) மரம் வளர்ந்தது. தம்பி வந்தான்.

'மரம்'முதல் வேற்றுமை. இதற்கு உருபு கிடையாது.

பாலைக் கறந்தான். (பால் + ஐ)

இங்கு 'பால்' இரண்டாம் வேற்றுமை. இதன் உருபு ஐ.

12. அசோகர்

குரு	யுத்தம்	பட்டம்	போதனை
அரசு	மைந்தர்	தழுவுதல்	குடிமக்கள்
கனம்	வழக்கம்	பேரரசன்	புத்த மதம்
தீங்கு	குமாரன்	முற்காலம்	மருத்துவம்
ஆசை	போதகர்	பொறித்து	பல்லாயிரம்
சுவடி	வரைந்து	உபதேசம்	அவ்வண்ணம்

முற்காலத்தில் வட இந்தியாவில் சந்திரகுப்தன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் இந்தியாவின் முதற் பேரரசன் எனப்பட்டம் பெற்று அரசு புரிந்து வந்தான். அவன் இறந்த பின் அவனுடைய குமாரன் பிந்துசாரன் அரசனாகி, சில காலம் அரசு செலுத்தினான். அவனுடைய மைந்தரே அசோகர் ஆவார். அவரை அசோகவர்த்தனர் என்றும் கூறுவதுண்டு.

பற்பல நாடுகளை வென்று பேரரசராக வேண்டுமென்று அரசர்கள் யாவரும் விரும்புவது வழக்கம். அவ்வண்ணமே அசோகரும் விரும்பினார். ஆகையால் அவர் பல யுத்தங்கள் செய்தார். அந்தப் போர்களில் பல்லாயிரம் மக்கள் மாண்டனர். அதைக் கண்ட அவர், மிகுதியும் துயரமுற்று, இனி மேல் போர் செய்வதில்லை என்று முடிவு செய்தார். அது மாத்திரமல்ல; வேட்டையாடுவதையும் கைவிட்டார்; அரண்மனையில் உணவுக்காக உயிர்களைக் கொல்லுவதையும் நிறுத்தினார்.

அசோகர் முதலில் இந்து மதத்தைச் சேர்ந்தவராயிருந்தும், பிறகு புத்தருடைய போதனைகளைக் கேட்டுப் புத்த மதத்தைத் தழுவினார். அம்மதத்தை அவர் மிகுதியும் மதித்தார்; அம்மதத்தைப் பரவச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தார்; நம் நாட்டில் மட்டுமன்றி பர்மா, சீனம், இலங்கை போன்ற அயல் நாடுகளிலும் புத்த மதத்தைப் பரப்ப ஏற்பாடுகளைச் செய்தார்.

அசோகர் குடிமக்களின் நன்மைக்காக மிகுதியும் முயன்றார். அவர் குடிகளைத் தம் மக்கள் போலவே பாவித்தார்; எந்த வேளையிலும் குடிகள் வந்து தம்மைப் பார்ப்பதற்கு இடங்கொடுத்து வந்தார்; அவரவர் குறைகளைக் கேட்டுத் தீர்த்து வைத்தார். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யலாகாதுஎன்று அவர்போதித்தார்; மிருகங்களுக்கு மருத்துவம் செய்வதற்காக மருத்துவச் சாலைகளை ஏற்படுத்தினார்; வழிப்போக்கர்களுக்கு உதவியாகச் சாலைகளில் நிழல் தரும் மரங்களை நாட்டி வளர்த்தார்; பெரிய சாலைகளை அமைத்தார்; உணவுச் சாலைகளையும் உண்டாக்கினார்; புத்தமதக் கொள்கைகளை மக்களுக்குப் போதிக்கப் பல போதகர்களை நியமித்தார். அவர் தமது மைந்தனை மகேந்திரனையும் அத்தொண்டில் ஈடுபடச் செய்தார்.

அவர் தேசமெங்கும் கற்றூண்களை நாட்டி, அவற்றில் புத்தருடைய உபதேச மொழிகளை வரைந்து வைத்தார்; அப் போதனைகளை மலைகளிலும், கற்பாறைகளிலும் பொறித்து வைத்தார். அவை இன்றும் ஆப்கானிஸ்தானம் முதல் தெற்கே மைசூர் வரையிலும் காணப்படுகின்றன. இச் சாசனங்களால் அவருடைய பெருமையும், ஆட்சியின் சிறப்பும் விளங்குகின்றன.

அசோகர் நாட்டிய தூண்களில் காணப்படும் சக்கரமே நம் நாட்டுக் கொடியின் நடுவில் நீதியின் சின்னமாக விளங்குகிறது.

அவருடைய சிறந்த போதனைகள்

'தாய் தந்தையர் சொல்லுக்கு அடங்கி நடக்க வேண்டும். பெரியோரைக் கௌரவப் படுத்த வேண்டும்; அவர்களிடத்தில் மிகுந்த மரியாதையாய் நடந்து கொள்ளவேண்டும்; குரு பக்தி யுடையவர்களாய் இருக்கவேண்டும்; துறவிகளையும், எளியவர்களையும், சுற்றத்தார்களையும் ஆதரிக்க வேண்டும்' என்பனவாம்.

இப்போதனைகள் கல்விகற்கும் மாணவர்களாகிய உங்களுக்கு மிகவும் ஏற்றவைகளாகும்; ஆகையால், நீங்கள் இவற்றைப் பின்பற்றி ஒழுகவேண்டும்.

வினாக்கள்

1. அசோகர் யார்?
2. அசோகர் புத்த மதத்தைத் தழுவியதேன்?
3. குடிமக்கட்கு அவர் செய்த நன்மைகள் யாவை?
4. அவர் புத்த மதத்தை எவ்வாறு பரவச்செய்தார்?
5. அவர் பல இடங்களிலும் பொறித்த புத்த மதக் கொள்கைகள் யாவை?

பயிற்சி

வாளால் வெட்டினான். (வாள் + ஆல்)
தந்தையோடு வந்தான். (தந்தை + ஒடு)
தாயுடன் மகன் சென்றான். (தாய் + உடன்)

வாளால், தந்தையோடு, தாயுடன் என்பன மூன்றும் வேற்றுமைகளாம். மூன்றும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஒடு, உடன் என்பனவாம்.

கூலிக்கு வேலை செய்தாள். (கூலி + கு)

நான்காம் வேற்றுமையின் உருபு கு ஆகும்.

பின்வரும் வாக்கியங்களைக் கவனி:

காவிரியிற் பெரியது கங்கை.

கந்தனது புத்தகம்.

முதல் வாக்கியத்தில் 'காவிரி' என்ற பெயர்ச் சொல்லுடன் இன் என்ற உருபு சேர்ந்து, காவிரியைக் காட்டிலும் என்ற பொருளைத் தருகிறது. இது ஐந்தாம் வேற்றுமை. இரண்டாவது வாக்கியத்தில் 'கந்தன்' என்ற பெயருடன் அது என்ற உருபு சேர்ந்திருக்கிறது. கந்தன் புத்தகத்திற்கு உரியவன் என்ற பொருள் ஏற்படுகிறது. இது ஆறும் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இன், நின்று என்பனவாம்.

(உ-ம்) காக்கையின் கரியது களாப்பழம். (காக்கை + இன்)
பள்ளியில் நின்று விலகினன். (பள்ளியில் + நின்று)

ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பனவாம்.

(உ-ம்) எனது புத்தகம் (என் + அது)
கந்தனுடைய வீடு (கந்தன் + உடைய)

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்கள் இன்ன வேற்றுமையில் வந்துள்ளன எனக் கூறுக:

1. அசோகர் புத்தருடைய போதனைகளைக் கேட்டுப் புத்த மதத்தைத் தழுவினர்.

2. நீதியின் வழுவாத நேர்மைக்குப் புகழ் பெற்றவர் அசோகர்.

---

13. உடற் பயிற்சி

நலம்	மனம்	உதிரம்	அசுத்தம்	கையாளுதல்
தசை	எளிது	உவகை	உழைப்பு	உடற்பயிற்சி
ஊன்	பழுது	உறுப்பு	செரித்தல்	விசாலித்தல்
பலம்	மக்கள்	துளைகள்	தளர்ந்து	பயக்கும்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மக்கள் நோயின்றி வாழ்வதற்குக் கொள்ளவேண்டிய வழிகளில் மிகச் சிறந்தது உடற்பயிற்சியேயாம். அது உடல் நலத்தை வளர்ப்பதோடன்றி, மனத்திற்கு ஊக்கத்தையும், உவகையையும் தரும்; அதனால் நமது வாழ்நாள் பெருகும். நமது வாழ்க்கை நலத்தைப் பெருக்கும்.

சிலர் நல்ல உறக்கமில்லாமலும், சிலர் உண்ட உணவு செரிக்காமலும், சிலர் வயிறு பருத்து, உடல் சிறுத்து, முகம் வெளுத்தும், சிலர் நடை தளர்ந்தும் வருந்துகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? உடற் பயிற்சியில்லாமையேயாம். 'உடற் பயிற்சியில்லா உடம்பு பாழ்.' ஆதலால், நாம் நலமாக இருப்பதற்கு உடற் பயிற்சி இன்றியமையாதது.

நமது உடல் பல உறுப்புக்களைக் கொண்ட ஒரு யந்திரம் போன்றது. கையாளப்படாத யந்திரம் பழுதடைவது போல, பயிற்சியற்ற உடம்பு விரைவில் கெட்டுப்போம். பயிற்சி செய்வதால், உடலிலுள்ள அசுத்தநீர் வியர்வையாகத் தோலிலுள்ள துளைகளின் வழியாய் வெளிப்படுகிறது.

உடற் பயிற்சி செய்யுங்கால் உடம்பு, கை, கால் முதலிய உறுப்புக்கள் அசைகின்றன அல்லவா? அவை அசையும் போது, உடம்பிலுள்ள ஊன் தனக்குள்ளேயிருக்கும் உதிர நரம்புகளை அழுத்துகின்றது. அப்போது நரம்புகளிலுள்ள இரத்தம் வேகமாய் ஓடி, உடம்பு முழுவதும் பரவுகின்றது.

உதிரம் பரவவே, இரைப்பை, குடல் முதலிய உடலின் உள்ளுறுப்பு ஒவ்வொன்றும் வேகமாய் அசைந்து, தன் தன் வேலையைச் செய்கின்றது.

அப்பொழுது இருதயம் விரைவாய் அடிப்பதால், மூச்சுப்பை உட்கொள்ளும் நல்ல காற்று உதிரத்திலுள்ள அசுத்தங்களை நீக்கும். சுத்தமாக்கப்பட்ட இரத்தம் உடலுக்கு உறுதியையும், மனத்துக்கு உற்சாகத்தையும் கொடுக்கிறது. நாம் உண்ணும் உணவு நன்றாய்ச் செரித்தலால், பசி அதிகரிக்கிறது. இதனால் நரம்புகள் வலியுறுதல், மார்பு விரிவடைதல், கெட்ட இரத்தம் தூய்மை அடைதல், மனவுறுதி, நினைவாற்றல், அறிவு வளர்ச்சி முதலிய நன்மைகள் உண்டாகின்றன.

உடற் பயிற்சிகள் வயதுக் கேற்றபடி மாறுபடும். இளைஞர்கள் செய்யும் பயிற்சிகள் எல்லாவற்றையும் வயது முதிர்ந்தவர்கள் செய்யமுடியாது. அவர்கள், வருத்தம் தராத உலாவுதல் போன்றவைகளைச் செய்யலாம். மக்கள் செய்யும் தொழிலுக்குத் தக்கபடியும் பயிற்சிகள் மாறுபடும். மன முயற்சி மட்டுமே யுடைய ஆசிரியர்களைப் போன்றவர்கள் அதிகமான பயிற்சிகளைச் செய்யவேண்டும். கடினமான தொழில்களைச் செய்பவர்களுக்கு அத்தொழில்களே உடற் பயிற்சிகளாம். பெண்கள் அவர்களுடைய உடல் நிலைக்கேற்ற பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்குக் கை கால்களை அசைப்பதே உடற் பயிற்சியாம்.

இனி, எத்தகைய பயிற்சிகள் உடலுக்கு உரத்தையும், நலத்தையும் கொடுக்கும் என்பதைக் கவனிப்போம்.

உலாவுதல்:—இது எளிதானது என்றாலும், மிகப் பழகிய நண்பர்களுடன் மனதில் எவ்வகைக் கவலையும் இன்றிச் செய்தால் மிகுந்த நன்மை பயக்கும். நடப்பதால் கெட்ட இரத்தத்தைச் சுத்தப்படுத்தக் கூடிய நல்ல காற்றைப் பெறுவதுடன், இரத்த வோட்டமும் ஏற்படும்.



கட்டை சுழற்றல்:— இது மார்பை விசாலப்படுத்தித் தசையை இறுக்கி உடல் முழுவதும் இரத்தத்தைப் பரப்பும்.

கசரத் அல்லது தண்டால்:— இது தசை, நரம்பு ஆகிய ஒவ்வொரு உறுப்பையும் வலிவுறச் செய்யும்.

கால்பந்து, கிட்டிப்பந்து, பலின் சடார், கிளித்தட்டு, நீந்துதல், சிலம்பம், மல்யுத்தம், சவாரி செய்தல், பந்தய ஓட்டம் முதலிய விளையாட்டுக்கள் நண்பர்களோடு சேர்ந்து விளையாடுவதால், நம்மை யறியாமலே நமக்கு ஊக்கமும், உற்சாகமும் உண்டாகின்றன.

உடற் பயிற்சி செய்வோர் கவனிக்க வேண்டிய விதிகள்:



1. உடற் பயிற்சி காற்றேட்டமான வெளிகளில் செய்யப்பட வேண்டும்.

2. பகற்காலத்தில் பயிற்சி செய்வதே சாலச் சிறந்தது.

3. வயிறு நிரம்ப உண்டபின், பயிற்சி செய்யக் கூடாது. அளவுக்கு மிஞ்சிய பயிற்சியும் கெடுதலாகும்.

4. உடற் பயிற்சியைச் சில நாள் செய்து, பல நாள் விட்டுவிடாது ஒழுங்காகச் செய்து வரவேண்டும்.

"சிலம்பமுதல் மல்யுத்தம், தேசிநடை கோள்ளின்
பலம்பரவும், மெய்இறுகும், பன்னத்—துலங்குபசி
உண்டாம்; கபவாத மோடுவலி சூலையும்போம்;
உண்டாம் மனத்திடமும் ஓர்."

— தேரையர்.

வினாக்கள்

1. உடற்பயிற்சி எவ்வாறு இன்றியமையாத தாகும்?
2. உடற்பயிற்சியால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. சில உடற்பயிற்சிகளையும், அவற்றால் பெறும் நன்மைகளையும் விளக்குக.

பயிற்சி

பின்வரும் வேற்றுமைகளைக் கவனிக்க:

கையின் கண் விரல்கள் உள்ளன.
நண்பா! வா.

முதல் வாக்கியத்திலுள்ள 'கையின் கண்' என்பது ஏழாம் வேற்றுமையாம். கண், இல், உள், இடம் என்பன இவ்வேழாம் வேற்றுமையில் உருபுகளாக வரும்.

இரண்டாவது வாக்கியத்தில் 'நண்பன்' என்ற பெயர்ச்சொல் அழைக்கப்படும் பொருளில் வருவதால் நண்பா என மாறியுள்ளது. இவ்வாறு வருவது எட்டாம் வேற்றுமை.

பின்வரும் பெயர்களிலுள்ள வேற்றுமைகளைக் கூறுக:

(1) வீட்டினுட் சென்றான்.
(2) அன்னையே! வணக்கம்.
(3) தோழா! வருக.

14. வீரமா முனிவர்

தகுதி	தூய்மை	பிரசங்கம்	மேனாட்டார்
இனம்	தைரியம்	கவர்ந்தது	இயற்பெயர்
ஆர்வம்	பிரசாரம்	நம்பிக்கை	தேனினுமினிய
ஆற்றல்	தொண்டு	வயமானார்	புத்திக் கூர்மை

முற்காலத்தில் முடியுடை வேந்தர்களாலும், வள்ளல்களாலும் போற்றி வளர்க்கப்பட்டுச் சிறந்து விளங்கியது நம் அருமைத் தாய்மொழியாகிய தமிழ்மொழி. இது இடைக் காலத்தில் சிறிது தாழ்நிலையுற்றது. மக்கள் தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் அற்றவராக வாழ்ந்து வரலாயினர். இச்சமயத்தில் தாய்மொழிப் பற்றுடைய சில பெரியோர்கள் தமிழை வளர்க்க அரும்பாடு பட்டனர்.

நம் நாட்டவரே யன்றி அயல் நாட்டினரும் தமிழ் வளர்ச்சி கருதி உழைக்க முன் வந்தனர். ஐரோப்பாவில் சிறப்புடன் விளங்கும் கிருஸ்துவமதக் கொள்கைகளை நம் தமிழ் நாட்டிலும் பரப்பக் கருதினர் பாதிரிமார். அதற்காக அவர்களிற் சிலர் நம் நாட்டுக்கு வந்தனர்; நம் தமிழ் மொழியை வருந்திக் கற்றுப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டதோடன்றி, கேட்போர் மகிழும் வண்ணம் சொற்பொழிவாற்றவும் பழகிக் கொண்டனர். மதப் பிரசாரத்திற்காகத் தமிழ் கற்ற மேனாட்டார், அதன் சுவையில் ஈடுபட்டுத் தமிழ் வளர்ச்சிக்கான வழிகளில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டனர். அவருட் சிலர் தமிழ் நூல்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்து பெரும் புலவர்களாக விளங்கினர். அத்தகைய பாதிரிமார்களில் வீரமா முனிவர் சிறந்தவராவர்.

அவர் இத்தாலிய நாட்டின் தலைநகராகிய ரோமாபுரியில் பிறந்தவர். அவரது இயற்பெயர் ஜோசப் பெஸ்கி என்பது. அவர் கிருஸ்துவ சமயத்தினர்; தமது மதத்தில்

நம்பிக்கையும் பற்றும் உடையவர்; மேனாட்டு மொழிகளாகிய கிரீக், லத்தின் முதலிய மொழிகளை நன்கு கற்றுப் பெருங் கல்விச் செல்வராக விளங்கினார். கிருஸ்துவ மதத்தை உலகமெங்கும் பரவச் செய்ய வேண்டுமென்பது அவரது ஆசை. அவரது மதப் பற்றையும், கல்விப் பெருக்கையும்

கண்ட சேசுசபையார், கிருஸ்துவ மதத்தைப் பரப்பும் வண்ணம் அவரைத் தமிழ் நாட்டிற்கு அனுப்பினர்.

ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே, அவர் கோவா நகருக்கு வந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்தாறு. பிறகு அவர் திருநெல் வேலிக்குச் சென்றார்; தமிழில் பேசவும் எழுதவும் கற்றுக்

கொண்டார். இனிய தமிழ்ச் சுவை அவர் மனதைக் கவர்ந் தது. அதனல் அவர் தமிழ் நூல்களையும் கற்கத் தொடங் கினர். அவர் ஆர்வமும், முயற்சியும் கொண்டு கற்றதால், தமிழில் சிறந்த புலமை அடைந்தார்; தமிழில் பிரசங்கம் செய்யவும், நூல்கள் இயற்றவும் தொடங்கினர். அவரு டைய புலமையும், பேரறிவும் தமிழ் மக்களால் கொண்டா டப்பட்டன. அவர்கள் அவரை வீரமா முனிவர் என்றழைத் தனர். வடமொழிப் பெயரான தைரிய நாதர் என்ற பெய ராலும் அவர் அழைக்கப்பட்டார்.

வீரமாமுனிவரின் இனிய பேச்சுகளில் தமிழ் மக்கள் வயமானர்கள். அவரது மத போதனைகளைக் கேட்டுப் பலரும் கிருஸ்துவ மதத்தைத் தழுவினர்கள்.

அறிவுடையவர்கள் யாவராலும் மதிக்கப்படுவார்கள் அன்ரோ? அக்காலத்தில் இருந்த ஆற்காட்டு நவாபு அவரை அழைத்து, அரசியல் காரியங்களில் தமக்குத் துணையாக அமர்த்திக் கொண்டார். அவருடைய புத்திக் கூர்மையையும், தகுதியையும் கண்டு மகிழ்ச்சியுற்ற சந்தா சாகிப் என்னும் அந் நவாபு அவருக்குப் பல கிராமங்களை இனமாக வழங்கினர். கல்வியின் பொருட்டும், மதத்தின் பொருட்டும் வீரமாமுனிவர் தம்முடைய வாழ்நாட்களை யெல்லாம் தமிழ் நாட்டிலே கழித்தார். அவர் தமது அறுப தாவது வயதில் பரகதி யடைந்தார்.

வீரமாமுனிவர் தமிழின் வளர்ச்சி கருதிச் செய்த தொண்டுகள் பல. தேம்பாவணி என்னும் ஓர் அரிய காவி யம் இயற்றினர். தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலை யியற்றினர். சதுரகராதி என்ற ஓர் அகராதியையும் அவர் இயற்றினர். மேல் நாட்டினராகிய வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைத் தமிழுலகம் என்றும் மறவாது.

வினாக்கள்

1. வீரமா முனிவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?
2. அவர் எவ்வாறு தமிழில் புலமை பெற்றார்?
3. அவர் ஆற்றிய அரும் பணிகள் யாவை?
4. அவர் இயற்றிய நூல்கள் யாவை?

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களுக்கு வேற்றுமை கூறுக:

(1) அவர் திருநெல்வேலிக்குச் சென்றார்.

(2) வீரமாமுனிவர் தம்முடைய வாழ் நாட்களை யெல்லாம் தமிழ் நாட்டில் கழித்தார்.

(3) முருகன் வீட்டைக் கட்டினான்.

(4) இக்கோவில் சோழனால் கட்டப்பட்டது.

(5) கோபுரத்தின் கண் கொடி பறக்கின்றது.

(6) முனிவர் தமிழில் சிறந்த புலமையைப் பெற்றார்.

(7) தம்பி! எப்பொழுது வந்தாய்?

2. எதிர்ப்பதம் கூறுக: முற்காலம், வாழ்வு, மேல், அறிவுடையார்.

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க:

(1) வீரமா முனிவரின் இனிய——தமிழ் மக்கள்——.

(2) இனிய தமிழ்ச் சுவை அவரது——கவர்ந்தது.

(3) முற்காலத்தில் முடியுடை வேந்தர்களாலும் வள்ளல்களாலும் போற்றி——சிறந்து விளங்கியது நம்——தாய் மொழியாகிய தமிழ் மொழி.

15. சித்திர விளக்கம்

பல்லோரைக் காத்த நல்ல பையன்



பின்வரும் குறிப்புக்களை வைத்துக் கதையை முடிக்க:

முதல் நாள் இரவு நல்ல மழை — எங்கும் பெரு வெள்ளம் — காலையில் சிறுவன் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருத்தல் — ரயில் பாதை யருகே வருதல் — ஆடுமாடுகளை அப்பால் வெருட்டல் — ரயில் பாதையைப் பார்த்தல் — வெள்ளத்தால் கரை உடைந்திருப்பதையும், தண்டவாளம் விலகியிருப்பதையும் கவனித்தல் — தூரத்தில் புகைவண்டி வரும் ஓசை கேட்டல் — பையன் ஆபத்தை உணர்தல் — உடுத்தியிருந்த சிவப்புச் சாயவேட்டியை அவிழ்த்தல் — கம்பில் கட்டிக் கொடிபோல் ஆக்கிக் காட்டுதல் — வண்டி ஓட்டுபவர் சிவப்புக்குறியைக் காணல் — அபாயத்தை யறிதல்—வண்டி நிற்றல் — வண்டி ஓட்டிகள்

கீழ் இறங்குதல் — சிறுவனை அடைதல் — அவனை வினவல் — கரைகள் உடைந்திருப்பதையும், தண்டவாளம் விலகியிருத்தலையும் காணல் — மக்களும் அவ்விடத்தை யடை



தல் — கூட்டமாகக் கூடுதல் — வண்டி ஓட்டுபவர் பையனது சமயோசித புத்தியைப் பாராட்டல் — அவனது மனோ தைரியத்தை மெச்சல் — மக்கள் உயிரைக் காத்த அவனது பரோபகாரத்தைப் போற்றல் — அவனது அருங் குணத்திற்காக அவனுக்குப் பரிசளித்தல் — சிறுவன் மாலையில் ஊருக்குச் செல்லல் — யாவருக்கும் தெரிவித்தல் — ஊரார் இச்சம்பவத்தைத் தெரிந்து கொள்ளல் — யாவரும் சிறுவனைக் கொண்டாடுதல்.

பயிற்சி

மேற்கண்ட நிகழ்ச்சிகளை அமைத்துச் சொந்தமாக ஒரு கதை எழுதுக.

16. பாரத தேசம்

பார்	பரமன்	வித்தகம்	முடிவரை
வளம்	பரவசம்	தவழ்ந்து	திருத்தலம்
சித்தர்	செழித்த	ஒப்பறும்	இயல்வளம்

பாரத தேசமென்றால் —இன்பப்
பரவசம் பிறக்குதென் அறிவினிலே

வீரர்கள் காத்த நிலம் —ஞான
வித்தகச் சித்தர்கள் விளங்குநிலம்

தீரர்கள் ஆண்ட நிலம் —நல்ல
செல்வமும் கல்வியும் செழித்தநிலம்

பாரெல்லாம் வணங்கும் நிலம்—தெய்வ
பக்தர்கள் பரமனைப் பாடும்நிலம் (பாரத)

முப்புறம் கடல்முரசும் —கன்னி
முனைமுதல் கௌரியின் முடிவரையில்

எப்புறம் பார்த்தாலும் —பச்சை
இயல்வளங் குலுங்கிடும் இனியநிலம்

கப்பல்கள் சூழ்ந்தநிலம்—கடல்
கரையெல்லாம் பொன்மணி குவிந்தநிலம்

ஒப்பறும் திருத்தலங்கள் —சுற்றி
ஓமென நதிதவழ்ந் தோடுநிலம். (பாரத)

—யோகி சுத்தானந்த பாரதியார்.

1. *பாரத நாடு கற்றோரால் எவ்வண்ணம் சிறந்திருந்தது ?*
2. *பாரத நாட்டின் செல்வவளங் கூறுக.*
3. *நம்மைக் காக்கும் நம் நாட்டுப் பெரியோர் யாவர் ?*

சொற்பொருள்:— *பார்—பூமி, இயல்—அழகு.*

17. விஞ்ஞானக் கலைஞர்

மதி	ஜீவனம்	நிறுவினார்	வழிகாட்டி
ஏழ்மை	அதிர்ச்சி	பயில்தல்	வானவூர்தி
விநாடி	ஈடுபட்டு	வானொலி	படக்காட்சி
விந்தை	மின்கதிர்	அதிசயம்	சாதாரணம்
விளைவு	தொல்லை	கிரகித்தல்	சீர்திருத்தம்
புதுமை	முயன்று	ஆராய்ச்சி	இசைத்தட்டு

இந்நாளில் நாம் கண்டு மகிழும் படக் காட்சி, வானொலி, இசைத்தட்டு முதலிய விந்தைகளெல்லாம் விஞ்ஞானக் கலையின் விளைவுகளேயாம். இக் கலைவல்லார் உலகில் பல நாடுகளில் தோன்றி, இடைவிடாது உழைத்துத் தம் மதிவன்மையால் பல புதுமைகளைக் கண்டு பிடித்து, உலகிற் களித்துச் சென்றிருக்கின்றனர். அத்தகைய பெரியார்களுள் மூவரது வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறுவோம்.

தாமஸ் ஆல்வா எடிஸன், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஒஹியோ மாகாணத்தைச் சேர்ந்த எரி ஜில்லாவில் மிலன் என்ற ஊரில் 1847-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் சாமுவேல் எடிஸன் என்பது. எடிஸனுக்கு இளம் பருவத்திலேயே புதுமைகளைச் செய்வதில் விருப்ப முண்டு. இந்த விருப்பத்தால் அவர் அடைந்த தொல்லைகள் பல. ஆனால் அத்தொல்லைகளால் அவர் மனங்கலங்காது முயன்று, வெற்றி பெற்றுப் புகழ் அடைந்தார்.

எடிஸன் பிறந்த குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளது. அதனால் அவர் பள்ளியிற் சேர்ந்து கல்வி பயில வில்லை. எனினும் வீட்டில் அன்னையிடம் படிக்கக் கற்றுக்கொண்டு, தாமாகவே பல புத்தகங்களை வாங்கிப் படிக்கலானார். ஜீவனத்தின் பொருட்டு, புகைவண்டிகளில் அவர் பத்திரிகை விற்றுவந்தார்.

இவருக்கு மின்சார ஆராய்ச்சியில் ஆர்வம் உண்டாயிற்று; பத்திரிகை விற்றுக் கொண்டிருந்த புகைவண்டியிலே ஓரிடத்தில் ஓய்வு நேரங்களில் அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டார். இவர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கையில், வண்டியின் அதிர்ச்சியால் இவர் வைத்திருந்த பாஸ்பரஸ் என்ற தீப் பாஷாணம் சிந்திவிடவே, வண்டியில் தீப் பிடித்துக் கொண்டது. அதனல் சினம்கொண்ட காவலன் இவரை ஓங்கி அறைந்து வெளியில் துரத்திவிட்டான். அவ் வறையால் இவரது காது செவிடாகி விட்டது. வேலையும் போய்விட்டது.



அதன்பின் தந்தியடிக்கும் வேலையிலமர்ந்து, தந்தியில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்; ஆராய்ச்சியின் காரணமாகப் பல இடங்களில் வேலை கிடைத்தும், நிலையாக இருக்க முடியாமல் அலைந்தார். இதற்குள் இவர் தாம் கண்டு பிடித்த பல புதுக் கருவிகளை விற்று ஒரு தொழிற்சாலை நிறுவினர்; பேசுங் கருவியில் பல புதுமைகளைச் செய்தமைத்தார்; ஒலிபெருக்கித் தந்தியையும் கண்டு பிடித்தார்.

இவர் 1877-ஆம் ஆண்டு கிராமபோனைக் கண்டு பிடித்தார்; முதலில் நிவார்க் என்னுமிடத்தில் அமைத்த தொழிற்சாலை இடம் பற்ருது போனதால், மென்லோ பார்க்கில் ஒரு பெரிய தொழிற் சாலை யமைத்தார்; பிறகு அதுவும் பற்ருது போகவே, 1886-ல் ஆரஞ்சு மலையின் அடிவாரத்தில் பெரிய தொழிற்சாலை யொன்றை நிறுவினர். அதன் பின் புதுமைகள் பெருகலாயின.

சினிமா என்னும் படக்காட்சி கண்டு பிடிக்கப்பட்டது. எடிஸன், எடுத்த காரியம் வெற்றிபெறும் வரை இடை விடாது உழைக்கும் இயல்புள்ளவர். இவர் தமது ஏழாவது வயதிலிருந்து ஓயாது உழைத்து, எண்பத்து நான்காம் வயதில் புகழுடம்பெய்தினர்.

மார்க்கோனி

புதுமைகள் எல்லாவற்றிலும் மேலாக விளங்குவது வானொலி. இதனைக் கண்டு பிடித்தவர் குக்லியல்மோ மார்க் கோனி என்பவராவர். இவர் 1875-ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் பிறந்தவர். இளம்பருவத்திலேயே புதுப் பொருள்களைப் பற்றி மிகவும் ஊக்கத்துடன் ஆராயும் இயல்புடையவராக இருந்தார். இவர் மாணவராக இருக்கும் பொழுதே தாமஸ் ஆல்வா எடிஸனது மின்சார ஆராய்ச்சிகளைப் பற்றிக் கேள்வியுற்றார். உடனே இவரும் அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டார்.

சூரியன் ஒளி எங்கும் பரந்திருப்பது போல, மின்கதிர்களையும் எங்கும் பரவும்படி செய்யலாம் என எண்ணினர். அதன் மூலம் கம்பியில்லாமலே செய்தியனுப்ப முயன்று ஒரு கருவியைச் செய்துமுடித்தார். இத்தாலியிலுள்ளவர்கள் இவர் சொல்வதை நம்பவில்லை. உடனே இவர் இங்கிலாந்து சென்று, தம் ஆராய்ச்சியை விளக்கிக் காட்டினர். அதன் பின் அமெரிக்கா சென்று, அங்கிருந்து செய்தியனுப்பினர். நடுவில் பல தடைகள் ஏற்பட்ட போதிலும் முடிவில் வெற்றியடைந்தார். உலகம் இவரைப் புகழ்ந்தது.

1909-ஆம் ஆண்டில் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான அறிஞர் என்ற முறையில் நோபல் பரிசு இவருக்கு அளிக்கப்பட்டது. அதன் பின் பல நாடுகளும் இவர் கண்டு பிடித்த கருவியை அமைத்துக் கொண்டன. இவரது தாய் நாடு இவரை வரவேற்றுப் பட்டமளித்து உபசரித்தது.

ஒலியை மின்சார அலைகளாக மாற்றி, ஈதரின் மூலம் உலகெங்கும் பரவச் செய்யலாம் என்பதைக் கண்டறிந்தார். அவ்வொலியைக் கிரகிக்கும் கருவி மின்னல்களை ஈதரிடமிருந்து வாங்கி, மீண்டும் ஒலியாக மாற்றிப் பலரும் கேட்கும்படி செய்கிறது. மின்சார அலைகள் விநாடிக்குப் பல்லாயிரக் கணக்கான மைல்கள் வேகத்தில் பரவுகின்றன. உலகில் எந்த மூலையில் இருந்து பேசினாலும் உடனுக்குடன் கேட்க முடியும். இவ்வாறு அமைந்துள்ள புதுமை தான் வானொலி.

வானொலியால் ஏற்படும் நன்மைகள் பல. அது வானத்திலும், கடலிலும் ஏற்படும் இன்னல்களை உடனே உலகிற்கறிவித்து உதவி பெறத் துணை செய்கிறது. கல்வி வளர்ச்சிக்கும் அது பெரிதும் பயன்படுகிறது. பொழுது போக்கிற்கு இசை விருந்தளிக்கின்றது. கால நிலை, பொருள்களின் விலை விவரங்கள் முதலியவற்றை அது நமக்கு உடனுக்குடன் அறிவிக்கிறது. உலக நிகழ்ச்சிகளை அவ்வப்போது தெரிவிக்கின்றது.

இத்தகைய அதிசயத்தைக் கண்டு பிடித்து, உலகிற்குப் பெருநன்மை விளைத்த மார்க்கோனி, தளராத தன்னம்பிக்கையும், கலங்காத மனவுறுதியும் உடையவராக விளங்கினர். இவர் 1937-ஆம் ஆண்டில் காலமானர்.

வில்பர் ரைட்

மனிதன் பறவையைப் போல் ஆகாய விமானத்தில் பறந்து நொடிப் பொழுதில் நெடுந் தூரத்தையும் தாண்டி வருவது இந்நாளில் சாதாரணமாகி விட்டது. ஆனல் இவ்

விந்தையைக் கண்டு பிடிக்கும் முன் அத்துறையில் முயன்றவர் எவ்வளவோ துன்பங்களை யடைந்திருக்கின்றனர். பலர் இம் முயற்சியில் உயிரையும் இழந்திருக்கின்றனர்.



அத்துறையில் இடைவிடாது முயன்று வெற்றி பெற்றவர்களில் வில்பர் ரைட், ஆர்வில் ரைட் என்ற சகோதரர் இருவரும் தலைசிறந்தவராவர்.

இவர்களுடைய தந்தையார் அமெரிக்க நாட்டில் டேய்டன் என்னும் நகரில் கிருஸ்துவ மத குருவாய் இருந்தார். ரைட் சகோதரர் கல்விச் சாலையைவிட்டு நீங்கியதும் அச்சுப் பொறியொன்றை வைத்துக்கொண்டு ஒரு செய்தித் தாளை வெளியிட்டு வந்தனர். அப்பொழுதே சைக்கிள் வண்டிகளைச் செய்து விற்று வரலாயினர்.

1896-ஆம் ஆண்டு லிலியந்தால் என்னும் ஜர்மானியர் முதன் முதலாகக் காற்றில் பறக்கும் 'கிளைடர்' ஒன்றைச் செய்து பறக்க முயற்சிக்கையில் உயிர் துறந்தார். இதைக் கேள்வியுற்ற ரைட் சகோதரர், இம்முயற்சியில் ஈடுபட்டு 1900-ஆம் ஆண்டு ஒரு வானவூர்தியைச் செய்து முடித்தனர். அது சிறிது தூரமே பறந்தது. இப்படிப் பலமுறை பலவூர்திகளைச் செய்து பறக்க முயன்றனர். முடிவில் நெடுந்தூரம் நெடுநேரம் பறக்கக்கூடிய வானவூர்திகளைச் செய்து முடித்துப் பறந்து காட்டினர். அமெரிக்கா வெங்கும் இவர்கள் புகழ் பரவலாயிற்று. முதலில் வீண் செயல் என்றிகழ்ந்தவர்கள் பின் மாண் செயல் எனப் புகழ்ந்தனர்.

பிறகு இவர்கள் பிரான்சு நாட்டிற்குச் சென்று, பாரிஸ் நகரத்தின் மேல் விமானத்தில் பறந்துகாட்டினர். உலகமெங்கும் புகழ்பெற்று, இந்நாளில் வானவூர்திகள் பல வகையில் திருத்தங்களை யடைந்து பறவைகளைப் போலப் பறந்து வருகின்றன. அதனால் ஏற்படும் நன்மைக்கு அளவே யில்லை. ஒரு மாதத்தில் செய்யும் பிரயாணம் ஒரே நாளில் செய்யப்படுகிறது. மணிக்கு இருநூறு மைல் வேகத்தில் பறந்து செல்லும் விமானங்களும், பெருஞ் சுமைகளையும், நூற்றுக்கணக்கான ஆட்களையும் தாங்கிச் செல்லும் விமானங்களும் தோன்றி விட்டன.

இவ்வளவு சிறப்புவாய்ந்த வானவூர்தியை நாம் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் ரைட் சகோதரர்களே யாவர். இதன் உதவியால் ஆகாயத்திற் பறந்து காற்றை வென்ற பெருமை இவர்களுக்கே உரியது. உழைப்பால் உயர்ந்த விந்தையைக் கண்டுபிடித்த இவர்களைப் போற்றவேண்டியது நமது கடமையாகும்.

வினாக்கள்

1. தாமஸ் ஆல்வா எடிஸனின் இளம்பருவத்தைப் பற்றி வரைக.
2. அவர் கண்டுபிடித்த கருவிகளையும், அவரது ஆராய்ச்சித் திறனையும் விளக்குக.
3. மார்க்கோனி எவ்வாறு வானொலியைக் கண்டுபிடித்தார்?
4. வானொலி எவ்வாறு இயங்குகின்றது?
5. ஆகாய விமானம் யாரால்,எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?

பயிற்சி

படித்தான், வருகின்றான், பாடுவார் இம்மூன்றும் வினைச் சொற்கள். முதற்சொல் நடந்த செய்தியைக் குறிக்கிறது. இது இறந்த காலம். இரண்டாவது சொல் வினை தொடங்கி முற்றுப்

பெருமையைக் காட்டுகிறது. இது நிகழ் காலம். மூன்றுவது சொல் இனிமேல் நிகழப்போவதைக் காட்டுகிறது. இது எதிர் காலம் அல்லது வருங்காலம். வினைச்சொற்கள் மூன்று காலங்களிலும் வரும்.

பின்வரும் சொற்களில் முக்கால வினைகளைக் கூறுக :

ஓடிற்று, கூறுவார், தோன்றின, செய்கின்றார், இருந்தார், பறந்தது, எண்ணுவார்.

---

18. அராபியப் பெண்கள்

பதம்	துணிவு	கூடாரம்	நாட்டியம்
பலம்	தன்மை	அஞ்சாது	விருந்தினர்
தீங்கு	வாசகம்	பின்பற்றி	பாலைவனம்
வேகம்	பக்குவம்	துறந்தால்	போர்க்களம்
கடந்து	வெப்பம்	மேய்த்தல்	மணல்வெளி

அரேபியா நமது இந்தியாவுக்கு மேற்றிசையிலுள்ள ஒரு நாடு. இந்நாட்டின் பெரும் பாகம் வரண்ட பாலைவனம். பாலைவனப் பிரதேசங்களில் ஆங்காங்கே சோலைகள் காணப்படும். அவைகளுக்குப் பாலைவனச் சோலைகள் என்று பெயர். இந்நாட்டு மக்களாகிய அராபியர்கள் அவற்றிற்கு அருகே இருந்துகொண்டு பேரீச்சை, தானியங்கள் முதலியவைகளைப் பயிரிட்டும், மிருகங்களை வளர்த்தும் காலம் கழிப்பர். இது முகமதிய மக்களுக்குச் சிறந்த தலங்களாகக் கருதப்படுகின்ற மெக்கா, மெடினு முதலிய நகரங்களைத் தன்பாற்கொண்டது.

இஃதன்றி, அரேபியா சிறந்த குதிரைகளுக்கும் பேர் போனது. அராபியக் குதிரைகள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நமது தமிழரசர்களும் இத்தகைய குதிரைகளைப் பெரு விருப்பமுடனே கூட்டங் கூட்டமாக

விலை கொடுத்து வாங்கினதாக நமது பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய மணல் வெளிகளடங்கிய அரேபியாவில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல வேண்டுமானால், ஒட்டகத்தின் மேலேதான் ஏறிப் போகவேண்டும். இதனால் ஒட்டகம் 'பாலைவனக் கப்பல்' என்று சொல்லப் படுகிறது. ஒட்டகம் இம்மணல் வெளிகளில் மிகுந்த வேகமாய் நடந்து செல்லும். ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான ஒட்டகங்களில் வணிகர்கள் பிரயாணம் செய்வார்கள். இதற்குக் 'காரவான்' என்று பெயர்.

இந்நாட்டுப் பெண்கள் மிகுதியும் பலமும், தைரியமும் உடையவர்கள். இவர்கள் முற்காலங்களில் ஆண் மக்களைப் போலவே போர்க்களம் புகுந்து, அஞ்சாது சண்டை செய்து இருக்கிறார்கள்.

அராபியப் பெண்கள், வீடுகளில் தமது தாய்மார்களுக்கு மிகுதியும் உதவியாக இருப்பார்கள்; தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பார்கள்; நல்ல பக்குவமாக உணவு சமைப்பார்கள்; சிலவேளைகளில் தையல் வேலைகளையும் செய்வார்கள். சில பெண்கள் ஆடுகளை ஓட்டிக் கொண்டு போய் மேய்த்து வருவார்கள். அவர்கள் ஆடுகளை ஓட்டிக் கொண்டு நெடுந்தூரம் போவது உண்டு; எவ்வளவு தூரம் சென்றாலும் அவர்கள் அஞ்சுவதில்லை. சிறுமிகள் அவ்வாறு மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒருவரும் அவர்களுக்குத் தீங்கு செய்யத் துணியமாட்டார்கள்.

இப்பெண்கள் தமது இளவயதிலேயே காப்பி தயாரிக்கக் கற்றுக் கொள்வார்கள்; தாய்மார்கள் இல்லாத காலத்தில் விருந்தினர் வீட்டுக்கு வந்தால், அவர்களுக்கு உடனே காப்பி தயாரித்துக் கொடுத்து உபசரிப்பார்கள். இது மிகவும் நல்ல குணம் அல்லவா? அராபியச் சிறு

வர்கள் தம் தாய்மார்களிடத்தில் அதிக அன்பு உள்ளவர்கள்; தாயார் சொல்லைத் தட்டி நடக்கமாட்டார்கள்; 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்னும் வாக்கியத்தை அவர்கள் உறுதியாய்ப் பின்பற்றி நடக்கிறார்கள்.

செல்வர் வீட்டுச் சிறுமிகளோ பாடவும், நாட்டியம் ஆடவும் கற்றுக் கொள்வார்கள். சில பெண்கள் பெரிய பாடல்களைப் பாடம் பண்ணி நன்றாய் ஒப்பிப்பார்கள். சில பெண்கள் ரொட்டிகள் செய்யவும், பழங்களைப் பதம் செய்யவும் கற்றுக் கொள்வார்கள். பேரீச்சம்பழம் அரேபியாவில் மிகுதியாக உண்டாகிறது. எளியவர்கள் பேரீச்சம் பழத்தை உணவாகக் கொள்வர்.

அராபியர்களில் சிலர், வீடுகள் இல்லாமல் ஆடுகளை மேய்த்துக் கொண்டு ஊர் ஊராகத் திரிவார்கள். அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கூடாரம் அடிக்கப் பழகிக் கொள்வார்கள். ஏழைப் பெண்கள் கூடாரத்தில் வாழ்வார்கள்.

அரேபியா தேசம் அதிக வெப்பமானது. அதனால் அங்கே இருப்பவர்கள் பருத்தி ஆடைகளையே உடுத்திக் கொள்கின்றனர். அதிலும் வெண்மையாகிய ஆடைகளே மிகுதியும் உபயோகப்படுகின்றன. வெள்ளையாடை சூரிய வெப்பத்தைத் தடுக்கும் தன்மையுள்ளது. அதனால் தான் அராபியர் பருத்தி நூலால் ஆகிய ஆடைகளையே மிகுதியும் உபயோகிக்கின்றார்கள். நம்முடைய நாடும் சிறிது வெப்பமானதே. ஆகையினாற்றான் நாமும் பருத்தியாடைகளையே மிகுதியும் உபயோகப்படுத்துகிறோம்.

வினாக்கள்

1. அரேபியா நாடு எதற்குப் பெயர் போனது ?
2. ஒட்டகம் 'பாலைவனக் கப்பல்' என அழைக்கப்படுவதேன் ?
3. அராபியப் பெண்களின் வேலைகள் என்ன ?

4. செல்வரின் பெண்கள் எவ்வாறு வாழ்கின்றனர்?

5. அராபியரின் உணவு, ஆடை முதலியவைகளைப் பற்றி வரைக.

பயிற்சி

வருகிறான், போகின்றான். இவை நிகழ்கால வினை முற்றுக்களாகும்.

கிறு - கின்று என்பவை நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள்.

பின்வரும் வாக்கியங்களில் நிகழ்கால வினைச்சொற்களை அமைத்து முடிக்க:

பெண்கள் ———— (பாடு)
மாணவன் ———— (படி)
அவன் ———— (பேசு)
நான் ———— (சொல்)

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க :

1. அராபிய தேசம் அதிக ——— தேசம்.

2. அவர்கள் பருத்தி —— ஆகிய ——— உபயோகிக்கின்றனர்.

3. அராபியப் பெண்கள் வீடுகளில் தமது ——— மிகுதியும் ——— இருப்பார்கள்.

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க :

அழகாக, வெப்பமான, பழகி, தடுக்கும்.

பின்வரும் சொற்களில் உள்ள வினைகளுக்குக் காலங் கூறுக:

கண்ணன் நேற்று வந்தான்.
செங்குட்டுவன் வடநாடு சென்றான்.
அண்ணன் நாளை வருவான்.
மாணவர்கள் நன்றாய்ப் படிக்கின்றார்கள்.
வேலைக்காரன் பால் கொண்டு வருகிறான்.
நீ வேலை செய்தால் கூலி பெறுவாய்.

19. விவேகானந்தர்

குரு	உத்தமர்	அடக்கம்	உரைத்தல்
சமம்	சுவாமி	அண்மை	வேறுபாடு
ஊறு	வறியர்	பிறைமதி	பாராட்டல்
இசை	துன்பம்	கால்நடை	வழக்கறிஞர்
துறவி	இன்பம்	புள்ளினம்	உபந்நியாசம்
துரத்தி	பயின்று	பாவித்தல்	நினைவுத் திறன்

எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்று எண்ணுவர் பெரியோர். அவர்கள் பிற உயிர்களுக்கு நேரும் துன்பங்களைப் போக்குவதற்காகப் பெரிதும் பாடுபடுவார்கள். நமது நாட்டில் அத்தகைய பெரியோர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் சுவாமி விவேகானந்தர் ஒருவர். இவர் உலகப் புகழ் வாய்ந்த உத்தமர்.

இவருக்குப் பெற்றோர்களால் இடப்பட்டபெயர் நரேந்திரர் என்பதாம். இவர் கல்கத்தாவிலுள்ள ஒரு சிறந்த குடும்பத்தில் 1863-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் விசுவநாத தத்தர்; தாயார் பெயர் புவனேசுவரி.

நரேந்திரர் இளமையில் ஆங்கிலம் பயின்று வந்தார்; தமது இளமைப் பருவத்திலேயே கூரிய அறிவும், சிறந்த நினைவுத்திறனும் உடையவராக விளங்கினர். இவருக்கு இசையிலும், வடமொழியிலும் நல்ல பயிற்சியுண்டு; செவிக்கு இனிமையாகப் பாடுவார்; தைரியசாலியாகவும் விளங்கினர். பயிரிடும் தொழிலில் இவருக்கு விருப்பமுண்டு; கால்நடைகளிடமும், புள்ளினங்களிடத்தும் அன்பு பூண்டிருந்தார்; அவைகளோடு கொஞ்சி விளையாடுவார். சிறுவர்களோடு விளையாடும் பொழுதும் அவர்கள் அனைவருக்கும் தலைமையாகவே இருந்து நடத்துவார். எதனையும் ஆராய்ந்து அறிவார்.

இவர் தமது இருபதாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார்; பிறகு வழக்கறிஞராவதற்குப் படித்தார். அக் காலத்தில் கல்கத்தாவைச் சேர்ந்த தக்ஷிணேசுவரம் என்னும் இடத்தில் ராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சிறந்த ஞானி. நரேந்திரர் அவரது பெருமையைக் கேள்வியுற்று, அங்குச் சென்று அவருடன் பழகி வந்தார். வரவர இருவரது அன்பும் பிறைமதி போல நாளும் வளர்வதாயிற்று. நரேந்திரர் பரமஹம்ஸருடைய நல்லுபதேச மொழிகளைக் கேட்டும், அருளைப் பெற்றும் துறவியாயினர். அப்பொழுது விவேகானந்தர் என்னும் பெயர் இவருக்குக் குருவால் இடப்பட்டது.

விவேகானந்தர் பல நாடுகளுக்குச் சென்றதன் பயனாகப் பல உண்மைகளைக் கண்டறிந்தார். எடுத்துக் காட்டாக, இவர் ஒரு சமயம் காசியில் தங்கியிருந்த பொழுது, கோயிலுக்குச் சென்று வெளியே வந்தார். அப்பொழுது ஒரு குரங்குக் கூட்டம் இவரைப் பின் தொடர்ந்து துரத்திக்கொண்டு வர இவர் ஓடினார். அதைக் கண்ட ஒரு துறவி, இவரை நோக்கி, "எதிர்த்து நில், ஓடாதே" என்றார். உடனே இவர் எதிர்த்து நிற்கக் குரங்குகள் ஓடலுற்றன. இச்சம்பவத்திலிருந்து இவர், "பல ஊறுகளுக்கும் மனங் கலங்காமல் பொறுமையுடனிருந்து, அவைகளைப் போக்க வழி தேட வேண்டும்" என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டார்.

இவர், மக்கள் யாவரையும் தம் உடன்பிறந்தவரைப் போலவே கருதினர்; செல்வர் வறியர், உயர்வு தாழ்வு என்பன போன்ற வேறுபாடுகளைப் பாராட்டாது, யாவரையும் சமமாகவே பாவித்தார். இவர் கன்னியாகுமரியில் தங்கியிருந்த காலத்தில், "நான் ஒரு இந்தியன்; ஒவ்வொரு இந்தியனும் எனது உடன் பிறந்தவன்" என்று கூறியுள்ளார். "ஒவ்வொருவரும் கடவுளைப் பற்றியும், அவரது அருளைப் பெறுதற்கான வழிகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். மதவேறுபாடுகளைப் பாராட்டக் கூடாது. எல்லா மதங்களும் ஒரே உண்மையைத் தான் உரைக்கின்றன" என்று இவர் மக்களுக்குப் போதித்தார்.

விவேகானந்தர் பல நாடுகளுக்குஞ் சென்று உபந்நியாசங்கள் புரிந்தார். அதனல் இவரது புகழ் எங்கும் பரவியது; இந்தியாவின் பெருமைகளை நாடெங்கும் பரப்பினர். கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள பேலூர் என்னும் இடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஒன்று இவரது முயற்சியால் நிறுவப்பட்டது. 1903-ஆம் ஆண்டு ஜுலை மாதம் இப் பெரியார் இவ்வுலகத்தினின்றும் பிரிந்தார். கங்கைக் கரையில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இப்பொழுது அங்கு ஒரு கோவில் கட்டி, அதில் இப்பெரியாரது உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது.

இவரது நண்பர்களும், மாணவர்களும் பரமஹம்ஸரது பெயரால் பல இடங்களிலும் மடங்களை அமைத்திருக்கின்றனர்கள்; வெளி நாடுகளிலும் பல மடங்களிருக்கின்றன. அம்மடங்களிலுள்ள துறவிகள் பலரும் விவேகானந்தர் காட்டிய வழியைப் பின்பற்றி நம் நாட்டுக்கு நல்ல தொண்டாற்றி வருகின்றனர்கள்; ஆங்காங்கு கல்விச்சாலைகளை அமைத்து, நம் நாட்டுச் சிறுவர்களுக்குக் கல்வி போதித்து வருகின்றனர்கள். சன்மார்க்க போதனைகளைச் செய்கிறர்கள். இவர்கள் தொண்டு நாளும் சிறந்து ஓங்குவதாக.

வினாக்கள்

1. விவேகானந்தர் யார்? அவருடைய பண்புகள் யாவை?

2. அவருடைய இளம் பருவம் எவ்வாறு கழிந்தது?

3. பரமஹம்ஸரின் தொடர்பு இவருக்கு எவ்வாறு ஏற்பட்டது?

4. விவேகானந்தர், 'துன்பங்கட்கு மனங்கலங்காது எதிர்த்து நிற்றல் வேண்டும்' என்னும் உண்மையை எவ்வாறு உணர்ந்தார்?

5. இவர் ஆற்றிய அரும் பணிகள் யாவை?

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களைக் கவனிக்க:

மாணவன்	படித்தான்	—	த்
அவன்	உண்டான்	—	ட்
நான்	சென்றேன்	—	ற்
சிறுவன்	விளையாடினான்	—	இன்

படித்தான், உண்டான், சென்றேன், விளையாடினான். இந் நான்கு வினைச்சொற்களும் இறந்தகாலத்தைக் காட்டுகின்றன. வினைச் சொல் இடைநிலையே காலம் காட்டும். த், ட், ற், இன் இந்நான்கும் இறந்தகால இடைநிலைகளாம்.

பின்வரும் வாக்கியங்களில் இறந்தகால வினைச் சொற்களை அமைக்க:

கண்ணன் ——— (பார்)

அரசன் நாட்டை ——— (ஆள்)

அவன் பகைவரை ——— (வெல்)

அவன் ——— (பாடு)

20. இசைக்கலை

பண்	நாடகம்	உள்ளம்	தாலாட்டு
இசை	பாக்கள்	பொருள்	இயங்கும்
தாளம்	பயனுற	திருவிழா	போர்க்களம்
இழுக்கு	கவர்ந்து	அயர்ப்பு	பண்டைக்காலம்
தேர்ச்சி	சங்கீதம்	கீர்த்தனை	பல்கலைக் கழகம்

நீங்கள் நாடகம், படக்காட்சி முதலியவைகளைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? படக் காட்சியைப் பார்த்துவிட்டு வெளியில் வரும்பொழுது பலர் அங்குப் பாடிய பாட்டுக்களைப் பாடிக்கொண்டே மகிழ்ச்சியுடன் செல்வர். அவ்வாறு செல்வதற்குக் காரணம் என்ன? அந்தப் பாட்டின் இசையும், பொருளும் அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்டன என்பதே.

இசை இன்பமயமானது. இசையுடன் கலந்த பாட்டு அமுத மயமாகவே விளங்கும். பாட்டு நன்றாக இல்லாமல் இருந்தாலும், இசையுடன் பாடப் பட்டால் இன்பமாகவே இருக்கும். 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்று கூறியதும் இக்கருத்தை விளக்குவதே. இசையைப் பயனுறச் செய்வது பாட்டு. இசை உயிரென்றால், பாட்டு அவ்வுயிர் இயங்கும் உடலாகும். பாடலால் பண் பயனடைகின்றது. அதுபோலவே பண்ணால், பாடலும் பெருமையடைகின்றது.

இசையை யாவரும் விரும்புவர். குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காகத் தாய்மார் பாடும் தாலாட்டுப் பாடல்களை நீங்கள் கேட்டதில்லையா? சிறு பெண்கள் விளையாடும் பொழுதுகூட இசை கலந்த பாட்டுக்களைப் பாடிக்கொண்டே ஆடுவர். திருமண நிகழ்ச்சிகளில் சங்கீதம் முக்கிய இடம் பெறுகின்றது. திருவிழாக் காலங்களிலும் இசை பல விதத்திலும் பயன்படுகிறது. வீரர்கள் போர்க்களம் செல்லும்

பொழுது கூட வீரம் ஊட்டும் பாட்டுக்களைப் பாடிக் கொண்டே செல்வர். கடவுளைத் துதிப்போர் இனிய துதிப் பாடல்களால் பாடி மகிழ்வர். பிச்சைக்காரர்கள் கூடத் தெருக்களிலும், புகைவண்டிகளிலும் தங்களால் இயன்ற பாட்டுக்களைப் பாடிப் பிச்சை கேட்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

பழந்தமிழர் இசைக் கலையில் தேர்ச்சிபெற்றவரான தால், இசைப் பாக்கள் பாடி இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தனர் என்பது பழந் தமிழிலக்கியங்களால் நன்கு தெரி கிறது. பெண்கள் பந்தாடும் பொழுதும், நெல்குற்றும் பொழுதும்கூட அயர்ச்சி தோன்றாதிருக்கும்படி பலவகைப் பாடல்களைப் பாடுவதுண்டு.

கடவுளை இசைப்பாக்களால் துதிக்கத் தொடங்கிய காலத்தில் 'தேவாரம்', 'திருவாசகம்', 'திருவாய்மொழி' முத லிய நூல்கள் தோன்றின. அவற்றைப் பின்பற்றி இசைப் பாக்களாகிய நூல்கள் பல தோன்றின.

தமிழில் கீர்த்தனை பாடும் முறை பரவின பிறகு, பல கீர்த்தனை நூல்கள் எழுதப்பட்டன. கோபால கிருஷ்ண பாரதியார் எழுதிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும், முத்துத் தாண்டவர் கீர்த்தனைகளும், இராம நாடகம், அரிச்சந்திர நாடகம் போன்ற நூல்களும் அவ்வகையைச் சேர்ந்தனவே.

பிற்காலத்தில் பாரதியார் தோன்றித் தேசீயப் பாடல் களைப் பாடித் தமிழர்க்குப் புத்துணர்ச்சி யூட்டினார். இவரது பாட்டுக்கள் கவியழகும், பண்ணின் இனிமையும் கொண்டு தாளத்துடன் பாடுவதற் கேற்றவாறு அமைந்துள்ளன.

இப்பொழுது தமிழில் இசைப் பாடல்கள் பெருகிவளர வேண்டுமென்று கருதி, காலஞ்சென்ற ராஜா சர். அண்ணா மலைச் செட்டியாரவர்கள் தமது பல்கலைக் கழகத்தின் சார்பில் இசைப் பாட்டுக்களுக்குப் பரிசு வழங்க ஏற்பாடு செய்துள்

ளார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் போன்ற புலவர் பலரும் பல இசைப் பாட்டுக் களைப் பாடி வெளியிட்டு வருகின்றனர்.

பண்டைக் காலத்தில் இசையைக் குரல், துத்தம், உழை, இளி, விளரி, தாரம், கைக்கிளை என எழுவகையாகப் பாகுபாடு செய்து பயின்று வந்தனர். காலப் போக்கில் கர்நாடக சங்கீதம் பரவியபின் ச, ரி, க, ம, ப, த, நி, என்ற ஏழு ஒலி களில் அடக்கிப் பாடி வருகின்றனர்.

இடைக் காலத்தில் சிறிது உறங்கிக் கிடந்த இசைத் தமிழ் இப்பொழுது விழிப்புற்று வளர்ந்து வருகின்றது. சினிமாக்களிலும், வானொலி நிலையங்களிலும், இசைக் கழ கங்களிலும் இன்னிசைப் பாக்கள் பாடப்படுகின்றன. எல் லோருக்கும் இன்பமளிக்கும் இக்கலையில் ஒவ்வொருவரும் சிறிதளவாவது பயிற்சி பெறுதல் நலமாகும்.

வினாக்கள்

1. இசையும் பாட்டும் எவ்வாறு தொடர்புடையன ?
2. தமிழிசை நூல்கள் எவை ?
3. தமிழிசை பெருக என்ன முயற்சி செய்யப்பட்டுள்ளது ?
4. பண்டைத் தமிழிசை எவ்வாறு அமைந்திருந்தது ?

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் பயனிலையாக வரும் வினைச்சொற் களைக் கவனிக்க:

நான் படிப்பேன்——ப்

அவன் வருவான்——வ்

படிப்பேன், வருவான் என்பன இனிமேல் நடக்கப் போவ தைக் குறிப்பதால் எதிர் காலம் காட்டும் வினைகளாம். ப், வ் என்பன எதிர் காலங்காட்டும் இடைநிலைகளாம்.

பின்வரும் வாக்கியங்களில் எதிர்கால வினைச்சொற்களை அமைக்க:

நான் ———————(கொடு)

அவள் ———————(கூறு)

அவர்கள் இவ்வேலையைச்———————(செய்)

அவன் சுமைகளை———————(சும)

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க:

யாவரும், இயன்ற, புத்துணர்ச்சி.

---

21. எனது பிரயாணம்

அருவி	மாற்றம்	ஆதிக்குடி	உடுப்புகள்
காட்சி	பலவகை	பன்னிறம்	இசைந்தான்
சரக்கு	விடுமுறை	வானளாவி	நிறைவேற்று
பூங்கா	நெடுநாள்	பரிசோதகர்	பயணச்சீட்டு
கம்பளி	கிட்டியது	இணங்குதல்	சந்திப்பு நிலையம்

நான் இருப்பது சிந்தாமணி. எனக்கு நீலகிரியைக் காண வேண்டுமென்று நெடுநாட்களாக ஆசையிருந்தது. அவ்வாசை நிறைவேறுதற்கான சமயம் கிட்டியது. சென்னை புகைவண்டி நிலையத்தைச் சார்ந்த அலுவலில் இருந்த என் மாமன், உதகமண்டலத்திற்கு மாற்றப்பட்டு வேலை பார்த்து வந்தார்.

அவர் இவ்வாண்டு கோடைகால விடுமுறையில் என்னை அங்கு வரும்படி கடிதம் எழுதினர். அக்கடிதத்தைக் கண்டதும் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி யிருந்திருக்கும்! நானும் விடுமுறை நாட்களை அங்குச் சென்று கழிக்க எண்ணங் கொண்டு, பெற்றோர்களிடத்தில் எனது விருப்பத்தை வெளி யிட்டேன். அவர்களும் இசைந்தனர்.

எனது பாடசாலையும் கோடை விடுமுறைக்காக மூடப் பட்டது. நான் புறப்படும் நாளையும் தேதியையும் வண் டியையும் குறிப்பிட்டு, என் மாமனுக்கு ஒரு கடிதம் எழுதி னேன். எனது நண்பன் ஒருவனும் என்னுடன் வர இசைந்தான்.

எனது தகப்பனார் எனக்கு,குளிரைப் போக்குதற்குரிய கம்பளி யுடுப்புகள் தைத்துக் கொடுத்தார்; எனது செல வுக்கு வேண்டிய பணமும் கொடுத்தார்.

ஏப்ரல் 4-ம் தேதி நானும் எனது நண்பனும், பெற்றோ ரிடம் விடைபெற்றுக்கொண்டு எங்களது படுக்கைகளுடனும்,

பெட்டிகளுடனும் திருச்சிராப்பள்ளிச் சந்திப்பு நிலையத்தை யடைந்தோம். அப்பொழுது மணி 9. இருவரும் பயணச் சீட்டுகள் வாங்கிக் கொண்டோம். வழியில் உள்ள சீட்டுப் பரிசோதனைக் காரரிடம் சீட்டுகளைக் காட்டிவிட்டு, நிலையத் தின் உள்ளே சென்றோம்; வண்டியும் வந்தது. காலியா யிருந்த ஒரு வண்டியில் நாங்கள் ஏறிச் சாமான்களை யெல் லாம் அருகே வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டோம். சில்லறை வியாபாரிகள், வெற்றிலை பாக்கு, ஆரஞ்சுப்பழம்,

வாழைப்பழம், சோடா கலர், இட்டலி காப்பி,வடை முறுக்கு என்று அவரவர் சரக்குகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டுஅங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தனர். வண்டிப் பாதுகாப்பாளரும் தமது பச்சை விளக்கைக் காட்டிக் கையிலிருந்த ஊது குழலை ஊதினர். மணி பத்தடித்தது. வேலைக்காரன் மணியடித்தான். வண்டியும் புறப்பட்டது.

வண்டி, பாலக்கரை,கோட்டை நிலையங்களைத் தாண்டியது. சிறிய நிலையங்களில் நிற்கவில்லை. இரவானபடியால் குளிர்ந்த காற்று வீசியது. நிலவு நல்ல பால்போல் எரித்துக் கொண்டிருந்தது. வழிநெடுக நெல் வயல்களும், தென்னந் தோப்புக்களும் காணப்பட்டன. காவிரியின் நீர், நிலவொளியில் கடல்போல் தோன்றியது. இத்தகைய காட்சிகள் சிறிது தூரம் வரையில் தோன்றின. காவிரியும் மறைந்தது. கருவூர் நிலையத்தில் சிறிது நேரம் வண்டி நின்றபின் புறப்பட்டது.

பிறகு ஈரோடு சந்திப்பை யடைந்தோம். நாங்கள் எங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு வண்டியைவிட்டு இறங்கினேம். சிறிது நேரத்தில் வேறு புகைவண்டித் தொடர் வந்தது. அதைப் 'புளூ மவுண்டன் எக்ஸ்பிரஸ்' என்றார்கள். நீலகிரிக்குப் போகின்றவர்கள் அதில் எறிக் கொண்டனர். நாங்களும் அவ் வண்டியில் ஏறினேம்.

காலை ஆறு மணிக்கெல்லாம் போத்தனூர் சந்திப்பை அடைந்தோம். நாங்கள் சிறிது சிற்றுண்டி அருந்தினேம். வண்டியும் புறப்பட்டது. எதிரில் நீலகிரி மலையும் அதன் தொடர்ச்சியும் வானளாவிய பேரரண்போலத் தோன்றின. வண்டி மேட்டுப்பாளையம் வந்தது. யாவரும் இறங்கினர். நாங்களும் இறங்கினேம். மலைமீது செல்லும் ஒரு சிறிய வண்டித் தொடர் வந்து நின்றது. நாங்கள் அவ் வண்டியில் ஏறிக் கொண்டோம். வண்டியும் செல்லத் தொடங்கியது. வழியில் பல காட்சிகளைக் கண்டோம். இரு

புறங்களிலும் ஓங்கிய மலைகள் தொடர்ந்திருப்பது மிக அழகாகத் தோன்றியது. இருபுறங்களிலும் வானளாவிய நீண்ட மரங்களும், ஓடிக் கொண்டிருக்கும் அருவிகளும், பன்னிறப் பூக்களும், பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் பரவசமாக்கின. இவ்வியற்கை வனப்புக்களை யெல்லாம் கண்டு களித்துக்கொண்டே நாங்கள் உதகமண்டலம் போய்ச் சேர்ந்தோம். அங்கு வந்திருந்த எனது மாமன் எங்களை அழைத்துக் கொண்டு வீடு சேர்ந்தார். நாங்கள் சில நாள் தங்கியிருந்து கவர்னர் தங்கும் மாளிகை, அழகிய பூங்கா, ஆதிக்குடிகளாகிய தோடுவர், குதிரைப் பந்தயம், பல வகைப்பட்ட மாளிகைகள் ஆகியவற்றை யெல்லாம் பார்த்து விட்டு எங்களது ஊர் வந்து சேர்ந்தோம்.

வினுக்கள்

1. நண்பர்கள் புகைவண்டி நிலையத்தை யடைந்ததிலிருந்து வண்டி புறப்பட்ட வரையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எழுதுக.
2. திருச்சியிலிருந்து ஈரோடு வரையுள்ள காட்சிகளை வரைக.
3. மேட்டுப் பாளையத்திலிருந்து நீலகிரி வரை செய்த பிரயாணத்தை விளக்கி வரைக.
4. நீலகிரியின் காட்சிகளை வரைக.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களின் காலத்தையும், காலங்காட்டிய இடைநிலையையும் எழுதுக:

1. நான் படிப்பேன்.
2. தம்பி விளையாடுகின்றான்.
3. அவன் உறங்கினான்.

கீழ்க்கண்ட வாக்கியங்களை ஒரே வாக்கியமாகச் சேர்க்க:

1. உண்மை பேசு. உயர்வு கிடைக்கும்.
2. நான் பள்ளிக்கூடம் சென்றேன்; பாடம் படித்தேன்.

22. சரியான தீர்ப்பு

பதி	உவப்ப	நேரிபட்டு	சாதித்தான்
களிறு	மன்னன்	பிரதிவாதி	மதி நுட்பம்
விகடம்	உபாயம்	பிடிவாதம்	தொடுத்தான்
மூர்க்கம்	ஊர்வலம்	இன்னியம்	முரட்டுக்குணம்

சீருஞ் சிறப்பும் பொருந்திய சீர்காழிப் பதியிலே செல்வத்திற் சிறந்த சீமான் ஒருவன் இருந்தான். அவன் தனது ஒரே மைந்தனுக்குத் திருமணம் குறித்து, இரண்டாம் நாள் நடக்கும் ஊர்வலத்திற்காக ஒரு யானையை இரவலாக வாங்கிக்கொண்டு வந்திருந்தான்.

திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது; ஊர் விருந்தும் வந்தவர்கள் உவப்ப நடந்தேறியது; இரண்டாம் நாள் ஊர்வலக் காட்சி பல்வகை இன்னியங்கள் முழங்கவும், கண்ட கண்கள் களிகூரும்படி பலதிறப்பட்ட வாண வேடிக்கைகளுடனும் விமரிசையாக முடிவுற்றது. ஊர்வலத்துடன் ஊரை வலம் வந்த யானையானது வீடு வந்ததும், யாது காரணத்தாலோ திடீரெனக் கீழே விழுந்து இறந்து போயிற்று.

அதைக் கண்ட செல்வன் மிகுதியும் வருந்திப் பின் ஒருவாறு தேறுதலடைந்து, யானைக்கு உரியவனிடத்திற்குச் சென்று, "எதிர் பாராத நிலையில் உனது யானை திடீரென்று கீழே விழுந்து இறந்துபோயிற்று; நீ வருந்தாதே. யான் அதற்குரிய விலையைக் கொடுத்து விடுகிறேன்; அல்லது பதிலாக வேறு ஒரு யானை வாங்கிக் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

யானைக்குச் சொந்தக்காரனோ மூர்க்க குணமுள்ளவன்; செல்வன் கூறியதில் ஒரு வழியிலும் உடன்பட்டானல்லன்; "எனக்கு என்னுடைய களிறே வேண்டும்," என்று பிடி

வாதஞ் செய்தான்; மன்னனிடத்திற்குச் சென்று வழக்குத் தொடுத்தான். அரசன் பிரதிவாதியை அழைத்து வினவி, நடந்தவைகளை நன்கு உணர்ந்து கொண்டான்; யானைக்கு உரியவனை அழைத்து, யானைக்குரிய தொகையையாவது, வேறு யானையையாவது பெற்றுக்கொள்ளும்படி பலவகையிலும் எடுத்துச் சொன்னான். அப் பிடிவாதக்காரன், "எனது யானையே வேண்டும்; வேறொன்றும் வேண்டேன்" என்று சாதித்தான். செல்வன் மனங் கலங்கினான்.

அரசன் நன்றாக ஆழ்ந்து சிந்தித்து, "நீங்கள் இருவரும் இரண்டு நாள் கழித்து வாருங்கள்" என்று அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான்.

மன்னவனது அவையில் மதிநுட்பமுள்ள விகடகவி ஒருவன் இருந்தான். அவன் மரியாதை ராமன் என்று அழைக்கப்படுவான். அன்று அவன் அரசனிடம் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, அவ்வதிசய வழக்கைப் பற்றித் தெரிந்துகொண்டான். அதனால் தனது அரசனுக்குள்ள கவலையைப் போக்கவும், யானைக்காரனுக்கு அறிவு புகட்டவும் எண்ணி ஓர் உபாயஞ் செய்யலானான்.

அன்றிரவு மரியாதை ராமன், பிரதிவாதியாகிய செல்வனை இரகசியமாகத் தன் வீட்டுக்கு அழைத்தான். 'நீ நாளைய தினம் உன் வீட்டு நடையில் கதவை மூடிப் பழைய பானைகளையெல்லாம் கொண்டுவந்து அடுக்கி வைத்திரு. யானைக்காரன் நாளைய தினம் உன்னண்டை வருவான்; அவன் அவசரமாக வந்து உன் வீட்டுக் கதவைத் திறப்பான். கதவு திறக்கப்பட்டதும் பானைகளெல்லாம் நொறுங்கி உடைந்து போம். அதன் பொருட்டு அவன் என்ன சமாதானம் சொன்னாலும் நீ ஒன்றுக்கும் உடன்படாதே. "என் பானைகளே எனக்கு வேண்டும்" என்று பிடிவாதஞ் செய்' என்று சொல்லி அனுப்பினான்.

மறு நாள் ராமன் கூறியவாறே நடந்தது; யானைக் காரனால் செல்வனது வீட்டு மட்பாண்டங்கள் எல்லாம் உடைந்து போயின. செல்வன், அரசனிடம் சென்று, "நெடுங்காலமாக என் முன்னோர் ஆண்டு வந்த என் பானை களையெல்லாம் யானைக்காரன் வந்து உடைத்து விட்டான்; எனது பானைகளையே எனக்குக் கொடுக்கும்படி செய்ய வேண்டும்" என்று முறையிட்டுக் கொண்டான்.

அரசன் மரியாதை ராமன் செய்த சூழ்ச்சியைத் தெரிந்து கொண்டு, யானைக்காரனைக் கூப்பிட்டு, "நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அந்த மூர்க்கனான யானைக்காரன் முன்கோபத்துடனே, "யானைக் கும் பானைக்கும் சரியாய்ப் போயிற்று. என்னை விட்டு விட்டால் போதும்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வினாக்கள்

1. யானைக்காரன் பிடிவாதமாகச் சொன்னதென்ன?
2. மரியாதை ராமன் செல்வனுக்குச் சொல்லிக்கொடுத்த தந்திரம் என்ன?

பயிற்சி

1. இப்பாட்டத்திற்கு வேறு பொருத்தமான இரண்டு தலைப்புக் கூறுக.
2. சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க:
   இரகசியமாக, உரியவனை, சிந்தித்து.
3. பொருள் கூறுக:
   பதி, களிறு, உவப்ப, இன்னியம்.
4. எழுத்துப் பிழைகளைத் திருத்துக:
   (1) மலை பெய்தது.
   (2) கற்றுக்கொல்ல வேண்டும்.
   (3) அளுகின பண்டங்களைத் தூர எரிந்துவிட வேண்டும்.

23. சிறு சேமிப்புத் திட்டம்

சீராக	பத்திரம்	கணக்கற்ற	நீர்ப்பாசனம்
கருவி	ஏற்பாடு	சிக்கனமாக	முன்னேற்றம்
சிறப்பு	தொல்லை	அணைக்கட்டு	திண்டாட்டம்
விவரம்	உற்பத்தி	நாளடைவில்	நிறைவேற்றம்
தாழ்ந்த	செட்டாக	ஊதாரித்தனம்	உணவுப் பங்கீடு

செல்வத்தை நல்லவழிகளில் தேடவேண்டும். தேடிய செல்வத்தைச் செட்டாகச் செலவழித்துச் சீராக வாழ வேண்டும். சிக்கனமாக வாழத் தெரியாதவன் பிற்காலத்தில் மிகவும் வருத்தமடைவான். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்பவன் கடன்பட்டுக் கணக்கற்ற தொல்லைகளை அடைவான். ஓடியாடித் தேடுதற்கு உடம்பில் வலிமை யிருக்கும் பொழுதே, சிறிது சிறிதாகப் பொருளைச் சேர்த்து வைத்திருந்தால் வயது முதிர்ந்த காலத்தில் அப்பொருள் அவனுக்கு உதவியாயிருக்கும். அப்படிச் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் ஊதாரித்தனமாகச் செலவு செய்பவன், பிற்காலத்தில் பிறர் கையை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையை அடைகின்றான். அப்படிப்பட்ட தாழ்ந்த நிலையை அடைய யாரும் விரும்ப மாட்டார்கள். ஆகவே, சிக்கன வாழ்க்கையே சிறப்பைத் தரும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். அதை உணர்ந்து பொருளைச் சேமிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அதற்கான வழிகளில் சிறுவர் முதல் பெரியோர் வரை யாவருக்கும் பயன்படக் கூடியது தேசீய சேமிப்புத் திட்டம் என்ற சிறு சேமிப்புத் திட்டமாகும். ஆகவே, இதைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டுவது அவசியமல்லவா?

இத்திட்டம் தனிப்பட்டவர்களின் நன்மைக்காக மட்டுமன்றி நாட்டின் பொது நன்மைக்கும் சிறந்த கருவியாயுள்ளது. தேச முழுவதற்கும் பயன்பட வேண்டும் என்னும்

நோக்கத்தால் இதை நம் இந்திய அரசாங்கம் மேற்கொண்டு நடத்தி வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வசூலாகும் பணத்தைக் கொண்டு இந்திய அரசாங்கத்தார் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல தொழில் திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்துள்ளனர். மேலும், உணவு உற்பத்தி பெருக, துங்கபத்திரை அணைக்கட்டு, கிருஷ்ணு, பெண்ணாறு நீர்ப்பாசனத் திட்டம் முதலிய பல வகையான திட்டங்களை நிறைவேற்றச் சட்டம் வகுத்திருக்கின்றனர். இவ்வேற்பாடுகளால் நம் நாட்டில் தொழில்கள் பெருகும்; உணவு உற்பத்தி மிகும்; மக்கள் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்; எல்லோருக்கும் உணவு எளிதாகக் கிடைக்கும்; உணவைப் பற்றிய முட்டுப்பாடு நீங்கும். அயல் நாடுகளிலிருந்து தானிய இறக்குமதி செய்ய வேண்டியதில்லை. உணவுக்குப் பிறநாட்டாரை எதிர் பார்க்கும் நிலை நீங்கும். ஆகையால், மாணவர்களே! இச் சிறு சேமிப்புத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதை எண்ணிப் பாருங்கள்.

இனி இத்திட்டத்தின் விவரங்களைக் கூறுவோம். ஐந்தாண்டு, ஏழாண்டு, பன்னிரண்டாண்டு என மூன்று விதமான பத்திரங்கள் விற்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுப் பத்திரங்களின் மேல் நூற்றுக்கு மூன்று விகித வட்டி கொடுக்கப்படும். ஏழாண்டுப் பத்திரங்களின் மேல் நூற்றுக்கு மூன்றரை விகிதமும் பன்னிரண்டாண்டுப் பத்திரங்களின் மேல் நூற்றுக்கு $4\frac{1}{6}$ விகிதமும் வட்டி கொடுக்கப்படும். ஐந்து ஆண்டு ஏழாண்டுப் பத்திரங்களை எப்பொழுது வேண்டுமானாலும் பணமாக மாற்றிக் கொள்ளலாம். பன்னிரண்டு ஆண்டுப் பத்திரங்களில் ஐந்து ரூபாய் மதிப்புள்ள பத்திரங்களை வாங்கிய தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குப் பிறகும், ரூபாய் பத்தும் அதற்கு மேற்பட்டும் மதிப்புள்ளவைகளை வாங்கிய தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குப் பிறகும் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

இந்தப் பத்திரங்கள் ரூ. 5, 10, 50, 100, 1000, 5000 மதிப்பில் விற்கப்படுகின்றன. இப் பத்திரங்களை எல்லாத் தபால் நிலையங்களிலும் வாங்கலாம். அப்படி வாங்கிய பத்திரங்களை எந்தத் தபால் நிலையத்திலும் பணமாக மாற்றலாம். இதோ இப்படத்திலுள்ளது ஒரு ஐந்தாண்டுப் பத்திரம். இது ஏறக்குறைய ஐந்து ரூபாய் நோட்டுப்போல இருக்கிறதல்லவா?


POST OFFICE NATIONAL SAVINGS CERTIFICATE

NOT TRANSFERABLE

EXCEPT WITH THE PERMISSION OF THE HEAD POST MASTER

5 FIVE RUPEES NS/ Y/1 513074 FIVE RUPEES 5

This is to certify that M. S. Sivaprakasam IS REGISTERED AT THE Mount Road POST OFFICE AS THE HOLDER OF A POST OFFICE 12 YEAR NATIONAL SAVINGS CERTIFICATE, ISSUED IN ACCORDANCE WITH THE TERMS OF THE NOTIFICATION NUMBER PRINTED ON REVERSE AND SUBJECT TO THE APPLICATION AND DECLARATION OF THE PURCHASER WHICH SHALL BE THE BASIS OF THIS CONTRACT. THE GOVERNMENT OF INDIA UNDERTAKE TO PAY HIM, ON PRESENTATION OF THIS CERTIFICATE AT THE AFORESAID POST OFFICE ON OR AFTER THE 5. 11. 59. RS. 7/8/- OR AT ANY EARLIER DATE AFTER THE EXPIRY OF EIGHTEEN MONTHS THE SUM NOT EXCEEDING RS. 7/8/- SPECIFIED ON THE REVERSE OF THIS CERTIFICATE AS DUE ON SUCH DATE.

Post office ... Mount Road ...
Date of Issue ... 5-11-47 ...
Register No. ... 75 ...

POST OFFICE DATE STAMP S. B. 5 NOV 47

SEE REVERSE

Post master

ஐந்து ரூபாய்க்கு மேற்கொண்டு சேமிக்கக் கூடியவர்களுக்குத்தான் இத்திட்டத்தால் பயனுண்டு என்று நினைக்க வேண்டாம். நாலணா, எட்டணாவாகச் சேமிப்பவர்களும் இதில் சேரலாம். நாலணா, எட்டணா, ஒரு ரூபாய் மதிப்புக்களில் சேமிப்புத் தபால் பில்லைகள் விற்கப்படுகின்றன. அப்பில்லைகளை ஒட்டிவைத்துக் கொள்வதற்கென்று அட்டைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன.

நாலணாவோ, எட்டணாவோ, ஒரு ரூபாயோ கிடைக்கும்பொழுது தபால் நிலையம் சென்று சேமிப்புப் பில்லைகள் வாங்கி அட்டையிலுள்ள கட்டங்களில் ஒட்டிவர வேண்டும். அப்படி ஒட்டப்பட்ட தபால் பில்லைகளின் மதிப்பு ரூபாய் ஐந்து ஆனவுடன் அந்த அட்டையைக் கொடுத்து ஒரு

ஐந்து ரூபாய் பத்திரத்தை வாங்கிக் கொள்ளலாம். இப்படிச் சேர்த்துக் கொண்டே வந்தால் பலதுளி பெருவெள்ளம் போல் நாளடைவில் பெரிய தொகையாக வளரும்.

நமது பணம் அரசாங்கத்தினிடம் இருப்பதால் மிகவும் பத்திரமாக இருக்கும். ஒவ்வொரு சேமிப்புப் பத்திரத்திற்கும் நல்ல வட்டி கிடைக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் நம் பணத்தை நாம் திரும்பப் பெறலாம். ஆகையால், மாணவர்களே! இச் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பணத்தைச் சேமிக்கும் பழக்கத்தை உடனே கைக் கொள்வீர்களாக.

வினாக்கள்

1. சிக்கனத்தால் ஏற்படும் நன்மை என்ன?

2. சிறு சேமிப்புத் திட்டத்தினால் யார் யாருக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

3. இத்திட்டத்தின் விவரங்களை விளக்கிக் கூறுக.

4. மிகச்சிறிய தொகை சேமிப்பவர்களும் இதில் சேர்ந்து கொள்வது எப்படி?

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களை எடுத்து எழுதி, அவை இன்னவகையைச் சேர்ந்தவை எனக் கூறுக:

   (1) தேடிய செல்வத்தைச் செட்டாகச் செலவழித்துச் சீராக வாழவேண்டும்.

   (2) படித்த சிறுவன் புத்தகத்தைக் கொடுத்துச் சென்றான்.

2. பின்வரும் சிறு வாக்கியங்களைச் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக:

   (1) சிக்கனமாக வாழ்வாய். சிறப்பு உண்டாகும்.

   (2) செல்வத்தை நல்ல வழியில் தேடவேண்டும். செட்டாகச் செலவழிக்க வேண்டும். சீராக வாழவேண்டும்.

24. நமது கம்பன்

பரிதி	இனிது	கவிதை	கனிதமிழ்
முரசம்	வெற்றி	பல்கலை	போற்றும்
அமுது	முகந்து	கற்பகம்	விழாவணி

கொட்டுங்கள் முரசம் வெற்றிக்
  கொடிகளைப் புகழின் வானம்
எட்டிட உயர்த்தி டுங்கள்!
  இணையிலா நமது கம்பன்,
கட்டினன் கவிதைக் கோயில்
  கனிதமிழ் அணங்கு வாழ
விட்டது சிறுமை யென்று
  விழாவணி முழக்கு வோமால். 1

எல்லையில் அழகை யெல்லாம்
  இனிதுற முகந்து நல்ல
சொல்லமு துடனே ஆழ்ந்த
  சுவைதரு பொருளுங் கூட்டிக்
கல்வியிற் பெரிய கம்பன்
  கற்பகக் கவிதை தந்து
பல்கலை யுலகு போற்றும்
  பரிதியாய் விளங்கி னனே. 2

—யோகி சுத்தானந்த பாரதியார்.

வினாக்கள்

1. கம்பன் விழா எவ்வாறு செய்ய வேண்டும்?
2. கம்பனை இக்கவி எவ்வாறு போற்றுகிறார்?
3. கம்பன் உலகின் பரிதியாய் எவ்வண்ணம் பொலிகின்றான்?

சொற்பொருள் :— *பரிதி-சூரியன், தமிழணங்கு-தமிழ்த்தாய்.*

---

25. சித்திர விளக்கம்

படம் பார்த்துக் கதை எழுதல்:—

ரோமாபுரியில் ஒரு செல்வன் — அவனிடத்தில் பல அடிமைகள் — கொடுமையாக நடத்தப்படல் — ஒருவன் கொடுமையைத் தாங்காமல் காட்டுக்கு ஓடுதல் — காய்கனிகளை உண்ணல் — சுனைநீர் குடித்தல் — அலைந்து திரிதல் — குகையைக் கண்டு மறைந்து ஒளிதல் — சிங்கத்தின் கர்ச்சனை கேட்டல்—உயிர்தப்பி ஓடக் கருதி வெளிவரல்—வாயி

லில் சிங்கத்தைக் காணல் — அஞ்சிக் குகைக்குட் சென்று பதுங்குதல் — நடுங்கியவாறே பார்த்தல் — சிங்கம் காலைத் தூக்கிக் கொண்டு வாதனைப்படல் — அடிமை அதைக் காணல் — தைரியமாகச் சிங்கத்தை அணுகல் — சிங்கம் காலைத்தூக்கிக் காட்டல்—அவன் காலை உற்று நோக்கல்—முள் தைத்திருத்தல் — வலி தெரியாமல் மெதுவாக முள்ளை எடுத்தல்—சிங்கம் மகிழ்தல் — அவன் கைகளை நக்கல் —

அவனிடம் அன்பாகவும் பணிவாகவும் இருத்தல்—அடிமை சிங்கத்தோடு வசித்தல்.

ஒரு நாள் அடிமை வெளியே வரல்—பிடிபடல்—அவன் தலைவனிடம் கொண்டுபோகப்படல்—சிறை செய்யப்படுதல்—தப்பியோட முயன்ற குற்றத்திற்காகச் சிங்கத்திற்கு அவனை இரையாக்கக் கருதுதல்—காட்டிலிருந்து சிங்கத்தைப் பிடித்து வருதல்—சில நாள் அதனைப் பட்டினி



போடுதல்—போட்டி விளையாட்டு நடைபெறல்—அப்பொழுது சிங்கத்தைக் கொண்டு வருதல் — அதனிடம் அடிமையை விடுதல் — யாவரும் கண்டு அஞ்சுதல் — சிங்கம் அடிமையைப் பார்த்ததும் தனக்கு உதவி செய்தவன் என அறிதல்—சிங்கம் நன்றி யறிவால் அவனைக் கொல்லாது அவனருகில் செல்லல் — அவன் காலடியில் படுத்தல் — யாவரும் கண்டு வியத்தல் — மகிழ்தல் — தலைவன் சிங்கத்தை விட்டுவிடல் — அடிமையும் விடுதலை பெற்றுச் செல்லல்.

26. செங்குட்டுவன் வீரம்

கற்பு	நீத்தான்	செருக்கு	காணிக்கை
படை	வேடுவர்	சூடினன்	கடுஞ்சினம்
சிற்பி	நிகழ்ச்சி	வாணிபம்	கொணர்ந்து
ஈட்ட	பத்தினி	புகன்றனர்	வழிபட்டான்
மாசு	சிலம்பு	அரண்மனை	வேங்கை மரம்

சேரநாட்டை யாண்ட செங்குட்டுவன் என்பான் ஒரு சமயம் மலைவளம் காண விரும்பித் தன் மனைவியாகிய இளங்கோ வேண்மாளுடன் பேரியாற்றங் கரையில் தங்கியிருந்தான். அப்பொழுது வேடுவர் சிலர் காணிக்கைப் பொருள்களுடன் அவனைக் கண்டு வணங்கி, "அரசே, நாங்கள் ஒரு அதிசயம் கண்டோம். துயரமே வடிவான ஒரு பெண் ஒரு வேங்கை மரத்தடியில் வந்து நின்றாள். அப்பொழுது தேவ விமானம் ஒன்றில் தேவருடன் வந்த அவள் கணவன், அவளைத் தன்னுடன் விமானத்திலேற்றி அழைத்துச் சென்றான். இதனைக் கண்ணாரக் கண்டோம்" எனப் புகன்றனர்.

அப்பொழுது அருகில் இருந்த சாத்தனார் என்னும் புலவர், "அரசே! வேடுவர் சொல்லிய நிகழ்ச்சியின் உண்மையை நான் அறிவேன். காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த கோவலன் என்பான், தன் மனைவியாகிய கற்பிற் சிறந்த கண்ணகியுடன் மதுரைக்கு வந்து வாணிபம் செய்து பொருளீட்ட விரும்பித் தன் மனைவியின் காற்சிலம்புகளில் ஒன்றை விற்கச் சென்றான். அச்சிலம்பைக் கண்ட வஞ்சகப் பொற்கொல்லன் அது அரண்மனைச் சிலம்பு என்றும், அதைக் கோவலனே திருடினன் என்றும் குற்றம் சாட்டினன். விதியின் வலிமையால் பாண்டியனும் ஆராயாது அவனுக்குக் கொலைத் தண்டனை விதித்து விட்டான். கணவனை அநியாயமாய் இழந்த கண்ணகி கடுஞ்சினங் கொண்டு,

தன் கணவன் குற்றமற்றவன் என்பதைப் பாண்டியனுக்கு விளக்கிக் காட்டினாள். உடனே பாண்டியன் தன் செங் கோல் மாசுற்றது எனக் கருதி உயிரை விட்டான். அவன் மனைவியும் அக்கணமே உயிர் நீத்தாள். கண்ணகி பின் னும் கோபம் தணியாதவளாய் மதுரையை எரித்துவிட்டு, வையைக் கரை வழியே இந்நாடு நோக்கி வந்தாள். இப் பொழுது வேடர் கண்ட பெண் அப்பத்தினித் தெய்வ மாகவே இருக்கவேண்டும்'' எனக் கூறினர்.

உடனே செங்குட்டுவன் தன் மனைவியை நோக்கி, 'பாண்டியன் மனைவி, கண்ணகி ஆகிய இருவரிலும் சிறந்த வர் யார்?' எனக்கேட்டான். இளங்கோ வேண்மாள் கற்பிற் சிறந்த அவ்விருவருள்ளும் ஏற்றத் தாழ்வு கருதாத இயல் பினள். ஆதலால், கணவன் வினவிற்கு நேரான விடை கூறாது, 'கணவனுடன் உயிர்விட்ட மாதேவி அவனு டன் வானுலகத்தே மகிழ்ந்து வாழ்வாளாக. நம் நாடு நோக்கி வந்த பத்தினிக்கு நாம் கோயில் கட்டி வழிபடு வோம்' எனக் கூறினாள். உடனே செங்குட்டுவனும் அது மிகவும் நன்றெனக் கருதி, நன்னாள் ஒன்றில் நால்வகைப் படையுடன் இமயத்தில் கல்லெடுத்துக் கண்ணகியின் உருவம் செய்வதற்காக வடநாடு நோக்கிப் புறப்பட்டான். வழியில் பல சிற்றரசர்கள் அவனைக் கண்டு வணங்கிச் சென்றனர்.

செங்குட்டுவன் முன்னொரு முறை தன் தாயாகிய நற்சோணையின் உருவம் செய்வதற்காக இமயம் சென்றி ருந்தான்; அப்பொழுது அங்கு தன்னுடன் போர் செய்ய வந்த வட நாட்டரசர் பலரை வென்று மீண்டான். அவன் மீண்ட பின்னர், அங்கிருந்த கனகவிசயர் என்ற அரசர்கள், 'நாம் இல்லாத காலத்தில் செங்குட்டுவன் வந்து வீரம் காட்டிச் சென்று விட்டான்' என்று இகழ்ந்து பேசினர். இதைக் கேள்வியுற்ற செங்குட்டுவன் அவர்கள் செருக்கை

யடக்கவும் கருதியிருந்தான். அவன் நினைப்பின்படியே இப்பொழுது சமயம் வாய்த்தது. செங்குட்டுவன் வருகையைக் கேள்வியுற்ற வட நாட்டரசர் பலர் ஒருங்கு கூடி அவனை எதிர்த்தனர். கடும் போர் நடந்தது. செங்குட்டுவன் புலிக் கூட்டத்தில் சிங்கம் பாய்வது போல் பாய்ந்து, பகைவரைக் கொன்று குவித்தான். பலர் மாண்டனர்; முடிவில் வட நாட்டரசர் படை, தமிழ் வீரர் முன் நிற்கவாற்றாது ஓடலாயிற்று. செங்குட்டுவன் வெற்றிமாலை சூடினன்; தமிழ் அரசரை இகழ்ந்த கனகவிசயர் சிறைப்பட்டனர்.

பிறகு சிற்பிகள் இமயத்திலிருந்து கல்லை எடுத்துக் கனகவிசயர் தலையில் வைத்துக் கொணர்ந்து கங்கையில் நீராட்டினர்; பின்னர் வஞ்சி நோக்கிப் புறப்பட்டனர். இவ்வாறு செங்குட்டுவன் வடநாட்டரசர் பலரையும் வென்று மீண்டு, பத்தினிக்கென்று கொணர்ந்த கல்லில் உருவம் செதுக்கிக் கோவிலில் அமைத்து வழிபட்டான்.

வினாக்கள்

1. செங்குட்டுவன்பால் வேடுவர் கூறியதென்ன ?
2. செங்குட்டுவன் தன் வினாவிற்கு அவன் மனைவி கூறிய விடை என்ன ?
3. செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரையைப் பற்றி வரைக.

பயிற்சி

1. எதிர்ப்பதம் கூறுக: நியாயம், ஏற்றம், ஆதி, இகழ்.
2. பின்வரும் எச்சங்களுக்குப் பொருத்தமான சொற்களைச் சேர்த்தெழுதுக:

படித்த	பறவை
நடந்து	பையன்
பறந்த	வந்தான்

27. சாந்தி நிகேதனம்

இறை	கவிதை	நேசித்தல்	ஆடம்பரம்
அரிய	சமவெளி	இரைச்சல்	தன்னடக்கம்
சாந்தி	நற்குணம்	இயைந்து	குடியிருத்தல்
தோழர்	நிகேதனம்	பெருமகன்	அத்தகையோர்

உலகத்தில் வாழும் மக்களிற் சிலரே கல்வி யறிவிலும், நற்குணங்களிலும் சிறந்து விளங்குபவர். அவர்களே புகழ் பெருக வாழ்வோர். அத்தகையோரில் காலம் சென்ற கவி ரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். அவர் சிறந்த கவிகள் இயற்றியுள்ளார். அவரது கவிதைகள் எல்லோராலும் கொண்டாடப்படுகின்றன. அவற்றின் சிறப்பை மதித்தே அவருக்கு உலகப்புகழ் பெற்ற 'நோபல் பரிசு' வழங்கப் பட்டுள்ளது.

அப் பெரியார் சிறுவர்களை மிகுதியும் நேசித்தார். அவர்களின் பொருட்டு அவர் மிகுந்த செலவு செய்து ஒரு கல்விச்சாலையைக் கட்டியிருக்கிறார். அதற்குச் சாந்தி நிகே தனம் என்று பெயர். சாந்தி நிகேதனம் என்றால் அமைதி யின் இருப்பிடம் என்பதாம். அக்கல்விச்சாலை கல்கத் தாவுக்கு அப்பால் நூறு மைல் தொலைவிலுள்ள போல்பூர் என்ற கிராமத்தில் இருக்கிறது. அங்கு நகரத்தின் இரைச் சலும், ஆடம்பரங்களும் காணப்படா. பரந்த சம வெளி களுக்கு இடையில் உள்ள மரங்களின் அடியிலே அவ்விருப் பிடம் அமைந்திருக்கின்றது.

அக்கலாசாலைக்கு ஆடம்பரமான கட்டிடங்கள் இல்லை. மரங்களினடியிலும், திறந்த வெளிகளிலும் பிள்ளைகள் படிப்பார்கள்; அங்கு,பல சாதிப் பிள்ளைகளும் இருப்பார் கள். சுமார் நூற்றைம்பது மாணவர்களுக்கே அங்கு இட முண்டு. அவர்களுக்குப் பாடசாலையும், இருப்பிடமும் ஒன்றே. ஆசிரியர்களும் அங்கே குடியிருக்கின்றனர்.

சாந்தி நிகேதனத்தின் நோக்கம், பிள்ளைகள் இயற்கைப் பொருள்களோடு இயைந்து வளரவேண்டும் என்பதே. அவர்கள் தம் விருப்பப் படி எங்கும் செல்வர். உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குத் தோழர்கள் போல் இருந்து, அவர்கள் இயற்கையின் புதுமைகளைத் தெரிந்து கொள்ள உதவுவர். இவ்வாறு செய்வதால் பிள்ளைகளுக்குப்பொறுப்பு, தன்னடக்கம் முதலிய நற்குணங்கள் உண்டாகின்றன.

அங்குச் சிறுவர்கள் நாள்தோறும் காலையில் எழுந்து, குளித்துவிட்டு, இறை வணக்கம் செலுத்துவார்கள். பிறகு அவர்கள் சிற்றுண்டி யருந்திவிட்டு, ஏழு மணிக்குப் படிக்கத் தொடங்குவார்கள். உபாத்தியாயர்களும் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு உதவி செய்வார்கள். பிறகு மாலையில் 2 மணி முதல் 5 மணி வரையில் மீண்டும் கல்வி கற்பார்கள்.

அதன்பின் அவர்கள் விளையாடுவர்; ஆங்காங்குச் சென்று இயற்கைப் பொருள்களைத் திரட்டிக் கொணர்ந்து காட்சி சாலையில் நிரப்புவர். இராச்சாப்பாட்டுக்கு முன் ஒரு மணி நேரம் கதை சொல்லுவதிலும், பாட்டுப் பாடுதலிலும், நாடகம் நடித்தலிலும் கழியும். ஒன்பது மணிக்கு மேல் யாவரும் உறங்கச் செல்வார்கள். இவ்வாறு ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு குடும்பத்தாரைப் போலவே அங்குக் காலங் கழிக்கின்றனர். புலவர் பெருமகனாரும் ஊரில் இருந்த பொழுதெல்லாம் அவர்களுக்குப் போதிப்பார்; தாம்

எழுதிய கவிகளையும், கதைகளையும், நாடகங்களையும் பிள்ளைகளுக்குப் படித்துக்காட்டுவார்; சில சமயங்களில் பாடுவதுமுண்டு; சில சமயத்தில் நாடகமாக நடிப்பதும் உண்டு.

சாந்தி நிகேதனம் உலகத்திலே ஒரு அரிய இடமாக விளங்குகின்றது. பழங் காலத்தில் எவ்வாறு அறிவு புகட்டப் பட்டதோ அவ்வாறே அங்கே கல்விமுறை நடைபெற்று வருகின்றது. இவ்வாறு பல கலாசாலைகள் நமது நாடெங்கும் நடைபெறின் சிறுவர்களுக்கு இயற்கை யறிவு பெருகும்.

வினாக்கள்

1. சாந்தி நிகேதனத்தைத் தோற்றுவித்தவர் யார்? அவர் சிறப்பு யாது?
2. சாந்தி நிகேதனம் எவ்வாறு அமைந்துள்ளது? அது எவ்வாறு இயங்குகிறது?
3. அங்கு மாணவர் எவ்வாறு கல்வி கற்கின்றனர்?
4. மாணவர் நாள்தோறும் புரியும் வேலைகள் என்ன?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க:
   (1) அப்பெரியார் சிறுவர்களை —— நேசிப்பார்.
   (2) மரங்களின் அடியில் —— படிப்பார்கள்.
2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ளவற்றை இன்ன சொற்கள் எனக் கூறுக:
   (1) அவர் வங்காளத்தில் பிறந்தார்.
   (2) உலகம் புகழும் பெரியார் இவர்.
   (3) மாணவன் படித்து முடிந்த பிறகு விளையாடச் செல்வான்.
3. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் அமைக்க:
   ஆடம்பரங்கள், நகரம், மாணவர்கள், தன்னடக்கம், பரிசு.

28. நாட் குறிப்புப் புத்தகம்

வினு	சந்ததி	பேருதவி	ஆனந்தம்
தேதி	ஆதாரம்	திருவிழா	வழிகாட்டி
துணை	சம்பவம்	முற்றிலும்	நாட்குறிப்பு
கடமை	மிகுதியும்	சரித்திரம்	இளம் பருவம்
மன்றம்	ஒழுகுதல்	தலைமுறை	குறிப்புப் புத்தகம்

பிள்ளைகளே, நீங்கள் நான்காம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புக்கு எந்த மாதத்தில், எந்தத் தேதியில் மாறினீர்கள்? நீங்கள் எப்பொழுதாவது வேறு ஊர்களுக்குச் சென்றிருக்கின்றீர்களா? சென்றிருந்தால் எந்த மாதத்தில், எந்தத் தேதியில் சென்றீர்கள்? சென்ற ஆண்டில் நீங்கள் இன்பமாகக் கொண்டாடிய திருவிழா எது? அது எந்தத் தேதியில் வந்தது? இவை போன்ற வினுக்களுக்கு நீங்கள் நினைத்துப் பார்த்து விடை சொல்ல இயலுமா? இரண்டொரு வினுக்களுக்கு இப்பொழுது விடையளிப்பீர்கள். சில மாதங்கள் சென்ருல் முற்றிலும் மறந்து விடுவீர்கள். ஆதலால், ஒரு குறிப்புப் புத்தகத்தில், அவ்வப்போது நிகழும் அரிய சம்பவங்களைக் குறித்து வைப்பீர்களானுல், நீங்கள் பெரியவர்களாகும் பொழுது, பழைய சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதற்கு அது துணை செய்யும். அது உங்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தரும்.

நாட்குறிப்புப் புத்தகத்தால் விளையும் நன்மைகள் பலவாகும். ஐரோப்பியர் நாட்குறிப்பு வரைதலைத் தம் கடமைகளில் ஒன்ருகக் கைக்கொள்கின்றனர். பல தலைமுறைகட்கு முன் எழுதப்பட்ட தமது முன்னோர் நாட்குறிப்புப் புத்தகங்களையும் சிலர் பொன்னே போல் போற்றி வருகின்ருர்கள். தேச சரித்திரம் எழுதுவோர்க்கு அப்புத்தகங்கள் மிகுதியும் பயன்படும்.

நமது தந்தையார் இளம் பருவத்தில் எவ்வாறு ஒழுகினார்? அவரது வாழ்நாட்களில் அவர் அடைந்த இன்பதுன்பங்கள் யாவை? அவரது அரிய நண்பர்கள் யாவர்? அவர்களால் அடைந்த பயன் என்ன? இவை போன்ற பலவும் நாம் அறிந்து கொண்டால் அவை நமது வாழ்க்கையை நடத்த வழிகாட்டியாகும். அவ்விதமே நாம் எழுதிவைக்கும் குறிப்புக்களும் நமக்குப் பின் நமது சந்ததியாருக்குப் பயன்படும்.

துரையப்பன் என்னும் ஒரு சிறுவன், ஒவ்வொரு நாளும் தன் குறிப்புப் புத்தகத்தில் நாட்குறிப்புக்களுள் அவசியமான இரண்டொன்றைக் குறித்து வைப்பான். விடுமுறை நாட்களில் அவன் அப்புத்தகத்தை எடுத்து, அதில் உள்ள குறிப்புக்களைப் படித்துப் பார்ப்பான். சென்ற ஆண்டில் பொங்கற் புதுநாள், எந்தக் கிழமை வந்தது என்று யாரேனும் வினவின், துரையப்பன், உடனே தன் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்து அவர்கட்கு உரைப்பான். தன் பெற்றோர்கள் அவ்வப்போது செய்த பேருதவிகளைக் குறித்து வைத்திருப்பான். அதைப் பார்க்க அவன் மனம் மிகுதியும் மகிழ்ச்சியடையும். நண்பர்களைச் சந்தித்த நாட்களைப் பார்க்கப் பார்க்க, அவர்களை எண்ணி எண்ணி ஆனந்திப்பான்.

ஒரு சமயம் அவன் தந்தையார் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்திருந்தார். அந்த வழக்கில் தாம் பணம் கொடுத்திருந்ததை மெய்ப்பிப்பதற்குச் சில ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருந்தார். அச் சமயத்தில் துரையப்பன் எழுதிவந்த நாட்குறிப்புப் புத்தகம் பெரிதும் அவருக்கு உதவியாக இருந்தது. அதனால் அவ்வழக்கில் தந்தையாருக்கு வெற்றியுண்டாயிற்று. பலரும் துரையப்பனைப் புகழ்ந்து பேசினர். அன்று முதல் துரையப்பன் தன் குறிப்புப் புத்தகத்தில் பலவற்றைப் பற்றியும் முன்னிலும் அதிகமாக எழுதத் தொடங்கினான்.

துரையப்பன் எழுதிவைத்துள்ள நாட்குறிப்புக்களுள் சில வருமாறு:—

15—4—47 பாடசாலை விடுமுறை ஆரம்பம்.

20—4—47 நானும் என் பெற்றோரும் நீலகிரிக்குச் சென்றோம்.

15—5—47 பசுமாடு வாங்கினோம்.

5—6—47 நான் நான்காம் வகுப்பு மாறிய நாள்.

14—8—47 மவுண்ட்பேட்டன் இந்திய அரசப் பிரதிநிதியாகப் பதவி ஏற்றார்.

15—8—47 இந்தியா சுதந்திரம் அடைந்தது.

21—1—48 ஸ்ரீ ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றார்.

,,—,,—,, ஆங்கிலேய ராஜப் பிரதிநிதி மவுண்ட்பேட்டன் பிரபு இங்கிலாந்து சென்றார்.

22—1—48 இங்கிலாந்து மன்னர் இந்தியா சக்கரவர்த்தி என்ற பட்டத்தைத் துறந்தார்.

30—1—48 மகாத்மா காந்தி பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போகும் பொழுது சுடப்பட்டு இறந்தார்.

31—1—48 மகாத்மா தகனம் பண்ணப்பட்டார்.

5—2—48 என் தமக்கையார் திருமணம்.

14—3—45 'ஜல உஷா' என்ற கப்பல் விசாகப்பட்டினத்தில், பண்டித நேருவால் மிதக்கவிடப்பட்டது.

22—3—48 புதுக்கோட்டை சென்னையுடன் இணைக்கப்பட்டது.

8—6—48 நான் ஐந்தாம் வகுப்பு மாறிய நாள்.

10—8—48 என் தந்தையார் ஜில்லாபோர்டு அங்கத்தினரானர்.

29. விஞ்ஞானமும் சரித்திரமும்

கலை	நிறுவிய	அழிவு	சரித்திரம்	பீரங்கி
சேதம்	மரிப்பது	நோக்கம்	நிலைநாட்ட	அணுகுண்டு
மாந்தர்	சிகிச்சை	பரிகாரம்	விஷவாயு	சாம்ராஜ்யம்
விபத்து	நாகரிகம்	பண்பாடு	விஞ்ஞானம்	நச்சுப்பொருள்

கோவிந்தன்:—கோபாலா, இன்று உபாத்தியாயர் சரித்திர பாடம் கற்பித்தாரே, கவனித்தாயா?

கோபாலன்:—அதென்னப்பா விசேஷம்? எப்பொழுதும்போல் பழைய கதைதானே! புதிதாக என்ன சொன்னார்?

கோவிந்தன்:—உனக்கு எப்பொழுதும் சரித்திரம் என்றால் வெறுப்புத்தான். விஞ்ஞானப் பாடமென்றால் மகிழ்ச்சியடைவாய்.

கோபாலன்:—ஆம். விஞ்ஞானத்தின் பெருமையே பெருமை! நாம் இன்று அடைந்திருக்கும் வசதிகள் எல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனால் விளைந்தன அல்லவோ?

கோவிந்தன்:—என்ன பெருமை? புதுமை புதுமையாக நோய்களைக் காண்பதும், அவற்றிற்குப் பரிகாரம் ஒவ்வொரு மருத்துவர் ஒவ்வொரு விதமாகக் கூறுவதும் பெருமையோ? நச்சுப் பொருள்களை உட்கொண்டு மாந்தர் மரிப்பதைக் கேட்டதில்லையோ? ஆகாய விமானங்களுக்கு ஏற்படும் விபத்துக்களையும், புகை வண்டிகளுக்கு உண்டாகும் சேதங்களையும், அவற்றால் மக்கள் படும் துயரங்களையும் பத்திரிகை வாயிலாக அறிந்ததில்லையா? போரைத்தான் எடுத்துக் கொள்வோமே. ஆஹா! என்ன அழிவு! பீரங்கிகள் என்ன! குண்டுகள் என்ன! விஷ வாயுக்கள் என்ன! இவை

கள் செய்யும் கொடுமைதான் என்னே! சமீப காலத்தில் முடிவடைந்த உலகப் பெரும் போரில் அமெரிக்கர்கள் அணுகுண்டை வீசி ஜப்பானிய நகரங்களை அழித்ததை நினைத்தாலே என் மனம் நடுங்குகிறது.

கோபாலன்:—கோவிந்தா, நீ சொல்வது உண்மைதான். ஆனல், விஞ்ஞான வளர்ச்சியின் பயனுக நாம் அடைந்து வரும் நன்மைகளை நீ மறந்துவிட்டாய் போலும். புது மாதிரியான சிகிச்சைகளால் நோயாளிகள் குணமடைந்து வருவதை நீ அறிந்ததில்லையோ? ரயில், தபால், தந்தி, ரேடியோ, ஆகாயவிமானம் ஆகியவற்றின் உபயோகங்களை நான் உனக்குச் சொல்லவும் வேண்டுமா? நேற்றுத் தான் உன் மைத்துனன் டில்லியிலிருந்து புறப்பட்டு ஒரே நாளில் ஊர் வந்து சேர்ந்தானென்று கூறினையே. முன் காலத்தில் இவ்வாறு நடந்ததாகக் கேட்டதுண்டா? சிறிது தூரத்திலுள்ள ஊர்களுக்குக்கூடச் செல்ல வசதியில்லாமல் மாட்டு வண்டிகளிலும், கால் நடையாகவும் மக்கள் சென்றதையும், அக்காலங்களில் அவர்கள் அடைந்த துன்பங்களையும் உன் பாட்டனுர் அடிக்கடி கூறுவதைக் கேட்டு வருகின்றோமே.

நச்சுப் பொருள்களைத் தின்று மாந்தர் மரிப்பதையும், போரில் வீரர்கள் செய்யும் கொடுமைகளையும் விஞ்ஞானக் குறைகளெனக் கூறுகிருய். நெருப்புப்பற்றி வீடு எரிந்து போனல் அது நெருப்பின் குற்றமா? நமக்குப் பல வகைகளிலும் உதவும் நெருப்பை அக் காரணத்தைக்கொண்டு பழிக்கலாமா? விஞ்ஞானிகள் பல உண்மைகளை நமக்கு எடுத்துரைக்கிருர்கள். அவைகளை நல்ல வழியில் உபயோகித்தால் நல்ல பலனை அடைகிறோம்; தீய வழியில் உபயோகித்தால் துன்புறுகிறோம்.

நாம் இன்று கண்டு களிக்கும் பேசும் படங்களும், கேட்டு ஆனந்திக்கும் வானெலிகளும் விஞ்ஞான வளர்ச்

சியால் ஏற்பட்டதென்பதை மறக்கலாமா? விஞ்ஞானம் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றது. நாம் இன்னும் என்னென்ன அதிசயங்கள் காணப் போகிறோமோ! சமீபத்தில் சுதந்திரமடைந்துள்ள நம் நாடு, மற்றைய நாடுகளைப் போல் சிறப்புற்று விளங்க வேண்டுமானால், விஞ்ஞானம் முன்னேற்றமடைய வேண்டுமென்று நமது பிரதமர் ஜவஹர்லால் நேருவும், மற்றுமுள்ள பெரியோர்களும் அடிக்கடி கூறிவருவதை நீ கேட்டதில்லையா?

கோவிந்தன்:—சரியப்பா, விஞ்ஞானம் அவசியம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், சரித்திரம் பழங் கதை என்கிறாயே. அரசர்கள் தங்களுக்குள் சண்டையிடுவதும், ஒருவர் நாட்டை மற்றொருவர் கைப்பற்றுவதும், யுத்த காலங்களில் மக்கள் துன்புறுவதும் இவை போன்றவைகள்தான் சரித்திர வாயிலாக நாம் அறியக்கூடிய விஷயங்கள் என்று நீ நினைக்கிறாய். சரித்திரத்தின் உண்மையான நோக்கத்தை நீ அறியவில்லைபோலும்! ஒரு நாட்டின் பெருமையை மக்களுக்கு அறிவித்து, அவர்களை நாட்டுப் பற்றுள்ளவர்களாகச் செய்வது அந்த நாட்டின் சரித்திரமன்றோ?

உலகம் போற்றும் உத்தமர்களான புத்தர், அசோகர் இவர்களது வாழ்க்கையையும், இவர்கள் உலகத்திற்குச் செய்த நன்மைகளையும்பற்றிப் படிக்கும்போது நமது நாட்டின் பெருமை விளங்கவில்லையா? புருஷோத்தமர், சமுத்திர குப்தர், பிருதிவி ராஜர், இராஜராஜன் முதலிய பெயர் பெற்ற வீரர்களும், ராணி சம்யுக்தை, பத்மினி, அகல்யா பாய், ராணி லக்ஷ்மிபாய், கண்ணகி முதலிய வீரப் பெண் மணிகளும் புகழ்பெற்று விளங்கிய நாடு இது என்பதை நாம் அறியும்போது நம்மை அறியாமலே ஒருவித உணர்ச்சி உண்டாகவில்லையா?

பழங்கால வீரர்களைப்போல் விளங்க வேண்டுமென்று முயன்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவிய சிவாஜியைப் பற்றிப் படித்ததை மறந்துவிட்டாயோ? நாட்டின் பழைய நாகரிகம், கலை, பண்பாடு முதலியவற்றை நமக்கு அறிவித்து, அப்பெருமைக் கேற்றவாறு நம்மை நடக்கும்படி தூண்டுவது சரித்திரமன்றோ? நமது நாட்டின் பழைய பெருமையை அறிந்த மாபெரும் தலைவர்களான ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல் முதலியோர் அதனை மீண்டும் நிலைநாட்டக் கருதிச் செய்துவரும் முயற்சிகளை நாம் காண்கின்றோமே! அவ்வாறிருந்தும் சரித்திரத்தை நீ பழிக்கலாமா?

கோபாலன்:—சரிதான், நான் சரித்திரத்தின் உண்மை நோக்கத்தை அறிந்தேன். விஞ்ஞானத்தைப்போல் சரித்திரமும் அவசியமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

வினுக்கள்

1. ஆகாய விமானங்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் யாவை?
2. விஞ்ஞானத்தால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?
3. நமது நாட்டில் தோன்றிய சில வீரப் பெண்மணிகளைக் கூறுக.
4. சரித்திரத்தால் விளையும் பயன் என்ன?

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களுக்கு எழுவாய், பயனிலைகளைக் கூறுக:

    (1) நான் சரித்திரத்தின் உண்மையை அறிந்தேன்.
    (2) இவைகள் செய்யும் கொடுமைதான் என்னே!
    (3) கோவிந்தா! நீ சொல்வது உண்மைதான்.

2. வேற்றுமை கூறுக:

    நீ, நாம், மக்கள், வீரன்.

30. பத்திரிகைச் செய்தி

சுதேசமித்திரன் (13—10—49)

வாஷிங்டனில் நேருவுக்கு ராஜாங்க வரவேற்பு

விமான நிலையத்தில் ஜனாதிபதி நல்வரவு கூறினார்

"ஜனகணமன" கீதம் முழங்க முப்படை மரியாதை அணிவகுப்பு

வாஷிங்டன், அக்டோபர் 11—

பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு இன்று பிற்பகல் இங்கு வந்திறங்கினார். இந்தியப் பிரதமரின் வரவை எதிர்பார்த்து ஜனாதிபதி ட்ருமனும், அவரது மந்திரி சபையினரும், வரவேற்புக் கமிட்டியினரும் வாஷிங்டன் விமான நிலையத்தில் காத்திருந்தனர்.

ஜவஹர்லால் நேரு விமானத்திலிருந்து இறங்கும் பொழுது மரியாதைக்காக, 21 குண்டுகள் சுடப்பட்டன. ஜனாதிபதி ட்ருமன், பண்டித நேருவை அன்புடன் வரவேற்றார். "உங்கள் சர்க்காரின் பிரதம மந்திரி என்ற முறையில் மாத்திரமின்றி, ஒரு மாபெரும் நாட்டின் மரியாதைக்கும் அன்புக்கும் பாத்திரமான தலைவர் என்றும் நான் உங்களை வரவேற்கிறேன்" என்று பண்டித நேருவைப் பார்த்து ஜனாதிபதி ட்ருமன் உரைத்தார்.

"உங்கள் விஜயம், ஒரு விதத்தில், அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதாக இருக்கும் என நம்புகிறேன்" என்று ஜனாதிபதி ட்ருமன் கூறினார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான பிளேர் மாளிகையில் இன்று இரவு பண்டித நேருவுக்கு ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது.

ஜனாதிபதியின் வரவேற்பு உரை

ஜனாதிபதி ட்ருமன் பண்டித நேருவை வரவேற்றுக் கூறியதாவது:— பிரதம மந்திரி அவர்களே! அமெரிக்க சர்க்கார் சார்பாகவும், மக்கள் சார்பாகவும் உங்களை வர வேற்க நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் சர்க்காரின் பிரதம மந்திரி என்ற முறையில் மாத்திரமன்றி, ஒரு மாபெரும் நாட்டின் அன்புக்கும் மரி யாதைக்கும் பாத்திரமான தலைவர் என்றும் உங்களை நான் வரவேற்கிறேன். உங்கள் நாட்டுக்கு வழிகாண முயலும் பொழுது எங்கள் நாடு கண்டு பிடிக்கப்பட்டது.

இது தெய்வாதீனமான விஷயம். உங்களது இவ் விஜயம் ஒரு விதத்தில் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதாக இருக்கும் என நம்புகிறேன்.

அமெரிக்க மக்களின் அன்பையும், நல்லெண்ணத் தையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங் கள் உண்மையில் உங்களுடைய அன்பார்ந்த நண்பர்கள் என்பதை உங்க்ளுக்கு இவ்விஜயம் உறுதிப்படுத்தும் என நம்புகிறோம்.

குறிப்பு:—

இந்தியாவுக்குப் புதிய வழி ஒன்றைக் கண்டு பிடிக்கச் செய்யப்பட்ட முயற்சியைப் பற்றி ஜனாதிபதி ட்ருமன் குறிப் பிடுவது, 1492-ல் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததைத்தான்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த நாளின் ஆண்டுவிழா ஜவஹர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த மறுநாள் அங்குக் கொண்டாடப்பட்டது.

நேருவின் பதில் மொழிகள்

ஜனாதிபதியின் வரவேற்புக்குப் பதிலளித்துப் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியதாவது:—

நான் முதன்முதலாக உங்கள் மண்ணை மிதிக்கும் இந்த நாள் எனக்கு மிகவும் முக்கியமானது. நான் வெகு நாளாகக் கொண்டிருந்த ஆசை இன்றுதான் நிறைவேறியிருக்கிறது.

புதிய இந்தியக் குடியரசாகப் போகும் எங்கள் நாட்டு மக்கள் ஆசியையும், சர்க்காரின் ஆசியையும் உங்களுக்கும், இந்தப் பெருமை வாய்ந்த நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒன்று மேற்கத்திய உலகத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொன்று கிழக்கத்திய உலகத்தைச் சேர்ந்ததாகவும் திகழும். இவ்விரு குடியரசுகளும், பரஸ்பர அனுகூலத்துக்காகவும், மனித வர்க்கத்தின் நன்மைக்காகவும், சினேகமான பலனளிக்கக்கூடிய முறையில் பல துறைகளில் ஒத்துழைக்கும் என நம்புகிறேன்.

பண்டித நேரு சுருக்கமாகவே பேசினார்.

பயிற்சி

1. பின் வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைக்க:

அடிப்படையாய், இன்றியமையாத, சிறப்பை.

2. சொற்களைப் பொருத்தமறிந்து சேர்க்க:

புகழ்ந்து	மனிதர்
படித்த	பறவை
பறந்த	பேசினார்

3. பன்மைக்கு ஒருமையும், ஒருமைக்குப் பன்மையும் கூறுக:

(1) நாங்கள் பல ஊர்களுக்குச் சென்றோம்.
(2) அவன் புத்தகம் வாங்கி வந்தான்.

31. கரிகாலன் (நாடகம்)

நாடி	விலங்கு	அசட்டை	அமைச்சர்
வாழ்க	அமர்தல்	ஊர்வலம்	ஆச்சரியம்
சூழ்ச்சி	சனியன்	தண்டனை	கட்டுப்பாடு
கருவூர்	அணிந்து	பாக்கியம்	வரவேற்றல்
சீர்காழி	முதியவர்	அரசுரிமை	கொடியோர்
வழக்கு	வேட்டை	அனுபவம்	நகர மாந்தர்

காட்சி 1

இடம் :— *உறையூர் அரசவீதி.*

பாத்திரங்கள் :-*கரிகாலன், இரும்பிடர்த்தலையார், நகரமாந்தர்.*

நகரவாசி 1 :— ஓராண்டுவரை நம் நாட்டைப் பிடித்திருந்த சனியன் ஒழிந்தது. நமது துன்பங்கள் நீங்கின.

நகரவாசி 2 :— ஆம்! அக் கொடியோர் காட்டில் ஓடி ஒளிந்து கொண்டனர். ஆனால், நம் அமைச்சர் இரும்பிடர்த்தலையார் விடுவரா? காட்டு விலங்குகளை வேட்டையாடுவது போல் அவர்களை வேட்டையாடி ஒழித்து விட்டார்.

நகர 1 :—அது நியாயம் தானே. விஷத்தை வைத்திருக்கலாமா? அவர் இங்கில்லாதிருந்த சமயம் பார்த்துத் தானே அத்தீயோர் நமது அரசரைக் கொல்ல வழி தேடினர்.

நகர 2 :—நல்ல வேளையாகத் தப்பிச்சென்று விட்டார்.

நகர 1 :— நமது அரசர் மீண்டும் நமக்குக் கிடைத்ததுதான் ஆச்சரியம். அது நமது பாக்கியமே!

நகர 2 :—சீர்காழியிலிருந்து பூமாலையுடன் புறப்பட்ட பட்டத்து யானை, ஓரிடத்தும் நில்லாமல் நேரே கருவூர் சென்று, அங்கிருந்த நமதரசரைக் கண்டுபிடித்து அவர் கழுத்தில் மாலையைப் போட்டது ஆச்சரியமல்லவா?

TB 031(5) N49

நகர 1 :— ஆம்! அதுவே அவரது அரசுரிமையை மெய்ப்பிக்கிறது. கடவுள் அருளும் நியாயத்துக்குத்தானே துணை செய்யும்.

நகர 2 :— ஆ! அதோ நமது அரசரும், அமைச்சர் இரும்பிடர்த்தலையாரும் ஊர்வலம் வருகின்றனர்.

(கரிகாலனும், இரும்பிடர்த்தலையாரும் ஒரு தேரேறி ஊர் வலமாக வருதல். நகர மாந்தர் மகிழ்ச்சியுடன் 'கரிகாலன் வாழ்க' என வாழ்த்திப் பூக்களை வாரிவாரி வீசி வரவேற்றல்.)

கரிகாலன் :— அமைச்சரே! மக்கள் மகிழ்ச்சியைப் பார்த்தீர்களா !

இரும் :—நிழலருமை வெய்யிலில் தானே தெரியும். தம் அரசருக்குத் தீயோரால் துன்பம் நேர்ந்த காலத்தில் அரசரைப் பாதுகாக்கத் தவறிய குற்றத்திற்குத் தக்க தண்டனையை ஓராண்டளவும் அனுபவித்துவிட்டனர். அந்த அனுபவம் தான் இன்றைய மகிழ்ச்சிக்குக் காரணம்.

கரி :— பெரியோரே! தாங்கள் மக்கள் மேல் குற்றம் சுமத்துவதை இன்னும் நிறுத்தவில்லையா ? பாவம், பொது மக்கள் என் செய்வர் ? கட்டுப்பாடான சூழ்ச்சிக்கு முன் அவர்களால் என்ன செய்யமுடியும் ?

இரும் :— என்னதான் சொன்னாலும் தங்களுக்கு நேர்ந்த துன்பத்திற்கு மக்கள் அசட்டையும் ஒருவகையில் காரணந்தான்.

(தேர் சென்று விடுதல். இரண்டு கிழவர் பேசிக்கொண்டு வருதல்.)

முதல் கிழவர் :— நண்பரே! பார்த்தீரா நமதரசரை!

இரண்டாம் கிழவர் :— பார்த்தேன். ஆனால் வயதில் மிகவும் இளைஞராக இருக்கிறார்.

மு-கி :— அதனால் என்ன ?

87996

இ-கி :— இவர் பெரு வீரராக இருக்கலாம். ஆனால் நீதியுணர்ச்சியும், அரசியல் முறையும் இவர் நிரம்பப் பெற்றிருக்க முடியுமா என்பதுதான் என் சந்தேகம்.

மு-கி :— உமது ஐயம் ஒரு வகையில் நியாயமானதே. அவ்வகையில் நாம் என்ன செய்யலாம்? இறைவன் அருளால் மீண்டும் அரசு பெற்றவர்க்கு அவனருளால் அவ்வறிவு நிரம்பி யிருக்கலாமல்லவா? மேலும் குலவித்தை கல்லாமல் பாதி வரும் என்பார்களே.

இ-கி :— அதைத்தான் நாம் பார்த்து விடுவோமே.

மு-கி :— எப்படிப் பார்ப்பது?

இ-கி :— நாம் இருவரும் ஒரு வழக்குடையவர்போல் நீதி வேண்டிச் செல்வோம். அப்பொழுது உண்மை தானே வெளியாகி விடுகிறது.

மு-கி :— அதுதான் சரி. வாரும் போவோம்.

(இருவரும் போதல்)

காட்சி 2

இடம் :— கரிகாலன் அரண்மனை.

பாத்திரங்கள் :— கரிகாலன், முதியவர் இருவர்.

கரிகாலன் :— (தனக்குள்) எல்லாம் தெய்வச் செயல். நமக்கு மீண்டும் இவ்வரசு கிடைக்கும் என்பதைக் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் நினையாதது நடந்து விட்டது.

(ஒரு காவலன் வருகை.)

காவலன் :— அரசே! யாரோ இரு முதியோர்கள் தங்களை நாடி வந்திருக்கின்றனர்.

கரி :— உடனே அவர்களை வரச்சொல்.

(காவலன் செல்லல். முதியவர் வருதல்.)

வாருங்கள்! வாருங்கள்! இவ்விருக்கையில் அமருங்கள். தாங்கள் வந்த காரணம் என்னவோ?

மு-கி :— ஒன்றுமில்லை. ஒரு வழக்கின் பொருட்டு வந்தோம். ஆனல்............

கரி :— ஆனல் என்ன? ஓகோ, என் இளமையால் உங்கள் வழக்கைத் தீர்க்க முடியுமோ என்று நினைக்கின்றீர் போலும். கவலை வேண்டாம். சற்றுப் பொறுங்கள். நம் அரண்மனையில் வயதாலும் அறிவாலும் முதிர்ந்த பெரியாரொருவர் நீதித் தலைவராக இருக்கின்றார். அவரை இங்கு அனுப்புகிறேன். அவரிடம் உங்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ளலாம்.

(போதல்)

இ—கி :— பார்த்தீரா! நாம் சொல்லுமுன்னே நம் கருத்தைத் தெரிந்துகொண்டுவிட்டார். இப்படிப்பட்ட மதி வலி படைத்த மன்னவரை நாம் சந்தேகிப்பது முறையா?

மு—கி :— சற்றுப் பொறும். பார்ப்போம்.

(ஒரு கிழவர் தண்டூன்றிவந்து ஆசனத்தமர்தல்)

நீதிபதி :—ஐயா! நீங்கள்தானே ஏதோ வழக்கிலே நியாயம் பெற விரும்பி வந்திருக்கிறீர்கள். உங்கள் வழக்கென்ன?

மு—கி :—ஐயா! நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள்; நீண்ட காலமாக இருவரும் சேர்ந்து வாணிபம் செய்து பெரும்பொருள் திரட்டினேம். பிறகு செல்வத்தை இருவரும் சமமாகப் பகிர்ந்துகொண்டோம். எனக்கோ வயதாகி விட்டது. எனக்குப் பின் என் செல்வத்தை யடைய மக்களும் இல்லை. ஆகவே. என் செல்வத்தை என்போன்ற உரிமையுடைய இவர்க்கே கொடுக்க விரும்புகின்றேன். இவர் வேண்டாம் என்கிறார். இதுவே என் வழக்கு.

இ—கி :—பெரியீர்! என் சொல்லையும் கேட்டருள வேண்டும். நானும் இவரைப் போலவே மக்கட்பேறில்லாத வன். இவ்வளவு பெருஞ் செல்வத்தையும் வைத்து இனி மேல் நான் என்ன செய்யப்போகிறேன்? எம்போன்ற புத்திரப் பேறில்லாதவர் செல்வம் அரசாங்கத்திற்குரியது. ஆகவே, அரசாங்கத்தார் அதை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பதே என் எண்ணம்.

கரி :— உங்கள் வழக்கு விசித்திரமாகவே இருக்கிறது. ஆனல் உங்கள் இருவர் கருத்திலும் சிறிது தவறு இருக் கின்றது. முதற்கிழவர் செல்வம் தேடுவது தாம் மட்டும் அனுபவிப்பதற்கே என்ற நினைப்பில் பேசுகின்ருர். ஒரு வர் தம் முயற்சியால் தேடும் செல்வம் தமக்குமட்டுமன்று. மக்கள் எல்லோர்க்கும் உரியதே என்று எண்ணியிருந்தால் அவர் செல்வத்தை உமக்குக் கொடுக்கவேண்டும் என்ருே, அவ்வாறு கொடுப்பதற்குத் தமக்கே உரிமையுண்டு என்ருே எண்ணியிருக்கமாட்டார். நீரும் அந்த எண்ணத் துடன்தான் பேசுகிறீர். அரசாங்கத்தில் சேர்க்க விரும்பும் முன், அரசாங்கம் இதை எடுத்துக்கொள்வது முறையா என்பதையும், அதனல் ஏற்படக்கூடிய பயனையும் சிந்தித் திருப்பீர். ஆகவே, நீங்கள் இருவரும் உங்கள் செல்வத்தை யார்ருக்கும் கொர்டுக்கவேண்டாம். இருவரும் சேர்ந்தே தேடி னற்போல் இருவரும் சேர்ந்தே கல்விச்சாலை, மருத்துவச் சாலை முதலிய அறவழிகளில் எல்லோர்க்கும் பயன்படும் முறையில் இதனைச் செலவழியுங்கள். இதுவே என் தீர்ப்பு.

கிழவர் இருவரும் :— ஆஹா! இதை அறியாமற் போனேமே! இதுவன்ருே நல்ல தீர்ப்பு! இவரன்ருே சிறந்த நீதிமான். வயதிற்கேற்ற அறிவும், அனுபவமும் இவரிடம் நிறைந்துள்ளன.

கரி :— முதியோர்களே! எனக்கு, நீங்கள் நினைப்பது போல் அதிகம் வயதாகி விடவில்லை. இதோ பாருங்கள்.

(கரிகாலன் தன் உண்மை உருவத்துடன் நிற்றல்.)

முதி :— ஆஹா! நமதரசர்! என்ன ஆச்சரியம்! நம் அறிவீனத்தால் சந்தேகம் கொண்டோமே! அரசே! எங்களை மன்னிக்கவேண்டும்.

கரி :— நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே. உங்களை ஏன் மன்னிக்கவேண்டும். உங்கள் உள்ளத்தே தோன்றிய ஐயம் நியாயமானதே! நீங்கள் மகிழ்ச்சியுடன் சென்று வரலாம்.

இ-கி :— அரசே! நீடூழி வாழ்க! (போதல்)

(காட்சி முடிவு)

வினாக்கள்

1. கரிகாலன் மீண்டும் அரசு பெற்றது எப்படி ?

2. இரும்பிடர்த்தலையார் பொது மக்களைக் குறை கூறியதேன் ?

3. முதியவர் ஐயத்தைக் கரிகாலன் எவ்வாறு போக்குகின்றான் ?

4. கரிகாலன் செய்த தீர்ப்பு என்ன ?

பயிற்சி

நாடகத்தை நடத்திக் காட்டுக.

32. மகாத்மாவின் உபதேசமொழிகள்

1. உண்மையாக ஒழுகுபவனுக்கு இறைவன் துணை செய்வான்.

2. பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்கின்றவன், தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான்.

3. எப்படிப்பட்ட சமயத்திலும் உண்மையை ஒளிக்காமல் சொல்ல வேண்டும்.

4. பேசுகின்றவர்கள் தமது நாவை அடக்கிப் பேச வேண்டும்.

5. மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்கி வைப்பது பெருந் தவறு.

6. சுதந்திர மனிதன் மிருகத்தைப் போல் நடந்து கொள்ளலாகாது.

7. தீண்டாமை என்பது ஒரு பாவமான செயல்.

8. மனிதர்களுடைய உடம்புகளே இறைவனுடைய கோயில்களாகும்.

9. மக்கள் இனத்திற்குத் தீண்டாமை பெரும் பகையாகும்.

10. தொண்டர்கள் தூயவர்களாக நடத்தல் வேண்டும்.

11. மக்கள் யாவரும் நண்பர்களாக வாழவேண்டும்.

12. பணத்தைவிடத் தொழிலுக்கு மதிப்பும் பலமும் அதிகம்.

13. முயற்சி செய்வது நமது கடமை.

33. மகாத்மா காந்தி பஞ்சகம்

புவி	கீர்த்தி	வாணர்	வெங்நாகம்
நெறி	மூலிகை	கணித்தல்	மெய்ஞ்ஞானம்
திறன்	குடிமை	பராதீனம்	ஒத்துழையாமை
விடிவு	அடிமை	அருங்கலை	மெய்த்தொண்டர்

வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மாநீ வாழ்க! வாழ்க! 1.

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமுங் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்! 2.

வேறு

கொடியவெங் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடிமின்னல் காக்கும் குடைசெய்தா னென்கோ?
என்சொலிப் புகழ்வதிங் குனையே?

விடிவிலாத் துன்பஞ் செயும்பரா தீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய். 3.

தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்த்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர்கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைந்திடத் துணிந்தனை பெருமான்! 4.

பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ யறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழை யாமை'
நெறியினல் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே. 5.

—பாரதியார்.

வினக்கள்

1. பாரத நாட்டின் நிலை எவ்வாறிருந்தது?
2. இந்நாட்டு மக்கள் எவ்வாறு வாழ விரும்பினர்?
3. மஹாத்மா ஆற்றிய பணி யாது?

சொற்பொருள் :— புவி-பூமி, சாலவும்-மிகவும், அகன்று-நீங்கி.

34. சில கடிதங்கள்

வியாபாரக் கடிதம்.

கூடலூர்,
12—11—49.

ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் அவர்களுக்கு,
'ஸ்ரீ கோபால் மஹால்'
மதுரை.

ஐயா,

தாங்கள் முன் அனுப்பிய புத்தகங்களைப் பெற்றுக் கொண்டேன். இப்பொழுது தயவு செய்து அடியிற் கண்ட புத்தகங்களை ரயில் மூலம் அனுப்பிவிட்டுப் பட்டியலையும், ரயில் ரசீதையும் வி. பி. யாகத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகடைத் தெரு,
கூடலூர்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
தி. அரங்கசாமி.

புத்தகங்களின் விவரம்.

சுதந்திரத் தமிழ் வாசகம்	முதல் வகுப்பு	200	பிரதிகள்
ஷை	இரண்டாம் வகுப்பு	75	,,
ஷை	மூன்றாம் வகுப்பு	75	,,
ஷை	நான்காம் வகுப்பு	75	,,
ஷை	ஐந்தாம் வகுப்பு	50	,,
நூதனப் பயிற்சிக் கணிதம்	மூன்றாம் வகுப்பு	100	,,
ஷை	நான்காம் வகுப்பு	75	,,
ஷை	ஐந்தாம் வகுப்பு	75	,,

2. தந்தை மகனுக்கு எழுதியது.

சென்னை.
15, மே மீ 1949.

செல்வச் சிரஞ்சீவி குமாரன் அழகப்பனுக்கு,

நான் நேற்றுக்காலை 7-30 க்குச் சென்னை வந்து சேர்ந்தேன். 10-45 க்கு மருத்துவச்சாலைக்குப் போய், மருத்துவரைக் கண்டு பேசினேன். எனக்கு வயிற்றில் குறைபாடு இருப்பதாயும், ஒரு மாதம் இங்கு இருக்க வேண்டும் என்றும், விரைவில் குணமாகிவிடும் என்றும் அவர் கூறினர். அதன்படி நான் இங்கிருக்க வேண்டியதுதான். நேற்று முதல் மருத்துவச் சாலையில் சேர்ப்பிக்கப்பட்டேன். கூடிய மட்டும் வசதியாகவே இருக்கிறது. நான் மாலை வேளைகளில் கடற்கரையில் உலாவப் போகிறேன். கடலில் இருந்து வீசும் உப்பங் காற்று உடம்புக்கு நலத்தைக் கொடுக்கும்.

நீ நன்ருய்ப் படி. பாடசாலைக்குத் தவருது போய்ப் பாடங்களைக் கருத்தாய்ப் படிப்பதுடன், வீட்டுக்கு வேண்டிய காரியங்களையும் பொறுப்புடன் செய்துவா. உன் தங்கை, தம்பி இவர்களுடனே அன்பாயிரு. நான் ஊருக்கு வரும்பொழுது, உனக்கு ஒரு நல்ல கதைப் புத்தகமும், மற்றவர்களுக்கு அழகிய பதுமைகளும் வாங்கிக்கொண்டு வருகிறேன். உனது கடிதங்களை அடிக்கடி எதிர்பார்க்கிறேன்.

எனது முகவரி,
அரசாங்கப் போது மருத்துவச்சாலை,
ஸென்ட்ரல் புகைவண்டி
நிலையத்திற்கு எதிர்ப்பக்கம்,
சென்னை.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தந்தை,
மதனகோபால்.

3. மகன் தந்தைக்கு எழுதியது.

செல்லூர், மதுரை.
20—10—41.

அன்பார்ந்த தந்தையே,

நலம். தங்கள் கடிதத்தைக் கண்டு, நாங்கள் எல்லோரும் மனம் மகிழ்ந்தோம். தாத்தா, தாங்கள் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று மிகுந்த ஆவலாய்க் கேட்டார். நான் தங்கள் கடிதத்தை நான்கு முறை படித்துக் காட்டினேன். அதன்பின் அவர் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு, தங்களை வாழ்த்தினர்.

நான் நாள்தோறும் பாடசாலைக்குப் போய் வருகிறேன். அதனுடன் வீட்டிலும் நன்ருய்ப் படித்துக்கொண்டு வருகிறேன். தம்பி எப்பொழுது பார்த்தாலும், 'அப்பா எங்கே?' என்று கேட்கிருன். அவனைச் சமாதானப்படுத்துவது மிகவும் கடினமாயிருக்கிறது.

நேற்று இராமநாதபுரத்திலிருந்து மாமா வந்தார். தாங்கள் சென்னைக்குப்போனது அவருக்கு இப்பொழுது தான் தெரிந்ததாம். முன்னல் கடிதத்தின் மூலமாகத் தெரியப்படுத்தாமைக்கு வருந்தினர். நாங்கள் சமாதானப்படுத்தினேம்.

தாயார், தங்கள் உடம்பைச் சரியாய்க் கவனித்துக் கொள்ளும்படி எழுதச் சொன்னர்கள். அடிக்கடி தங்கள் உடல் நிலையைக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள குமாரன்,
அழகன்.

35. கட்டுரைப் பயிற்சி

I. உவமைகள்:

1. உள்ளங்கை நெல்லிக்கனிபோல, திருவள்ளுவர் திருக்குறள் மக்களுக்கு நீதியை விளக்கிக் காட்டுகிறது.

திருக்குறளுக்கு நெல்லிக்கனி உபமானம்.

2. புற்றீசல் போல, பாண்டியனுடைய படைகள் அணி அணியாகப் புறப்பட்டன.

பாண்டியனுடைய படைக்குப் புற்றீசல் உவமை.

3. கருடனைக் கண்ட பாம்பு போல, செங்குட்டுவனைக் கண்ட வடவர் அஞ்சி ஒடுங்கினர்.

செங்குட்டுவனுக்குக் கருடன் உவமானம். வடவருக்குப் பாம்பு உவமானம்.

4. எள்ளில் எண்ணெய் போல இறைவன் எங்கும் இருக்கின்றார்.

இறைவன் எங்கும் இருத்தலுக்கு எள்ளில் இருக்கும் எண்ணெய் உவமானம்.

கீழ்வரும். வாக்கியங்களில் உள்ள உவமைகளைக் கோடிட்டுக் காட்டுக :

1. கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்.

2. மலரும் மணமும் போல நண்பர் இருவரும் பிரியாது வாழ்ந்தனர்.

3. கடல் மடை திறந்தாற் போல ஆசிரியர் அரிய பொருள்களை எடுத்துப் பேசினார்.

4. ஆண்டிகள் கூடி மடம் கட்டினாற் போல அனைவரும் ஒருங்கு கூடிப் பேசினார்கள்.

II. பழமொழிகள்:

1. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பதற்கிணங்க, கம்பர் தம்மை ஆதரித்த வள்ளலைப் பாராட்டிக் கூறியுள்ளார்.
'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி.

2. 'தன்வினை தன்னைச்சுடும்' என்ற பழமொழிக் கிணங்க, களவு செய்த பையன் தண்டிக்கப் பெற்றான்.
'தன்வினை தன்னைச் சுடும்' என்பது பழமொழி.

3. 'கூழானாலும் குளித்துக் குடி' என்பதற்கிணங்க, துரையப்பன் நாள்தோறும் குளித்துவிட்டு உண்பான்.
'கூழானாலும் குளித்துக் குடி' என்பது பழமொழி.

4. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற முன்னோர் மொழிப்படியே, உன் தந்தையார் நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு நோய் இன்றி நெடுங்காலம் வாழ்ந்து வந்தார்.
'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பழமொழிகளைக் கோடிட்டுக் காட்டுக:

1. அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதுபோல, ஒன்றை நினைத்துக்கொண்டு ஒன்றைப் பேசலாகாது.

2. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாமலே கன்னன் போர் செய்து தன் உயிரை விட்டான்.

3. தவளை தன் வாயாற் கெடுவதுபோல, அவன் தன் சொற்களாலே குற்றவாளி யானான்.

4. ஆனைக்கும் அடி சறுக்கும்; ஆதலால் கவனத்துடன் எச்செயலையும் செய்யவேண்டும்.

செய்யுள்

1. வாக்குண்டாம்

மானமுடையோர் இயல்பு

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்,
தளர்ந்து வளையுமோ தான். 1

நல்லாரைச் சேர்ந்த எல்லாரும் நன்மையடைவர்

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. 2

அடக்கமுடையாரை வெல்ல நினைத்தல் கூடாது

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 3

உறவினர் யாரென்பது

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 4

வஞ்சகர், வஞ்சகரல்லார் இயல்பு

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்;
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 5

—ஔவையார்.

2. நல்வழி

இரண்டே சாதி

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 1

வீண் கவலைக்கு இடம் கொடுக்கலாகாது

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 2

தருமசிந்தையின் தன்மை

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 3

மரித்தோர்க்காக வருந்த வேண்டாம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா;
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 4

வயிற்றின் தொல்லை

ஒருநா ளுணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய்; இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. 5

செல்வத்தை நல்வழியில் செலவு செய்க

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். 6

அதிகச்செலவால் அல்லல் பெருகும்

ஆனமுதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்வனுய் ஏழ்பிறப்பும் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு. 7

எல்லாம் தெய்வச் செயல்

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 8

ஈகையாளர்க்கு எல்லோரும் நண்பர்

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்ருர் உலகத் தவர். 9

செல்வத்திற்கு உள்ள வல்லமை

கல்லானே யானுலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயில் சொல். 10

—ஔவையார்

3. நன்னெறி

உத்தமர்களின் இயல்பு

என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

அன்புள்ளவர் சொல்லிய பயன்

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனி(து) ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. 2

உலோபியினிடம் பொருள்பெறும் உபாயம்

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியரால் தாங்கொள்க—இங்கிதங்கள்
ஒன்றினா லும்கறவா துள்ஒளிக்கும் ஆவின்பால்
கன்றினால் கொள்ப கறந்து. 3

ஈயாதவர் செல்வம் ஈவோருடையதாகும்

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 4

பிரிந்தபின் நட்புப் பெருமை இழக்கும்

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 5

—சிவப்பிரகாச சுவாமிகள்

4. கதைப்பாட்டு

கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை

பிராமணன் குழந்தையைக் காத்திருத்தல்

ஆயிழை போகை யாலே
  ஆரணம் முழுதும் வல்லோன்
சேயினைக் காத்தி ருந்தான்
  சிராத்தமென் றரசன் தூதர்
"நீயவண் வருக" என்றார்;
  "நேரமும் சென்று போனால்
போயதை யெல்லாம் வேறு
  புரோகிதர் கொண்டு போவார்," 1

கீரியைக் காவல் வைத்துச் செல்லல்

என்றுதன் மனத்தில் எண்ணி
  இன்பமாய் வளர்த்த கீரி
தன்துணை யாக அந்தத்
  தாயினை வைத்து நீங்கிச்
சென்றனன்; அரசன் வீட்டில்
  சிராத்தமும் முடித்துப் பெற்ற
பொன்துகில் அரிசி யெல்லாம்
  பொதிகளில் ஏற்றிக் கொண்டே, 2

கீரி நாகத்தைக் கொன்றுவிட்டு வருதல்

வருமுனே சேயைக் கிட்டி
  வந்ததோர் நாகம்! அந்தக்
கரியநா கத்தைக் கீரி
  கடித்திரு துண்ட மாக்கிக்
குருதிவாய் எங்கு மாகக்
  கொண்டுசந் தோஷம் காட்ட
அருமறை யோன்முன் சென்ற(து)
  "ஆ! கெடுத் தாயே" என்றே, 3

கீரியைக் கொல்லுதல்

தண்டினுல் அடித்துக் கொன்றுன்
 தளர்வோடு வீட்டில் வந்தான்
கண்டனன் பிள்ளை முன்னே
 கரியபாம் போவி ரண்டு
துண்டமாய்க் கடிக்கப் பட்டுத்
 தூரவே கிடக்கக் கண்டான்
மண்டிய துயர மாகி
 வயிற்றினில் அடித்துக் கொண்டான். 4

பிராமணன் புலம்பல்

வாயிலும் அடித்துக் கொண்டான்
 மண்ணையும் போட்டுக் கொண்டான்
''சேயினும் அதிக மான
 சேயைநான் கொன்றேன்'' என்றுன்;
''நீயெனக் கெதிரே வந்து
 நின்றெனைக் கெடுத்தாய்'' என்று
போயதன் மேல்வி ழுந்து
 புரண்டுருண்(டு) அரற்றி ளுனே. 5

பிராமணன் மனைவி வருந்தல்

தேவியும் சூழ்கி வந்தாள்
 தேவசன் மாவை நோக்கிப்
''பாவி இங் கேது கீரிப்
 பாலகன் இறந்த'' தென்றே
ஓ! வென அலறி நின்றுள்
 உற்றவா றவனும் சொன்னுன்
காவியம் கண்ணி தானும்
 கனலிடு மெழுகொத் தாளே. 6

— பஞ்சதந்திரம்.

5. பல்சுவை

மெய், பொய்

மெய்யதைச் சொல்வா ராகில் விளங்கிடும் மேலாம் நன்மை
வையகம் அவரைக் கொள்ளும் மனிதரில் தேவர் ஆவர்.
பொய்யதைச் சொல்வா ராகில் போசனம் அற்ப மாகும்
'நோய்யவர் இவர்கள்' என்று நோக்கிடார் அறிவுள் ளோரே.

—விவேகசிந்தாமணி.

செய்யத்தகுந்தவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்கொண்டு
தியாகம் கொடுக்க வேண்டும்;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்நாட்டி
நன்றாய் நடத்த வேண்டும்;
நம்பனிணை அடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னுமிகு பக்தி வேண்டும்;
ஆலமமர் கண்டனே, பூதியணி முண்டனே,
அனகவேம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்ப ளீச்சுர தேவனே.

—அம்பலவாணக் கவிராயர்.

87996

RRR
12774

பாரதியார்

மெல்லிய தங்கக் கொடியிலே—பூத்த
வீர விழிக்கனல் கொண்டவன்
சொல்லின் உணர்ச்சியைத் தூண்டியே—துள்ளித்
துள்ளிக் குதித்திசைப் பாடகன்.

அச்சமில்லை யெனப் பேசிடும்—வாள்
ஆயுதம் போல்வளர் மீசையான்
துச்ச அடிமைப் பிழைப்பினைத்—தூ
தூவெனச் சொல்லிடும் வாயினன்.

பண்டிதர் கொண்ட தமிழினை—நாட்டில்
பாமர ரும்பெறச் செய்தனன்
பெண்டிர் நிமிர்ந்து நடக்கவே—அ
பேத வாதங்களைப் பேசினன்.

தீரன் அறிவிற் சிறந்தவன்—புதுத்
தீர்க்க தரிசி வரகவி
வீர சுதந்திர சக்தியே—இவன்
வேடம் புனைந்ததென் றேதுவோம்.

மங்கிக் கிடந்த தமிழுக்கே—மறு
மலர்ச்சி வேகம் அளித்தனன்..
பொங்குக பாரதி யின்புகழ்—அவன்
போற்றிய செந்தமிழ் வாழ்கவே!

—சுத்தானந்த பாரதியார்.